

# நாகம் பூசித்த
# ஸ்ரீ நாகபூஷணி அம்மன்


சக்தி

உ

அம்பாள் துணை







# நாகம் பூசித்த ஸ்ரீ நாகபூஷணி அம்மன்

வெளியீடு–

அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு

# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
# நயினாதீவு
## தற்போதைய அறங்காவலர் சபை உறுப்பினர்கள்

01) திரு.கா.ஆ.தியாகராசா - தலைவர் (பரம்பரை)
(இளைப்பாறிய பிரதேசசெயலர்/உதவி அரசாங்க அதிபர்)

02) திரு.கு.சரவணபவானந்தன் J.P, B.A, PGD. IN. EDU,
செயலாளர் (பரம்பரை)

03) திரு.க.ஜீவசீலன் - பொருளாளர்

04) திரு.க.நாகேஸ்வரன் J.P, M.A, (பரம்பரை)

05) திரு.க.உருத்திரகுமாரன் J.P,B.A PGD. IN. EDU

06) திரு.சி.தனபாலசிங்கம்

07) திரு.இ.யோகநாதன்

08) திரு.ச.தருமராசா

09) திருமதி.த.சபாநாதன்

10) பரம்பரை வெற்றிடம்

11) மகாசபை வெற்றிடம்

(12) மகாசபை வெற்றிடம்

# நாகம் பூசித்த
# ஸ்ரீ நாகபூஷணி அம்மன்

1ம் பதிப்பு:- 1990
பிரதிகள் :- 5000
திருமகள் அழுத்தகம் சுன்னாகம்

2ம் பதிப்பு:- 2003
பிரதிகள் :- 2000
விவேகானந்தா அச்சகம்,யாழ்ப்பாணம்

3ம் பதிப்பு:- 2008
பிரதிகள் :- 1000
விவேகானந்தா அச்சகம்,யாழ்ப்பாணம்

வெளியீடு
அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு

# பதிப்புரை

நாகம் பூசித்த நயினை நாகபூஷணி என்ற நாமத்துடன் மூன்றாம் பதிப்பாக வெளிவரும் இந்த நூலுக்கு பதிப்பரை கட்டாயம் இருக்க வேண்டும் என்ற படி அண்ட கோடி சராசரங்களையும் ஒரு தலையில் சுமந்து அருள் சுரக்கும் அன்னை சக்தி பீடங்களில் நாகஇரத்தின பீடமெனப்படும் நயினையிலே புவனேஸ்வரிபீட நாயகியாக எழுந்தருளி கோடானு கோடி மக்களுக்கு அனுக்கிரகம் செய்து வருகின்றாள். அருவம் உருவம் அருவுருவம் என்ற நிலைகளில் நின்று அருள் சுரக்கும் இத்தாயின் மகத்துவம்பற்றி காலத்துக்குக் காலம் பல ஆய்வாளர்களும் அறிஞர்களும் பாவலரும் பண்டிதரும் பல பல நூல்களையும் ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளார்கள்.

இயற்கையான நாகரூப வடிவததுடன் கைபுனைந்தியன்றா கவின்பெறு தோற்றத்துடன் இன்று நாம் கண்டு தொழும் தோற்றம் ஐந்தாயிரம் வருடங்கட்கு முந்திய சிந்து வெளிப்பகுதியில் கிடைத்த சுடுமண் பெண் தெய்வ உருவமாக இருக்கலாம் எனவும் கூறலாம். யாக சங்காரம் என்று நடைபெற்றதோ அன்று தோன்றியவைதான் சக்திபீடங்கள்.

சென்ற 22-03-2008ல் எமக்கு வங்காளதேச பவானிபீட இந்து கலாச்சார புனர்நிர்மாண சபையில் இருந்து ஒரு அழைப்பிதழ் கிடைத்தது. "தமது நாட்டில் அதி சிறப்பாக இவ்வருடம் கொண்டாடப்பட இருக்கும் மங்களகரமான பூரணை விழா (The Great Maghi Purnima 1414 B.S) 21-02-2008ல் நடைபெற இருப்பதாகவும் ஸ்ரீலங்காவில் அமைந்துள்ள சக்தி பீடத்தின் சார்பாக எம்ம கலந்து கொள்ளும்படி அழைப்பிதழ் வந்தது. இந்த அழைப்பிதழில் 48வது சக்தி பீடமாக எமது அன்னையின் பீடம் குறிப்பிடப்பட்டுள்ளது. எழுதப்பட்டுள்ள விலாசம் இது தான் - MAHAPITH SHAKTI PEETHAS NAIRATIVU - JAFFNA -SRILANKA. இதில் ஆச்சாரியம் இத்தபால் உறையில் எந்த விதமன புறக்குறிப்பும் இல்லாமல் 05-02-2008 பங்காளதேஸ் 25ரூபா தபால் முத்திரையுடன் 22.03.2008 இல் எனது கரத்தில் கிடைத்தது. மறு நாள் நயினாதீவு தபாலதிபர் நேரடியாக வந்து பங்காளதேஸில் இருந்து வந்த கடிதம் உங்களுக்குரியது தானா? எனக் கேட்டர்.எவ்வித தயக்கமும் இன்றி ஆம் எங்கள் சக்திபீடத்திற்குரியது தான் என்று கூறினேன். அன்னையின் மகத்துவம் எழுதி அடங்காது கூறிமுடியா அனுபவித்து தான் தேற முடியும். இந்த வகையில் கையடக்க நூலாக

இந்த பதிப்பு வெளிவந்தாலும் இயன்ற மட்டும் இன்றைய சமுதாயம் தெரிந்து தெளிந்து கொள்ளகூடிய விடயங்களை உள்ளடக்கி வெளி வருகின்றது என்பது உண்மை.

இப்பதிப்பில் 2003ன் பிற்பகுதிவரையான செயற்பாடுகளை குறிப்பிட்டு காட்டி உள்ளேன்.108 அடிக் கோபுர வேலையை தொடரமுடியாமல் தடை செய்தார்கள். 1964ல் சாதீயம் அற்ற சூழல் முடிவானது. ஆனால் 2004ல் சாதீய அடிப்படையில் புவனேஸ்வரி மண்டபம் வலுக்கட்டாயமாக ஆக்கிரமிக்கப்பட்டு இப்போது ஒரு சமூகத்தவர் தான் அங்கு தங்கலாம் என்ற நிலையை உருவாக்கிவிட்டு சென்று விட்டார்கள் சிலர் இன்று ஆலயச் சூழலில்சாதியமா? என்ற ஒரு வினாவிற்கு விடை கூற முடியாத நிலை உருவாகிவிட்டது என்பதை சுட்டிக்காட்ட-வேண்டிய நிலை அறங்காவலர் சபைக்கு உருவாகி உள்ளது என்பதை கூறித்தான் ஆக வேண்டிய நிலை. இவ்வாறு இடர் செய்வார் செயலால் 2003ல் ஆரம்பிக்கப்பட்ட நூலகமும் அரும் பொருள் காட்சியகமும் வேலைகள் பூர்தியாகாமல் தடைப்பட்டது. மீண்டும் 2007ம் ஆண்டு ஆடிமாதம் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு யாவும் பூர்த்தி செய்யப்பட்டு 06.02.2008ல் மிகச்சிறப்பான முறையில் திறப்பு விழாவைச் செய்து கொண்டாடி அபிராமிப்பட்டர் விழாவையும் சிறப்பாக செய்து எமது பணிகளை ஆரம்பிக் க அன்னை அருள் கிடைத்து.

இன்றைய இளைய சமூகம் அம்பாளின் ஆலய வரலாற்றினை இந்த நூலை வாங்கி படித்து தெரிந்து தெளிவு பெறுவார்கள் என்ற நம்பிக்கையுடன் குறைந்த விலையில் இதனை வழங்க வேண்டும் என்று கருதி வெளியிட்டு வைப்பதில்அகமகிழ்ந்து கொள்வதோடு இதனை வாங்கி பயன் பெறுவார்கள் என்றும் குறுகிய காலத்தில் இந்த நுலை சிறப்பாகப் பதிப்பித்து உதவிய யாழ்ப்பாணம் விவேகானந்தா அச்சகத்தாருக்கும் எமது சபையின் சார்பாகா நன்றியைக் கூறிவைக்கின்றேன்.

"தாயே ஆகி வளர்தனை போற்றி"

இங்ஙனம்
அன்னையின் சேவையில்
ஆ.தியாகராசா
தலைவர்
அறங்காவலர் சபை

# பூர்விக இலங்கை

இலங்கை ஒரு சிறு தீவு. உலகப்படத்தை நாங்கள் உற்று நோக்கினால், இலங்கைத்தீவு ஆசியாக் கண்டத்தில் பாரத நாட்டிற்குக் கீழே ஒரு சிறு புள்ளியாகவே காட்சியளிக்கின்றது. எனினும், கீழைத்தேசத்திற்கும் மேலைத்தேசத்துக்குச் செல்லும் பாதையில் கேந்திரத்தானத்தில் இலங்கை இருக்கின்றமையால், இது சரித்திரப் பிரசித்தி வாய்ந்த பூர்விக நாடாக விளங்குகின்றது. இந்நாட்டில் பண்டைக்காலத்தில் வாழ்ந்த நாகர், இயக்கர், வேடர், தமிழர், சிங்களவர் முதலிய குழுவினரும், இதனைக் காலத்திற்குக் காலம் தரிசித்த பேர்பெற்ற யாத்திரிகரும், இதனை வென்று ஆட்சி புரிந்த சோழர், பாண்டியர், சீனர், பல்லவர், நாயக்கர், போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் முதலியோரும், இத்தீவில் இப்போது வாழ்ந்துவரும் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், டச்சுக்காரர், மலாயக்காரர், மலையாளத்தார் முதலியோருந் தத்தம் மொழிக்கேற்ற பெயர்களை இலங்"கைத் தீவுக்கு இட்டு வழங்கினர். இவ்வாறு பல மொழிகளிலும் இலங்கைக்கு இடப்பட்ட பெயர்கள் 130 க்கு மேல் உண்டு. எனினும் ஈழநாட்டிற்கும் தமிழ்நாட்டுக்கும் உள்ள தொடர்பினைக் குறிக்கும் ஒரு சில பெயர்களை மட்டும் ஈண்டெடுத்துக் காட்டுவோம்.

# குமரிக்கண்டம்

தென்னாடு உலகின் பழம் பெரும் நாடுகளில் ஒன்று என்பதனைப் பன்மொழிப் புலவர் **திரு.கா.அப்பாத்துரைப் பிள்ளை** அவர்கள் தாம் எழுதிய **தென்னாடு** என்னும் நூலில் தக்க சான்று காட்டி நிறுவியுள்ளார். இந்த ஆராய்ச்சி நூலில் இருந்து ஒரு சிறு பகுதியை மட்டும் ஈண்டெடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

தென்னாடு உலகின் பழம் பெரும் நாடுகளில் ஒன்று என்பது மட்டும் அன்று. அது இயற்கையன்னையின் முதல் மாநிலக் கன்னியாகவும் இருந்தது. இமயம் உண்டாவதற்கு நூறாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பும் சிந்து கங்கை ஆறுகளும் அவற்றின் சமவெளிகளும் தோன்றுவதற்குப் பன்னூறாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரும் தென்னாடு ஒரு முழுமாநிலமாகவே இருந்தது.

தென்னாட்டின் தென்பாலுள்ள மா கடலில் பல தீவுகள் இருக்கின்றன. இப்பெருங்கடல் முன்பு தென்னாட்டின் தொடர்ச்சியான ஒரு மாபெருங் கண்டமாயிருந்தது. தென் ஆபிரிக்கா, பர்மா, மலாயா, கிழக்கு இந்தியத் தீவுகள்,ஆஸ்திரேலியா, வடமேற்கு அமெரிக்கா ஆகிய நிலப் பகுதிகள் இக்கண்டத்துடன் முன்பு ஒட்டிக் கிடந்து பின் பிளவுபட்டுச் சிதறிப்போயின என்று மண்ணூலார் குறிக்கின்றனர். இம் மாபெரும் நிலப்பகுதியைத் தமிழ் மரபு குமரிக்கண்டம் என்று வழங்குகின்றது. ஆராய்ச்சியாளர் இதனை "இலெமூரியா" என்று குறிக்கின்றனர். உயிரினங்கள் முதன் முதல் இங்கேயே தோன்றின.... ..... தென்னாடு நில உலக வளர்ச்சி, உயிரின் வளர்ச்சி, மனித இன வளர்ச்சி ஆகிய இயற்கையின் பல படிமுறை வளர்சசிகளைப் படலம் படலமாகத் தொகுத்து எடுத்துக்காட்டும் ஒரு பெருங்காவிய ஏடாக திகழ்கின்றது.

(தென்னாடு-பக்.6-8)

## கடல்கோள் சில

பண்டை ஞான்று இலங்கையானது தமிழ் நாட்டின் ஒரு பகுதியாய் இருந்ததென்பதே சரித்திர ஆராய்ச்சியாளர் துணிபு. அங்ஙனமாயின் இந் நாட்டின் பழம் பெரும் குடிகள் திராவிடவகுப்பினர் என்பது அவர் கருத்து. கந்தபுராண காலத்தில் சூரபத்மன் ஆட்சி புரிந்த பொழுது, கார்திகேயப்பெருமான் இந்தநாட்டிற்கு வந்த வரலாற்றைக் கதிர்காமம் என்னுந் திருத்தலம் இன்றும் நினைவூட்டிக் கொண்டிருக்கின்றது என்பர் சேர் பொன்.அருணாசலம் அவர்கள் களுகங்கைக் கடலோடு கலக்கும் இடத்தின் ஒரு கரை வேலபுர மெனவும், மற்றொரு கரை தேவசத்துரு கரை (Desastra Kalutara) தேசஸ்தரதுறையெனவும் வழங்கப்படல் இப்பேரினை நினைவூட்டுகின்றதென முற்கூறிய அறிஞர் குறிப்பிட்டிருக்கின்றார்.

இங்ஙனம் ஒரு பெருங் கண்டத்தின் பெரும் பகுதியாயிருந்த இலங்கையானது
பன்முறை கடற்கோட்பட்ட தென்பது சரித்திர நூல்களிற் றெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அன்றியும் கடலடுத்த நாடுகளுக்கெல்லாம் கடற்கோள் வரலாறு ஏற்படுதல் இயல்பு. எனவே இலங்கைக்கும் பல கடற்கோள்கள் ஏற்பட்டிருக்கும் மென்பது மறுக்காது ஒப்பக் கூடியதேயாம். அங்ஙனமானால் இப்பொழுதுள்ள இலங்கையின் நிலப்பரப்பு இன்னும் பன்மடங்கு

விரிந்திருக்க வேண்டுமென்பது சொல்லாமலே பெறப்படும். ஆழிசூழ் இலங்கை ஆயிரக்கணக்கான மைல்களுக்குப் பரந்திருந்ததென்ப. இராவணனுடைய ஆட்சியின் பின்னர் ஒரு கடற்கோள் கூறப்பட்டிருக்கின்றது. இராம-ராவண யுத்தம் கி.மு.2387 அளவில் நிகழ்ந்ததெனச் சிங்களச் சரித்திரங் குறிப்பிடுகிறது. சேர் வில்லியம்ஸ் ஜோன்ஸ் அவர்கள், இந்நிகழ்ச்சி கிமு.1810 அளவில் எனக் குறிப்பிட்டிருக்கின்றார். பந்துவாசன் காலத்திலும்(கி.மு 500) களனி திஸ்ஸன் காலத்திலும் (கி.மு 200) இத்தீவுக்குக் கீழ் மேற்றென் பாகங்கள் கடலுள் ஆழ்ந்தன எனச்சிங்களச் சரித்திரங் கூறுகின்றது. இன்னும் கடையம்பொத்த லங்காவிஸ்தாரய (Kadaimpota,Lanka Vistaaya) என்னும் நூல்களாற் களனி என்னும் இராசதானி கடலிருந்து 28 மைல் தூரத்தில் இருந்ததென அறியக்கிடக்கின்றது. 1,00,000 பட்டினங்களையும், 970 நெய்தற்பாக்கங்களையும், 470 முத்துக் குளிப்பவர் இருந்த கிராமங்களையும், எல்லாமாக இலங்கை நாட்டின் 12இல்11 பாகத்தைக் கடல் மூடிற்றென இராசாவலி எனும் சிங்களநூல் குறிப்பிடுகின்றது.

இலங்கையின் கீழ்மேற் றென்பகுதிகளே அகழிவாய்ப் பட்டனவென்பது மிகப் பொருத்தமான கூற்றேயாம். இலங்கையின் தென்கீழக் கடலிலிருந்து ஒளிகாலும் கலங்கரை விளக்கம் கட்டப்பட்டிருக்கும் கற்பாறை(/great Bass Light House) இன்றும் இராணுவக் கோட்டை என்றே அழைக்கப்படுகிறது. இன்னும் மாணிக்கவாசக சுவாமிகளும், ஆர்கலிசூழ் "தென்னிலங்கை" யெனக் குறிப்பிட்டிருத்தலும் அவதானிக்கற்பாலது. "தென்" எனுஞ் சொல் தென்பாண்டி நாடென்றாற்போல திசையை குறித்துநின்றது எனக் கோடல் நேர்பொருள். இராவணன் திருக்கோணேசர் கோவிலை நிறுவினான் என்பது கன்ன பரம்பரை இராமர் இராவணனுடன் போர்தொடுப்பதற்கு முன்னர் முனீசுவரத்தில் வணங்கினார் என சேர் அருணாசலம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார் சேது பந்தனத்திற்கும் இராமரணை என்ற பெயருண்மையும் ஈண்டு நினைவு கூர்தற்பாற்று. சீதாப்பிராட்டியின் பெயர் நுவரேலியாவிற்கும் ஹக்கலைக்குமிடையில் உள்ள சீத்தலவா (சீதை வெளி) சீதால(சீதை அருவி ) சீதாகுண்ட (சீதை குண்டம்) எனும் இடப்பெயர்களாலும் பொய்ச்சீதை உருவத்தை இந்திரசித்து எரித்த இடமெனக் கருதப்படும் சீதாவாக்கைஎனும் இடப் பெயராலும், இலங்கையில் இன்றும் நின்று நிலவுகின்றது. இரவணனுடைய மனைவி மண்டோதரி மாணிக்கவாசக

சுவாமிகளாற் புகழப்பட்டிருத்தலும் ஈண்டு நினைவு கூர்தல் நன்று. இன்னும் இராமாயணக் கதைகள் பலவாறாக மலைநாட்டிற் கேட்கப்படுகின்றன. இவற்றுட் சிலவற்றை மேஜர் போர்ப்ஸ் என்னுஞ் சரித்திர அறிஞர் தொகுத்துக் கூறியிருக்கின்றார். இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கை வேறு, இப்பொழுது இலங்கையென அழைக்கப்படும் தீவு வேறு என வாதிப்போருமுளர். அத்தகையார் இலங்கையின் ஒரு பாகம் அழிவாய்ப்பட்டதனை நினைவு கூர்ந்து இத் தீவின் மலைநாட்டினைச் சுற்றிப்பார்பார்களாயின் தங்கொள்கையிற் றளர்ச்சியுறுவர் என்பதிற்கையமின்று.

இப்பொழுது இலங்கை என்று வழங்கும் இந்நாடே இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கை எனத் தீர்மானிக்கலாம் என்பதனைத் தக்க சான்றுகளுடன் நிருபித்துள்ளார். யாழ்ப்பாணம் பரமேஸ்வரக் கல்லூரித் தலைவரும், தலைசிறந்த ஆராய்ச்சி அறிஞருமாகிய திரு.சு.நடேசபிள்ளை அவர்கள். இவ்வறிஞர் இலங்கைத் தமிழ் விழா மலரில் எழுதிய "இலங்கை ஆற்றுப்படை" என்னும் ஆராய்ச்சிக் கட்டுரையினைப் பார்க்க. இலங்கைக்குப் பல பெயர்கள் இருப்பது போல உலகில் வேறேந்தத் தீவுக்கும் இருக்குமெனக் கூறமுடியாது. இலங்கையின் பெயர்களை அறிந்து கொள்ளுதல் அதன் சரித்திரத்தை அறிதற்குப் பெருந் துணையாக இருக்குமாதலின், அத்தகைய பல பெயர்களை முதற்கண் குறிப்பிடுவாம்.

## இலங்கையெனும் பெயர்

இலங்கையெனும் பெயர் எக்காரணம் பற்றி உண்டாயிற்றென இக்காலத்தில் துணிந்து கூறமுடியவில்லை. இச்சொல் இலட்சம் அல்லது இலக்கம் எனும் சொல்லின் மருவெனக் கொண்டு, இத்தீவுக் கருகிலிருந்த இலட்சம் தீவுகள் அழிவாய்ப் பட்டன எனும் கன்ன பரம்பரை யொன்றினை நினைவூட்டுகின்றதென்பர் மேஜர் போர்ப்ஸ். இலக்கம் எனும் சொல் ஒளி யெனவும் பொருள் படுதல் "எல்லேயிலக்கம்" (தொல்,உரி) எனும் நூற்பாவால் இனிது துணியப்படும். ஒளியென் ஒரு பொருள் படும் எல்,இலக்கம் எனும் இரு சொற்களினின்றும் முறையே ஈழம் என்பனவும், இலங்கை, லங்கா என்பனவும் பிறந்த இய்பபு ஈண்டு நோக்கி இன்புறத்தக்கது.

இலங்கையெனும் சொல்

"கடல்சூ ழிலங்கைக் கயவாகு வேந்தன்"
எனச் சிலப்பதிகாரத்திலும்,
"இலங்கா தீவுத்துச் சமனொளி யென்னுஞ்
சிலம்பினை யெய்தி"
என மணிமேகலையிலும்
"தொன்மா விலங்கைப் பெயரொடு பெயரிய
நன்மா விலங்கை"
எனச் சிறுபாணாற்றுப் படையிலும்,
"இலங்கையீ ழத்துக் கலந்தரு செப்பு"
எனப் பெருங்கதையிலும் வந்துள்ளது.

# இரத்தினத் தீவும்

இவ்விலங்கை கடற்கால்வாயால் இருபெருங் கூறாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முன்னது வடபாற் கண்ணது, பின்னது தென்பாற் கண்ணது. இரத்தினத்தீவம் எனுஞ்சொல், **இரத்தினத் தீவத்தோங்குயர் சமந்தத் துச்சி மீமிசை..** என **மணிமேகலையில்** வந்துள்ளது. இத்தகைய பாகுபாடின்றி இலங்கை முற்றினையும் குறித்த பெயராகக் கருதுவாரும் உளர். சமந்த கூடத்திற்கு அண்மையில் இரத்தினபுரி யெனுஞ் சிறந்த நகரம் இருத்தலும் ஈண்டு நினைவு கூர்தற் பாற்று. இலங்கை இரத்தினக் கல்லுக்குப் பெயர் போன இடமாகும்.

# ஈழம்

ஈழம் எனும் பெயர் இலங்கை முழுவதற்கும் பொதுவாகவும்,வடபாற் கூறாகிய யாழ்ப்பாணத்திற்குச் சிறப்பாகவும் வழங்கப்பட்டிருக்கின்றது. இப் பெயர்போல யாழ்ப்பாணத்திற்கு இடப்பட்டதாயிருந்து பின்னர் இலங்கை முழுவதற்கும் வழங்கிற்றுப்போலும், இங்ஙனமின்றி முதன் முதலில் இலங்கை முழுவதற்கும் உரிய பெயராக இயிருந்து நாளடைவில் அதன் ஒரு கூற்றுக்கு வழங்கப்பட்டதாகக் கொள்ளினும் கொள்ளலாம். **'இலங்கை ஈழத்துக் கலந்தரு செப்பு'** எனப் பெருங்கதையில் வரலால் இலங்கையின் ஒருபகுதி ஈழமெனுங் கொள்கை வலியுற்றமை காண்க. இன்னும் **'ஈழத்துணவும்'** எனப் **பட்டினப்பாலையில்** இச்சொல் ஆளப்பட்டிருக்கிறது. பழஞ்சிங்களம் "எலு" என வழங்கப்பட்டு வந்ததென்பது சிங்களவர்க்கும் உடம்பாடு. எலு என்பது தமிழின் பாற்பட்ட தொன்றெனச்

சொற்பிறப்பாராய்ச்சி வல்லுநர் **சுவாமி ஞானப்பிரகாசர்** குறிப்பிடுகின்றார். அவர் கூறுவது:- பாரத கண்டத்தோடு ஒருகாலம் இணைந்திருந்ததாகிய நம் இலங்கையிலே ஆதிதொட்டு தமிழின் ஒரு பாதகமே பேசப்பட்டது என்ற உண்மை எல்லோருக்கும் சம்மதம். இங்கே பாகதம் என்றது ஒரு பாஷையின் சிதைந்த உருவத்தை ........அதுவே மேலும் திரிந்து எலு எனப்படுகின்ற சிங்களம் ஆயிற்று என்பது எனது கொள்கை.

ஈழம் என்னுஞ் சொல்லடியாகவே இலங்கையின் ஏனைய பெயர்கள் தோன்றின வெனக் காலஞ்சென்ற வழக்கறிஞர் பிறிற்றோ அவர்களும் முதலியார் இராசநாயகம் அவர்களுங் குறிப்பிட்டிருக்கின்றார்கள். முதலியார் அவர்கள் கூறுவதாவது "அக்காலத்தில் இலங்கையில் வசித்த நாகரும் இயக்கரும் "எலு" என்று இக்காலத்திற் பிழைப்பட்ட வழங்கப்படும் ஈழ வென்னும் நிறைவற்ற பாஷையே பேசி வந்தார்கள். அதனால் இலங்கைக்கு ஈழம் என்றும், ஈழமண்டலம் என்றும் பெயர் உண்டாயது. ஈழம் சீழம் என மருவிச்சிஹழம்,சிங்களம் என மாறியது.சீழம் என்னும் பெயரிலிருந்தே சீழம்தீப், சேரண்டிப் என்னும் அராபிய நாமங்களும், சிலாங், சிலோன் என்னும் மேலைத் தேயத்தவரிட்ட பெயர்களும் வந்தன. "சிஹ" வென்னும் பாலிப்பாஷைச் சொல் "சிங்கம்" என்னும் பொருளையுடையதான படியால், சிகழல், சிங்களமாக மருவியது அதிசயமல்ல. விஜயன் மிருகேந்திரனாகிய ஒரு சிங்கத்தின் வழித் தோன்றலானபடியால், அவன் வழித்தோன்றினோரும் சிங்களவர் என்றழைக்கப்பட்டார்கள் என்னும் மகாவமிசக் கூற்று உண்மையுமன்றிச் சிங்கள சாதியாருக்கோர் பெருமையுந்தராத வெற்றுரையாதல் காண்க"5 இனி, சிறீ ஈழம், சிவறளம், சிங்களம் ஆயிற்றெனக் கொள்வாரு முளர். இந்த ஈழத்திற்கும் சுமேரியாவிலுள்ள ஈழத்திற்குந் தொடர்புண்டென்பது நிச்சயிக்கப் படுமாயின்., தமிழர் நாகரிகம் பரவியிருந்தமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாதல் கூடும்.

தமிழர் வாழ்ந்த நாடு தமிழகம் என்றாயினாற்போல ஈழர் வாழ்ந்த நாடு ஈழமென்றாயிறாதல் வேண்டும். சேரர், சோழர், பாண்டியர் என்ற தமிழரின் ஒவ்வோர் இனம் போல, ஈழரும் மற்றோரினமாய் இருத்தல் கூடும். இவ் வீழர்கள் தாம் இலங்கையில் நாகர்களுக்குகுஞ் சிங்களர்களுக்கும் முன்பு இருந்த பழங்குடி மக்கள் ஈழர் என"னுஞ் சொல்லையே ஆரியர்கள் இயசர் என வழங்கினார்கள். ஆரியர்களுக்கு ழகரவெழுத்தொலி

இல்லாமையால் அதக்கியந்த ஷகரமாக்கி இயசர் எனத் திரித்து வழங்குதல் கூடும். இவ் வீழர் தலைவன்தான் மிகப் புகழ்பெற்ற இராவணன் என்பவனும், குவேனியும் இவ் வீழர் தலைவியே. இவ் வீழர் என்னும் பெயர் சரித்திரவாராச்சி யுடையார்க்குப் புலனாகாது போனது வருந்தத்தக்கது. ஈழர்கள் கல்வி, கைத்தொழில், வேளாண்மை முதலியவற்றில் சிறந்திருந்து வாந்தவர்களெனப் பழய நுல்களாள் உணரவருகிறது. **'ஈழத்துணவும்'** என்னும் பட்டினப்பாலையான் வேளாண்மை புலப்படும். **'ஈழத்துச் செப்பு'** எனும் பெருங்கதையானும், **'ஈழவக்கத்தி'** எனும் **நச்சினார்க்கினியார்** எடுத்துக்காட்டானும் விஜயன் கண்ணுற்ற பொழுது ஈழர் தலைவி குவேனி நூல்நூற்றுக் கொண்டிருந்தனளென்னும் மகாவம்சக் கூற்றானும் கைத்தொழிற்றிறமை பெறப்படும். ஈழக் குலச்சான்றார் வரலாற்றால் ஈழரது போர்ப்பயிற்சியும், ஈழத்துப் பூதன்றோவனார் வரலாற்றால் ஈழரது கவிப்புலமையும் பெறப்படுகின்றன.

இனி ஈழம் என்பது பொன், கள், கிழக்கு எனப் பல் பொருள் தந்து நிற்றலின் இப் பொருளைக் கருத்தில் வைத்துப் புராணகாரர் பல கதைகளை உண்டாக்கிவிட்டனர். பொன்மலையெனப்படும் மேருவின் ஒரு சிகரமே ஈழநாடாயின தென்பது பௌராணிகர் கூற்று. ஈழுவர் எனுங் குடியினர் இந்தியாவில் காணப்படலால், அவர்கள் இத் தீவினின்றும் இந்தியாவிற் குடியேறியவர்களாய் இருத்தலுங் கூடும். ஈழ நாட்டிலிருந்து தமிழ் நாட்டிலும், மலையாளத்திலும் குடியேறியவர்கள் 'ஈழவர்' எனவும், திருநெல்வேலியிற் குடியேறிய ஈழத்துப் பிள்ளைமார் 'இல்லத்துப்பிள்ளைமார்' எனவும் வழங்கப்படுதலும் ஈண்டு நினைவுகூர்தற்பாற்று.

## மும்முடிச் சோழ மண்டலம்

இலங்கையின் வடபகுதியை வெற்றி கொண்ட ராஜராஜன் தனது நாட்டுள் ஒரு பகுதியாக இதனைக் கருதி இதற்கு மும்முடிச்சோழ மண்டலம் எனும் பெயரிட்டனைத்தான் என்பது தென்னிந்திய சாசனங்களால் அறியக்கிடக்கின்றது.

## சிங்களம் அல்லது சிங்களத் துவீபம்

சிங்களர் வாழும் இடம் என்பது இதன் பொருள். சிங்களம் எனும் தீவில் வாழ்ந்தவர்கள் சிங்களர் எனப் பெயர் பெற்றனர் என்பது வைபவ மாலையுடையார் கூற்று. இங்ஙனமன்றிச் சிங்களர்

எனும் மரபினர் வாழ் இடம் சிங்களமாயிற் றென்பாருமுளர். இடப்பெயர் ஆராய்ச்சி வல்லுநர் **திரு.ஞ.மு.குமாரசாமியவர்கள்,** 'சிங்களம்' எனும் சொல் சமஸ்கிருத மகாபாரதத்தில் வந்துள்ளதெனக் குறிப்பிபிட்டிருக்கின்றார். அங்ஙமாயின் சிங்களர் எனும் மரபினர் தோன்றுதற்கு முன்னரே சிங்களம் என்னும் இடப்பெயர் இருந்த்தல் வேண்டுமெனக் கருத இடமுண்டு.

மேலும் இவ்வறிஞர் கூறுவது: **சிம்ஹ** அல்லது **சிங்க** என்பது திரளானதானப் பெயர்களிலே தலைநிற்றலானும் மத்திய இந்தியாவிலும், மற்றுஞ் சிலவிடங்களிலும், ஆண்மக்காள் தம் இயற்கைப் பெயரோடு சிங்(சிங்கம்) என்னுஞ் சொல்லைச் சேர்த்து வழங்குவதாலும் அவ்வண்ணம் வழங்குஞ் சாதிகளிற் பலவற்றை வடதிராவிட ரெனவும், திராவிடக் கலப்புடையோ ரெனவும் ஆங்கிலக் கலைஞர் அறைதலானும், நாடகத் தமிழிலே சிங்கன் என்பதன் பொருள் குறவனாகையாலும்,விஷ்ணுவுக்குச் சிங்கேசுவரன் சிங்கப்பெருமாள், சிங்கதேவன்,நரசிங்கனெனும் நாமதேய முன்மையானும் இராவணன் மகன் முதலிய இராக்கதர் சிலரும், அசுரர் சிலரும் மற்றுஞ் சில தேந்தரும் சிம்ஹ எனுஞ் சொல்லைத் தனித்தேனும் வேறு சொல்லோ டோட்டியேனும் தம் பெயராகக் கொண்டிருந் தமையானம் சிங்வோ எனப் பெயரிய ஒரு சாதி கடாரத்திலே இருக்கின்றமையாலும் சிம்ஹ என்னும் வடசொற்கு அரசகுமாரன், தலைவன் நாதன் எனவும் பொருளுன்மையானும், சிங்கப் பட்டம் எனப் பெயரியவெரு பட்டம் பெரும்பாலும் வேளார்க் குண்மையானும், கேசத்தினாலேனும், முகத்தோற்றத்தினாலேனும், வீரசக்தியினாலேனுஞ் சிங்கத்தையொரு சாதியாரைச் சிங்கர் எனச் செப்புதல் தகுதியாதலனும், நாக வழிபாடுடைய மக்கட்கு நாகர் எனும் பெயர் அமைந்தவாறு, சிங்கதேவனை வழிபட்ட மாந்தர்குச் சிங்கர் எனும் பெயர் அமைதர் முறைமையாதலனும், சிங்களம் என்னும் ஸ்தானப் பெயரிலுள்ள சிங்க என்பது சிங்கள மகாவம்சத்திற் சொல்லிய மிருகேந்திரனைக் குறியாது, பண்டைய நாட் பரதகண்டத்தும் ஈழமண்டலத்தும், பரவியிருந்த (நாகரை யொத்த ஒரு சாதி நரேந்திரரையேனும், சிங்கேசுவரனையேனும் குறித்தது போலும்)

சிங்களவர் எனுஞ்சொல் கேளரர், போசளர், குந்தளர் என்றாற்போலும் ஆரியச் சொற்சிதைவாகிய இனப்பெயராய் இருத்தல் வேண்டும். போசன் மரபினர் போசாளர் குந்தன் மரபினர் குந்தளர்,கேரன்(சேரன்) மரபினர் கேளரர் எனப்பொருள்படுமாறு சிங்களர் என்பதும் சிங்கன் மரபினர் எனப் பொருள்படும். சிங்கன் என்னும் பெயர் பகையரசர்கள் ஆகிய யானைகளுக்குத் தான்

சிங்கம் போல்பவன் எனுங் கருத்தால் தனக்குத் தானே இட்டுக்கொண்ட பெயராதல் பொருந்தும். இங்ஙனமிற்றிச் சிங்கன் எனும் சொல் வந்த வரலாறு, உலகியலுக்கொவ்வாத புனைந்துரை வகையால் மகாவம்சத்திற் கூறப்பட்டு இக்காலத்து வழங்குகின்றது. சிங்களவர்கள் பெரும்பான்மைத் தமிழ்கலப்புடையர் என்பது அவரது மொழி நடையிலே தெரிந்து கொள்ளலால் சிம்ஹ என்பது சிங்க எனவருவதும், தேவநாம்பிரயதர்ஸ் என்பது தேவநம்யிதீசன் என வருவதும் தமிழ்க் கலப்பென்பதற்குச் சிறிதும் அய்யமில்லை (தேவநாம்பியதர்ஸ் என்பது மகதநாட்டரசன் அசோகச் சக்ரவத்தியின் பெயர்) சிங்களர் விஷ்ணுவையும் கரிர்காமக்கடவுளையும் பத்தினித் தெய்யோரவயும்(கண்ணகி) இன்னும் விழபட்டு வருகிறார்கள் அன்றியும் கண்டியில் ஆண்டு தோறும் நடக்கும் (PERAHERA) பேருவிழாவில் இத்தெய்வங்களே முதன்மை பெற்றிருந்தமை சரித்திர வாயிலாற் பெற்ற உண்மை.

இனி தமிழொழி பதினேள் நிலங்களுள் முதற் கூறப்பட்டிருப்பது சிங்களம். இதனை நன்னுல் உரை ஆசிரியராகிய மயிலைநாதர் எடுத்துக்காட்டி இருக்கிறார். அவர் கூறுவது:- தமிழொழி பதினேள் நிலமாவன: “சிங்களஞ் சேனகஞ் சாவகஞ் .......... தாமிவையே” என்பன. அருமணம், காம்போசம், ஈழம், கூவிளம், பல்லவம் என்பன முதலானவை இவற்றின் பாரியாயமும் அவற்றின் பேதமுமாய் இவற்றுள்ளே அடங்கும் என்க. இவற்றின் மொழிகளும் வந்தவழி அறிந்து கொள்க.

**‘கன்னித் தென்கரைக் கட்பளந் தீவஞ்**
**சீங்களங் கொல்லங் கூவிளமென்னு......’**

## தாபிரபன (Taprobane)

பண்டைக் காலத்துயவன(உரோம) கிரேக்க ஆசிரியர்களாய Oncscritus,Diodorus Siculus,Ovid,Strabo, Dionysius Periegetes Pomponius Mela, Solinus Poyhistor, Pliny முதலியவர்கள் இத்தீவு “தாபிரபன” எனும் பெயரால் அழைக்கப்பட்டதென அறிந்திரந்தார்கள். இது மிகவும் பழயதொரு பெயர். இச் சொல் (Tapravan) அல்லது (Tab - ravan) எனப் பிரிக்கப்பட்டு இராசணன் தீவு எனப் பொருள் படுமென்பர் ஒரு சாரார். இது தம்ப பன்னியெனச் சிங்கள நூல்களால் இத்தீவுக்கிடப்பட்ட பெயரின் மருவென்பர் பிறிதொரு சாரார்.

தம்பன்ன என்பதன் பொருள் செந்நிற முடையது என்பது. விஜயனும் அவன் பரிவாரமும் முதன் முதல் அத் தீவில் இறங்கியபொழுது களைபினாலும் அலுப்பினாலும் நடக்க சத்தியற்று தங்கள் கைகளை ஊன்றிக் கொண்டிருந்தார்கள் எனவும் தம் கைகள் செந்நிறம் படிந்தமை கண்டு "தம்பன" எனப் பெயரிட்டார்னளெனவும் மகாவம்சம் கூறும். இத்தகைய வெற்றுரைகள் பல சிங்கள மகாவம்சத்தில் உளவென்பதற்கு இ.்.தோர் எடுத்துக் காட்டாகும். தென்னிந்தியாவில் தாமிரபரணி ஆற்றுக் ககிலிருந்த தமிழர் இங்கு வந்து குடியேறிய பொழுது இத் தீவுக்கு இப்பெயரிட்டினர் என்பது சாலும். அன்றேல் தென்னிந்தியாவில் தமிழரைக் கண்ட பிறதேயத்தவர்கள் இங்கும் மகாவலி கங்கையையும் தமிழரையும் கண்ட பொழுது, இத்தீவுக்கும்அப்பெயரையிட்டளைத்தனரெனக் கோடலும் ஒன்று. இதுவே **சேர்.பொன் அருணாசலம்** அவர்களது கொள்கையாகும். இப்பொழுது பொதியின் மலையிலே பிறந்து கிழக்கோடி கொற்றகையிலே கலொடு கலக்கின்ற தாம்ரபரணியாறு முன்னொரு காலத்தில் அ.்.தாவது இப்பொழுதுள்ள கடல் கன்னியாகுமாரி முனைக்கு வடபால் இல்லாத பொழுது கொற்கைக்கும் கிழக்கே நிலத்தோடி வந்து இலங்கை வரையும் ஓடி இலங்கையினுள்ளும் சென்றதாதல் பற்றி அவ்வாற்றின் பெயரே பெயராக இலங்கைக்கு வழங்கினாரெனக் கொள்ளுதலுஞ் சான்று கிடைப்பின் உறுதிப்படும்.

## பாலாசி முண்டு (Palaesimoundu)

பிற்காலத்துக் கிரேக்கரும் உரோமரும் இத்தீவினைப் பாலாசி முண்டு எனக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதைத் தமிழ்ச் சொல் எனக் கொள்வர் முதலியார் இராசநாயகம் அவர்கள். பழய சீழமண்டலம் சீலமண்டலம்-ஈழமண்டலம் இவற்றிலிருந்து ஏனைய பெயர்கள் வந்த வரலாற்றை முன்னர்க் குறிப்பிட்டுள்ளாம். ஈண்டுக் காண்க. பரசிறீ மண்டலம் என்பதன் மருவென்பர் வின்சென்ற் ஆசிரியர். இ.்.து ஓர் பட்டியத்தின் பெயரெனவும் இலங்கையின் வடமேற்குப் பகுதியில் இருந்ததெனவுங் கூறுவர் **பீறிடாம்** ஆசிரியர்.**மேஜர் வோர்ப்ஸ்** எனும் சரித்திர வல்லுநர் இச் சொல் சிங்கள மொழியினின்றும் பிறந்ததெனக் கொண்டு-பலாயசீய மண்டலம்-கீழ் நாடு எனப் பொருள்படும் என்பர்.Pali-Simanta -Palai Simundu பாலி சிமந்த எனும் வடமொழிப் பதத்தினின்றும் போந்த பெயரெனவும், தருமநூற்றலைமை எனப்பொருள்படுமெனவும்

பறிதொருவர் கூறியுள்ளார். பாலாவி மன்று என்பது பாலாவி ஓடும் வெளியிடம். பாலாவி மன்று என்பது பாலாசி முண்டெனக் கிரேக்கர்கள் வழங்கியி ருக்கவேண்டும் என்பர் சிங்கருணாலய பாண்டியப் புலவர் அவர்கள். பாலாவிமன்று என ஓரிடத்தின் பெயராக இருந்ததனையே இலங்கை முழுதிற்கும் பெயராகக் கிரேக்கர்கள் வைத்துக்கொண்டார்களாதல் வேண்டும். இந்தியா என்பதும் கிரேக்கர்கள் அவ்வாறே இட்ட பெயரென்பது ஈண்டு நினைவுகூர்தற் பாற்று. மன்று மண்டு எனத்திரிந்து முண்டெனச் சிதைந்த தென்றால் பொருந்தும். நீலகிரியைச் சார்ந்த மன்று எனும் பல ஊர்களின் பெயர்கள், உதக மண்டு என்றாற்போல மண்டென வழங்குவது கண்டுகொள்க.

## சாலிக (Salika)

"தாபிரபன எனப் பழம்பெயர் பூண்ட தீவு இப்பொழுது சாலிக என அழைக்கப்படுகின்றது" எனத் தொலமி என்பவர் எழுதியிருக்கிறார். சலாவ அல்லது சாலியர் என்னும் ஒருவகைச் சாதி இலங்கையிலுண்டு. இவர்கள் இலங்கைக்கே சிறப்பாகவுரியவர்கள். முன்னொரு காலத்தில் கூலியாட்களாகவும் பின்னர் கறுவாப்பட்டையுரிக்கும் தொழி லாளர்களாவும் வாழ்ந்து வந்தார்கள். இவர்களுடைய வரலாறு பலபடத் திரித்து வழங்கப்படுதலின், உண்மை வரலாற்றுப்பகுதி தெரிந்திலது. இனி சாலிய என்பது சீலம் அல்லது சுழம் எனும் சொல்லின் மருவென்பாருமுளர். மலை யாளத்தார் இதனை "சைலத்த" எனப் பெயரிட்டழைத்தனர்.

## சலாபதீபம்

சலாபம் என்பது முத்துக்குளித்தல் எனப்படும். இப் பெயரால் இத்தொழிற் சிறப்பு மிகுந்த பட்டினமும் இலங்கையிலுண்டு. முத்துக்களாலும் வாசனைத் திரவியங்களாலும் இலாபத்தை உண்டாக்கித் தன்னகத்தே பிறதேயத்து வணிகர்களை இழுக்கும் ஆற்றல் வாய்ந்த தீவு என்பது இதன் பொருள் போலும்.

செறண்டிப் (Serendib) Selen-divis

அராபிய ஆசிரியர்கள் Edirisi, Soleyman, Abou-Zeyn முதலியோர் இட்டழைத்த பெயர் "செறண்டிப்" என்பது. டிவிஸ்(Divis) என்னும் சொல் தீவு என்னும் பொருளது. இதுவே

பின்னர் மருவி Siren Zeilan Ceylon சிலோன் என்றாயிற் என்பர் ஒரு சாரார்.

முதற் புத்தராகிய காகுசந்தன் காலத்தில் இத்தீவு "ஒச்சதீவம்" எனவும், கோனகம்ம புத்தன் காலத்தில் "வரதுவீபம்" எனவும் காசியப்பன் புத்தன் காலத்தில் "மததுவீபம்" வழங்கப்பட்டுவந்ததென மகாவம்சம குறிப்பிடுகின்றது. புத்தருடைய விரிவான வரலாற்று நூல்களில் அவர் இலங்கைக்கு வந்த வரலாறு கூறப்படவில்லை எனக் கருதுகின்றனர். ஒருசில ஆராய்ச்சியாளர் ஒபிர், தர்ஷிஸ் எனவும், சாலமோன் அரசன் தனது கப்பற்படை மூலம் பொன், வெள்ளி,இபம், மயிற்றோகை முதலியவற்றைப் பெற்றானெனவும் நம்பப்படு கின்றது. சீயம் (Siam) தேசத்தவர் இதனைத் "தேவலங்கா" என்றழைத்தனர்.

## நாகத்தீவு

இயக்க வேந்தனாகிய குபேரன் இலங்கையில் ஆட்சி புரிந்தான் எனப் புராணங் கூறுதலால் இத்தீவு இயக்கதீவு எனப் பெயர்பெற்றது. இனி நாகர்கள் முன்னொரு காலத்தில் இலங்கையில் வாழ்ந்தமையால் இத்தீவு நாகத்தீவு எனவும் பெயர் பெற்றது.

அடிக்குறிப்பு:-

1.Ceylon-by any other Name by Walrus - Ceylon Daily News 29-11-56
2.Census Report for 1901-by Sri P.Arunachalam
3.Sketches of Ceylon History - by Sir P.Arunachalam
4.ஈழகேசரி 15-08-37
5.யாழ்ப்பாணச் சரித்திரம் -பக் 11-12
6.சிங்பூர்,விங்னபாத்து,சிங்கயிர்,சிங்கம்பட்டி,சிங்கநல்லூர், சிங்கபுரம்,சிங்காசனம்,சிங்கப்பூர்.
7.வடமாகாணத்துள்ள சில இடப்பெயர்களின் வரலாறு பாக்17-.18

## நாகர்

நாகர் என்ற வகுப்பினர் நாகரிக வளர்ச்சியுடையவராக இருந்தனர் என்பதற்குப் பல சான்றுகள் ஆங்காங்கு கிடைத்துள்ளன. எனினும் இவ் வகுப்பினரின் சிறப்பியல்புகளை விளக்கும் நூல் எதுவும் இதுவரை வெளிவந்ததாகத் தெரியவில்லை.இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஈழத்துப் பெருந்தமிழ் மகனாராக திரு.வி.கனகசபைப்பிள்ளை பீ.ஏ.பி.எல். அவர்கள் 1800 ஆண்டுகளுக்கு

முற்பட்ட தமிழகம் என்ற நூலினை ஈங்கிலேயரும் விரும்பி வாசிக்கத் தக்க சீரிய ஆங்கில நடையிலே இயற்றினார்கள். பன்மொழி புலவர் திரு.கா.அப்பாத் துரை எம்.ஏ.எல்.டி. அவர்கள் இதனை தமிழில் மொழி பெயர்த் துள் ளார்.

திரு.வி.கனகசபைப்பிள்ளையவர்கள் நாகர்களின் வரலாற்றை ஓரளவு தொகுத்துக் கூறியுள்ளார். இப் பேரறிஞர் ஆராய்ச்சி நடாத்திய காலத்தில் தமிழ் நூல்கள் பல ஏட்டுப்பிரதி களாகவே கிடைந்தன என்பதை நோக்குமிடத்து இவர் இந்நூலை எழுதுவதற்குப் பட்ட இன்னல்கள் ஓரளவு புலனாகும். இப் பெருந்தகையார் நாகரைப்பற்றி வெளியிட்ட சில குறிப்புகளை ஈண்டு எழுத்துக்காட்டுவாம்.

"இவர்கள்(நாகர்) ஒரு காலத்தில் இந்திய,இலங்கை,பர்மா ஆகிய பரப்பின் பெரும் பகுதியையும் ஆண்டார்கள். பெரிதும் தெக்கணத்திலேயேஇருந்திருக்கக்கூடிய ஒருநாகர்தலைநகரம் இராமாயணத்திற் கீழ்வருமாறு வர்ணிக்கப்பட்டுள்ளது.

**நஞ்சுறைவன் பற்கள்கொடு**
**நாகரீள மைந்தர்**
**பொன்செய்கொடுந் தாழ்இரும்**
**புரிசைமதில் காக்க**
**எஞ்சுதலில் வீதிபல**
**எங்கணும் நிறைந்து**
**மிஞ்சவரு போகவதி**
**மேவுநக ரத்தே**

**மின்செய்பொலங் கோயிலிடை**
**வியன்தவசின் மீதே**
**அஞ்சவரு வாசுகி**
**அமர்ந்தபதி காண்நீ**
**மஞ்சுதவழ் மாடமொடு**
**கூடம்மிடை காடு**
**விஞ்சவரு பைங்கழனி**
**யாவும்விழி கொள்வாய்**

"கி.மு.13ம் நூற்றாண்டினருகாமையில் கங்கைக்கும் யமுனைக்கு மிடையேயுள்ள பகுதியில் நாக அரசுகள் இருந்ததாக மகாபாரதத்திலிருந்து கேள்விப்படுகின்றோம். காவியத் தலைவனாகிய அருச்சுனன் தன் நாடு கடந்த வாழ்வில் முதலில் உலிபி என்ற நாக இளவரசியையும், அதன் பின் மணிபுரத்தை ஆண்ட நாக அரசன் சித்திரவாகனன் புதல்வியா கிய சித்திராங்கதையையும் மணம் புரிந்து கொண்டான்.

மீண்டும் நாகர்களை நாம் வரலாற்றில் கி.மு.6ம் நூற்றாண்டிற் காண்கிறோம். அப்போது ஒரு நாகமரபினர் மகதத்தை ஆண்டனர்.

இம்மரபைச் சார்ந்த ஆளும் மன்னனாகிய அஜாத சத்துருவின் ஆட்சியிலேயே கௌதமபுத்தர் தம் புதிய கோட்பாட்டை வகுத்துரைத்தார். அது நாகர்களின் பேராதரவைப் பெற்றது.

"இலங்கை வரலாற்று நூல்கள் யாவுமே நாகர்களைப் பற்றிய செய்திகளுடன் தொடங்குகின்றன. இவற்றிலிருந்து கி.மு.6ம் நூற்றாண்டில் தீவின் மேற்குக்கரையில் வல்லமை வாய்ந்த நாக அரசுகள் நிலவின வென்றும் அக்காரணத்தால் தீவு நாகதீவு என்று அழைக்கப்பட்டதென்றும் அறிகின்றோம். 1800 ஆண்டுகளுக்கு முன் வரையப்பட்ட பண்டை அமராவதிச் சிற்பங்களிலும் அது பொன்ற பிற இடங்களிலும் தலைக்கு மேல் பின்புறமாக விரிந்த படங்களுடன் நாகங்கள் தீட்டப்பட்ட மனித உருவங்கள் உள்ளன. இவை நாகர் உருவங்களே.3 அமராவதியின் அழிபாடுகளிலிருந்து அகற்றப்பட்டுள்ள சில துண்டங்கள் சென்னை அரசியற் கண்காட்சிச்சாலையிற் காணப்படுகின்றன. இச்சிற்பங்களில் நாகஅரசருக்குத் தனிச் சிறப்புச் சின்னமமகப் பின்புறம் ஐந்தலை அல்லது ஏழுதலை நாகம் உள்ளது.நாக இளவரசியருக்கு இதுபோல முத்தலை நாகங்களும் பொது நிலை நாகர்களுக்கு ஒரு தலை நாகங்களும் உள்ளன.

"இச் சிற்பங்களை அரிது முயன்று செதுக்கிய செதுக்குக் கலைஞர் நாகர்கள் நாக இயல்புடையவர் என்றும், அவர்கள் உடல் பாதி மனித உருவாகவும், பாதி பாம்புருவாகவும் அமைந்திருந்தன என்றும் கருதியதாகத் தோற்றுகிறது. இந் நம்பிக்கையைப் பண்டைத் தமிழ்த் தோற்றுகிறது. இந் நம்பிக்கையைப் பண்டைத் தமிழ்க் கவிஞர்கள் அரை குறையாகவே கொண்டிருந்ததாகத் தெரிகிறது. ஏனெனில், அவர்கள் தம்முடன் சமகாலத்தவரான நாகர்களை மனிதராகவே கருதிக் குறிப்பிடுகின்றனர். ஆனால், அதே சமயம் பண்டை நாகர்கள் பாதலத்திற் பாம்புகளாக வாழ்ந்ததாகக் குறிக்கின்றனர்.

"சோழர் தலைநகராகிய காவிரிப் பட்டினத்தின் பழமையையும் செல்வவளத்தையும் குறிப்பிடும் போது, நாகர் தலைநகர் அதாவது நாகர் நாட்டின் தலைநகரைப் போலப் பழமையும் புகழும் உடையதாயிருந்தது என்று கூறுகிறார். இதிலிருந்து 1800 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த தமிழ் மக்கள் நினைவெல்லைக்குள்ளாக, நாகர் அரசுகளை விடப்பழமை வாய்ந்த எதுவும் இருந்ததில்லை என்று தோற்றுகிறது. காவிரிப்பட்டினமே நாகர்களின் ஒரு பழைய வாழ்விடமாயிருந்த தென்று கூறப்படுகிறது.

நாகர்களில் எயினர், ஒளியர், அருவாளர், பரதவர் ஆகிய பல கிளையினர் இருந்தனர். இவர்களில் மறவரே மிக வல்லமை வாய்ந்தவராகவும் போர்த்திற மிக்கவராகவும் இருந்தனர். நாக மரபினரிடையே முற்றிலும் அடங்காப் பண்புடையவர்கள் எயினர்

அல்லது வேடரே. கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சோழர் வலிமையும் ஏனைத் தமிழரசர் வலிமையுந் தற்காலிகமாகச் சில காலம் தளர்வுற்றிருந்தது. அச்சமயம் அருவாளர் மரபினரின் கிளையினரான ஓவியர் எயிற் பட்டினத்தில் ஆண்டதுடன் மா விலங்கையின் மன்னர்களாகவும் விளங்கினர். நாகர்கள் பல கலைகளில் திறமையுடையவர்கள்; சிறப்பாக நெசவு அவர்கள் தனித்திறமாய் இருந்தது."

திரு. வி. கனகசபைப்பிள்ளை அவர்கள் எழுதிய நூலினை மொழிபெயர்த்த பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாத்துரை அவர்கள் இந்நூலின் 86ஆம் பக்கத்தில் அடிக்குறிப்பாக எழுதியுள்ள பாகமும் பரிசீலனைக்கு உகந்ததொன்றாகும். "நாகர்கள் தமிழராகவே தமிழகத்தில் வாழ்ந்தனர். எங்கும் வேறு இன மொழிக்குரியரென்ற பேச்சும் ஏற்படவில்லை. தனியினமாகவே வாழ்ந்தனர். ஆகவே, அவர்கள் கடல்கொண்ட தமிழகத்திலோ, தமிழகம் சூழ்ந்த நிலத்திலோ இருந்த தமிழினப் பிரிவினர் என்றும், கடல்கோளின் பயனாகவோ வேறு காரணங்களாலோ எங்கும் பரந்தவர் என்றும் கருத இடமுண்டு". இது இன்னும் ஆராயத்தக்கது.

இதுவரை கூறியவாற்றான் நாகர் தமிழகத்தில் வாழ்ந்த தொல் குடியினர் என்பது பெறப்படும். இந்த நாகர் அனுட்டித்த நாகவழிபாடும் எவ்வாறு உலகிற் பரவிய தென்பதைச் சிறிது நோக்குவாம்.

**அடிக்குறிப்பு :**

1. Griffith's Ramayana IV. 205, Indian Antiquary Vol. P. 5
2. Tree and Serpent Worship by Fergusson P. 60
3. Archaeological Survey of Southern Indian Vol. 1.
   The Buddhists stupas of Amaravati and Jaggayapeta.

# நாக வழிபாடு

**நா**க வழிபாடு இந்தியாவின் பழங்குடிகளுள் மட்டுமல்ல உலகத்திலே சரித்திர காலத்துக்கு முற்பட்ட வேறநேக குழுவினருள்ளும் மிகப் பரவியிருந்ததொன்று என்பதற்குச் சான்றுகள் பலவுள. நாக வழிபாடு சம்பந்தமான அநேக குறிப்புக்களை **பண்டிதர் ந. சி. கந்தையாபிள்ளை** அவர்கள் எழுதிய **'பழந்தமிழர்'** என்ற நூலிற் காணலாம். அதன் சுருக்கத்தை மட்டும் இவ்விடத்திற் குறிப்பிடுதல் பொருத்தமுடையதாவிருக்கும். :- "நாக வழிபாடு பகல் வழிபாடு போலவே உலகம் முழுமையிலும் வியாபகம் பெற்றிருந்தது. இவ்வழிபாட்டின் தொடக்கம் எவ்வகையினது என்று துணிதல் கூடவில்லை.[1] உலகின் பல பாகங்களில் கூட்டங்களாக வாழ்ந்த மக்கள் விலங்கு பறவை முதலியவைகளில் யாதோ ஒன்றைத் தமது

குலக்குறியாகக் கொண்டனர். இதனை ஆங்கில மொழில் 'Totem' என வழங்குவர். மயூரர், நாகர், லம்புக்கர்ணர், கருடர் முதலிய பெயர்கள் இதற்கு உதாரணமாகும். இக் குலங்களுக்குரிய விலங்குகளும், பறவைகளும் அவ்வவ் மக்கட் கூட்டத்தினரால் புனிதமுடையனவாகக் கருதப்பட்டன. அவைகளின் உருவங்கள் கொடிகளிலும் தீட்டப்பட்டன. ஆகவே ஒவ்வொரு கூட்டத்தினரும் ஒவ்வொரு கொடியுடையவர் களாயிருந்தனர்.

"ஆதிமக்கள், மொழியை ஓவிய முறையாக எழுதினர். கட்புலனாகும் பருப்பொருள்களை விளக்க, அவ்வப் பொருள்களின் வடிவங்கள் எழுதப்பட்டன. கட்புலனாகாத வீரம், கோபம், தந்திரம், அறிவு முதலியன போன்ற மனத்தோற்ற மளவிலுள்ள பொருள்களை விளக்க அவ்வக் குணங்களமைந்த உயிர்களின் வடிவங்கள் எழுதப்பட்டன. விவேகமின்மைக்கு ஈயின் உருவமும், விடா முயற்சிக்குத் தேனியின் உருவமும், வெற்றிக்குக் கருடனும் இன்னும் மற்றைக் குணாதிசயங்களுக்கு மற்றை உயிர்களின் உருவங்களும் அறிகுறிகளாக வழங்கி வந்தன.

பண்டை மக்கட் கூட்டத்தினர் ஒவ்வொருவரும் தம்மிடத்திற் காணப்பட்ட முக்கியதன்மை ஒன்றை விளக்க ஒவ்வோர் அடையாளமாகிய ஓவியத்தை வழங்கியிருக்கலாம். அவை பிற்காலத்தில் அம்மக்களால் வழிபாட்டுக்குரியனவும் ஆயின என்று கூறுதல் ஏற்றதாகத் தெரிகிறது. பாம்பு வணக்கத்தின் ஆரம்பமும் இதுவாயிருக்கலாம். இது ஆராயத்தக்கது."

ஒல்ட்ஹாம்[2] என்னும் ஆசிரியர் நாக வணக்கத்தையும் ஞாயிற்று வணக்கத்தையும் ஆராய்ந்து சிறந்த நூலொன்று வெளியிட்டுள்ளார். டக்டர் வோகல் அவர்கள் சர்ப்ப வழிபாடு முதலியன பற்றி எழுதிய நூலிலும்[3] பிரான்சியப் பேராசிரியர் துப்ரே எழுதிய நூலிலும்[4] சரித்திரவாராய்ச்சி அறிஞர் திரு. எச். கிருஷ்ண சாஸ்திரி அவர்கள் எழுதிய 'தென்னிந்திய தெய்வடிவங்கள்' என்ற நூலிலும்[5] நாக வழிபாட்டின் தொன்மையுஞ் சிறப்பும் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன. ஒல்ட்ஹாம் எழுதிய நூலின் முக்கிய குறிப்புக்களை மேற்கூறிய **பண்டிதர் கந்தையாபிள்ளை** அவர்களே அழகாக மொழி பெயர்த்துத் தந்துள்ளார்கள். அவற்றையும் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகின்றேன்.

"இந்திய நாட்டில் படமுள்ள நாகம் பகல் வணக்கத்தோடு தொடர்பு பெற்றுவருகின்றது. அது ஞாயிற்றினின்று தோன்றியவர் களெனச் சொல்லிக்கொள்ளும் மக்கட் கூட்டத்தினரின் குல இலச்சினையாகும். எங்கெங்கு பகல் வணக்கம் காணப்பட்டதோ அங்கெல்லாம் படமுடைய பாம்பு புனிதமுடையதாகக் கருதப்பட்டது. இந்தியாவிற் காணப்படுதல் போலவே ஞாயிற்றை வழிபடும் நாடுகளிலெல்லாம் நாகம் வழிபடப்பட்டது. சீனா, பேரு, ஆபிரிக்கா முதலிய நாடுகள் ஒன்றிலிருந்து

ஒன்று மிகவும் தொலைவில் இருக்கின்றன. இந்நாடுகளில் இவ் வழிபாடுகள் மற்றை நாடுகளின் சம்பந்தமில்லாது தனித்துத் தோன்றின என்று கூறுதல் முடியாது. இவ்வணக்க முறை இந் நாடுகள் ஒன்றிற் காணப்படுவது போலவே மற்றைய நாடுகளிலுங் காணப்படுகின்றது. ஆகவே ஞாயிற்றுக் குலத்தவர் என்று சொல்லிக் கொண்ட ஒரு குலத்தவர்களுடைய மத்தியிலிருந்தே இவ் வழிபாடுகள் பரந்து நானாதிசைகளிலும் சென்றிருத்தல் வேண்டும்."

**உலகம் முழுமையிலும் நாகம்**
**புனிதமுடையதாகக் கொள்ளப்பட்டது.**

வரலாற்றுக்கால ஆரம்பத்தில் பாம்பு, பகல் வழிபாடுகள் நன்றாக வளர்ச்சி அடைந்திருந்தன. மிகப் பழங்காலத்தில் யூபிராதசுக்கும் சிந்து நதிக்கும் இடையில் இவ்வழிபாடுகள் ஓங்கியிருந்தன. பபிலோனியாவிலும் அதனை அடுத்த நாடுகளிலும் பண்டை நாட்களில் ஞாயிற்று வழிபாடுகளே இருந்தன. பாபிலோன் மக்களின் ஆதித் தெய்வங்களுள் ஒன்று ஈஆ, இது ஏழுதலை நாக வடிவுடையது, சூரியனும் நாகமும் பினீசியரால் வணங்கப்பட்டன. கிரேக்கர் ஞாயிற்றையும் பாம்மையும் வணங்கினார்கள். எகிப்தில் ஆதிகாலமுதல் பகலும் படமுள்ள பாம்பும் வணங்கப்பட்டு வந்தன.[6] மஞ்சூரிய மக்களின் பாம்புத் தெய்வங்கள் இன்றும் ஆறுகளுக்கும் மழைக்கும் அதிபதிகள். யப்பானியர் ஐதிகத்தின்படி மலைத் தெய்வங்கள் பாம்பு வடிவங்களை எடுத்துள்ளன. இந்நாடுகளில் ஞாயிற்று, பாம்பு வழிபாட்டு முறைகள் இந்தியாவிற் காணப்படுவன போன்றன. சேரநாடு நாகர்நாடு எனப்படும். சாரை என்பதே சேர என வந்தது. இன்றும் ஒவ்வொரு நாயர் சாதியினரின் கொல்லையிலும் நாக தெய்வங்கள் வழிபடப்படுகின்றன.

**கிறித்துவ ஆண்டின் முற்பகுதிகளிற் சீன யாத்திரிகர்கள் இந்தியாவுக்குச் செல்லும் வழியிற் பாம்புத் தெய்வங்கள் எல்லா ஆறுகளையும் குளங்களையும் ஆள்வதைக் கண்டனர்.** திபெத்தில் இன்றும் குளங்களும், நீருற்றுக்களும் பாம்புத் தெய்வங்களால் ஆளப்படுகின்றன. பேருவில் கசமார்க்கா என்னுமிடத்தில் பாம்பு ஆலயத்திற் பாம்பு வடிவக் கல் இருந்தது.

**பாம்பு வழிபாடு இந்தியாவில் ஆரம்பித்ததென ஆராய்ச்சியாளர் துணிவர்.**[7]

## நாகவழிபாடு நாகருடையது.

நாக வகுப்பினரே நாக வழிபாட்டுக்கு ஆஸ்பதமாயிந்தாரென எண்ணுவது ஏற்புடைத்துப்போலும்.[8] "பிற்காலத்தனவான புராண காவியங்கள் நாகர்களைப் பாதி பாம்பும் பாதி நரருபமுமாகச் சித்திரிக்கின்றமை 'நாகர்' என்ற குலப்பெயருக்கு

உற்பத்தி கொடுத்தோதும்படி உண்டாக்கிய கற்பனையேயன்றி உண்மையன்று. தக்ஷகன் எனும் பாம்பு ஒரு மானுட கன்னிகை யைப் புணர்ந்து பெற்றவர்களை நாகர்கள் என்ற பௌராணிகர் கூற்றும் அவ்வாறேயாம். நாக வழிபாடு உள்ளோராயும், நாகத்தைத் தங்கொடியாகக் கொண்டோராயும் இருந்தமை தான் நாகருக்கு இப்பெயர் வருவதற்குக் காரணமாயிற்று. இப்போது சென்னை நூதனசாலையில் வைத்திருக்கும். அமராவதிச் சித்திரங்களிற் கண்ட நாகரின் தலைமேல் நாகபடம் போன்ற ஒருவகைக் குடை கவிந்து நிற்பதைக் கவனிக்கலாம். உள்ளபடி இக் குலத்தார் இவ்வகையான ஓர் ஆபரணம் உள்ளோராய் இருந்தமை பொருத்தமாகாத தன்று. இவர் உச்சியிற் கட்டும் கொண்டையும் மண்டலமிட்டுக் கிடக்கும் நாகத்தினுக்கு ஓர் சின்னமே என்ப.

**'நாகர் இந்தியாவிலும் இலங்கையிலும் பரந்த காலத்தில் நாகவழிபாடும் மிகப் பரவுவதாயிற்று.** இவர் முக்கியமாய் நிலையூன்றிய பிரதேசமாகிய மலையாளத்திலேதான் இன்றைக்கும் அது உறைத்து நிற்கின்றது. மலையாளத்துச் சேரகுலத்தவர் இந் நாகரின் பிதிர்வழியே போலும். இவருள், பெண்கள் இன்றைக்கும் நாகபாம்பின் வடிவமான ஆபரணங்களைக் காதிலுங் கையிலும் அணியும் வழக்கத்தை மிகப் போற்றுவாராகின்றனர். வட இந்தியாவிலும் ராகிபூர்ணிமை என்னுந் தினத்தில், பாம்பு கடிக்கு ஓர் காவலாகராகி என்றழைக்கப்படும் மணிக்காப்புக்களை ஒருவர் இன்னொருவருக்கு அனுப்பும் வழக்கமொன்றிருக்கிறது. இவ்வழக்கமும் நாக வழிபாட்டோடு சம்பந்தப்பட்டதே யென்பர் மெஸ். தத்தர். யாழ்ப்பாணத்தில் நாட்டுப்புறங்களில் வழங்கும் நாகபடம் என்னும் கால்விரல் ஆபரணத்துக்கு காதாபரணத்துக்கும் உற்பத்தி யாது? நாகபத்தர்களது வழக்கந்தானே? தென்னிந்தியாவில் குளம் நதிக்கரைகளிலும் நாக பாம்பின் வடிவங் கொத்தப்பட்டுள்ள கற்களைப் பலவிடங்களிற் காணலாம். இவைகளுட் சில வெகுகாலத்தன." நாகவழிபாடு ஞாயிறு, திங்கள் முதலியவற்றின் வழிபாட்டுக்கும் முற்பட்டதாயிருக்கக்கூடும் எனவும், பிள்ளைப்பேறில்லாதவர்கள் நாகப் பிரதிஷ்டை செய்வதாற் பிள்ளைகளைப் பெறலாம் என்ற நம்பிக்கை தமிழகத்தில் நன்கு வேரூன்றியிருந்தது எனவும் **திரு. ஏச். கிருஷ்ண சாஸ்திரி** அவர்கள் தாம் எழுதிய நூலிற்[9] குறிப்பிட்டுள்ளார்கள்.

இனி, நம் சைவ சமயத்தை நோக்குமிடத்துச் சிவபெருமான் சர்ப்பத்தை ஆபரணமாக அணிந்துள்ளார் என்று கூறப்படுகின்றது. இதன் கருத்து யாது?

"குண்டலினி சத்தி பாம்பு வடிவாயிருக்கிற தென்று உருவகப்படுத்துகிற படியாலும், அது அவர்க்குப் பரிக்கிரக

சத்தியாதலுண்மையானும், அதனுடைய விரிவு, சுருக்கங்களே பிரபஞ்ச தோற்ற ஒடுக்கங்களாகையானும், அதனையுடையராயிருத்தலாற் சகத்திற்கு நிமித்த காரணர் தாமே என்பதையும், இஃதன்றி, 'இருத்தியே நாகரூபம்' எனக்கூறலால், இருத்தி என்பதற்குப் பொருள் நல்ல செல்வம், ஐஸ்வரியம் அதிகப்படல், நிறைவு, மேலாந்தன்மை என்பனவாக இவைகளை யுடையவர் தாமே என்பதையும் ஆன்மாக்களுக்கு அருளே தனுவாக எடுத்து அருள் செய்வோர் தாமே என்பதையும் பரம கருணகர பரஞ்சோதிப் பிழம்பாகிய பரமசிவன், சிற்றறிவினர் களாகிய ஆன்மாக்கட்கு அறிவித்து உய்விப்பான் கொண்ட திருச்சின்னங்களேயாம்" என்று சைவசிந்தாந்த சரபம் மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் **'சிவக்ஷேத்திராலய மகோற்சவ விளக்கம்'** எனும் நூலில் விளக்கிக் காட்டியுள்ளார்கள்.

**அடிக்குறிப்பு**

1. ஆதி அநாகரிக மக்களுள் பாம்பு வழிபாடு பயத்தினால் எழுத்ததுபோலும். சத்தப்படாமல் நகர்ந்து போய்க் கள்ளனைப் போற் சதிமானஞ் செய்வதும், குப்பை கூழங்களுள், பொந்து சந்துகளுள் மறைந்து கிடந்து எவருங் காணமுன்னரே அனர்த்தம் விளைப்பதும், தன் சத்துருவின் தோற்புரையில் கவ்வுதல் ஒன்றினால் அவனை மரணத்துக்கிட மாக்கி விடுகின்றதுமாகிய இந்தச் சொல்லரிய வல்லமையைப் பொருந்திய பிராணி, இயல்பாகவே சனங்களுடைய அச்சத்துக்கும் அதனால் உபாசனைக்கும் ஆதிதொட்டு இலக்காகிக்கொண்டது. தமிழரின் பூர்வ சரித்திரமும் சமயமும் - **நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்.** பக்.58.
2. The Sun and the Serpent - by C.F.Oldham Oh. X - XI.
3. Indian Serpent Lore or The Nagas in Hindu Legend and Art - by J. P. H. Vogel, Ph. D.
4. Iconography of Southern India - by G. Jouveau Dubreuil.
5. South Indian Images of Gods and Goddesses - by H. Krishna Sastri.
6. The lotus and hooded snakes were in Egypt, which make it probable that the religious sysmbols of both countries originally came from the Hindus - The Symbolic Language of Ancient Art and Mythology. P. 109.
7. The mythical serpent of the Hindus too is generally represented with five heads to signify perhaps the five senses, but still it is the hooded snake, which we believe to be a native of India, and

consequenty to have been originally employed as a religious symbol in the country from whenece the Egyptians and Phonecians probably borrowed it and transmitted it to the Greeks and Romans upon whose bracelets and other symbolic ornaments we fervently find it. symbolical Language of Ancient Art Mythology. P. 16.

8. 'தமிழரின் பூர்வ சரித்திரமும் சமயமும்' - **சுவாமி ஞானப்பிரகாசர்.**
9. South Indian Image of Gods Goddesses - Nagas H. Krishna Sastri. P. 248 - 251.

# நயினாதீவு

## நந்தாப் புகழ்வாய்ந்த நயினைத்தலச் சிறப்பு

**நீருற வளைந்த புரண்டெழுந் திரைந்து**
**நிறைந்திடும் பணத்திரை விரித்துக்**
**காருற விடங்கொண் டுலகெலா மீன்ற**
**கருணைநா யகிதிருக் கோலத்**
**தேருற விளங்கு முரகமொத் திருந்த**
**விருங்கட னடுவணெண் டிசையும்**
**பாருடன் புகழத் திகழ்சிகா மணிபோற்**
**படிந்ததந் நயினையம் பதியே.**

**பவக்கடற் கிடைவீழ்ந் தலமரு வோரைப்**
**பாதுகாத் தின்பமே பயக்குஞ்**
**சிவத்திடைப் படரும் பச்சிளங் கொடிதன்**
**றிருப்பதத் துணைமல ரெனவே**
**யுவப்புறத் தனைச்சூ ழாழிமே னாவா**
**யொழிதர மறலிநோ யுற்றுத்**
**தவிப்பவ ரயர்கைக் குறுபுனை யுமானத்**
**தங்குமந் நயினையாந் தலமே.**

- நயினை மான்மியம்

யாழ்ப்பாணக் குடாநாடும் அதனை அடுத்துள்ள ஒவ்வொரு சிறு

தீவுகளும் புராதனப் பெருமை வாய்ந்தனவாகக் காணப்படு கின்றன. லைடன்தீவு, காரைதீவு, எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு எனும் சப்த தீவுகளுக்கு நடுநாயகமாக அமைந்துள்ளது நயினாதீவு. இது யாழ்ப்பாணத்தி லிருந்து நெடுந்தீவுக்குச் செல்லுங் கடற்பாதையில் தென்மேற்குத் திசையில் 20 மைல் தூரத்தில் உள்ளது. நயினாதீவுக்கு வடக்கே 3 மைல் தூரத்திலுள்ளது அனலைதீவு. நயினாதீவு ஏறக்குறைய 4 மைல் சுற்றளவுள்ளது. மூன்று மைல் நீளமும் ஒரு மைல் அகலமும் உள்ளது. இது சதுர வடிவமுடையது. கடுகு சிறிதெனினும் காரம் பெரிதென்ற முதுமொழிக்கிணங்க, நயினாதீவு அளவாற் சிறியதெனினும், தொல்புகழாற் றலைசிறந்த தீவாக விளங்குகின்றது. மேனாட்டு நாகரிக அலைகளால் எற்றுண்டு போகாது சைவத்தையுந் தமிழையும் பேணி வளர்த்து வந்தவர்கள் தீவுப்பகுதிச் சைவ நன்மக்களே எனக்கூறலாம்.

## தலத்தின் மறுபெயர்கள்.

சரித்திரகாலத்திற்கு முன்தொட்டே பல சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டு வந்த பெரும் புகழுடையது நயினாதீவு. இத்தீவின் பல்வேறு பெயர்களை அறிந்து கொள்வது அதன் வரலாற்றை அறிந்து கொள்ளுதலில் ஒரு பாகமாகும். இத்தலத்திற்கு நாகதிவயின, நாகதீவு அல்லது நாகத்தீவு, நயினார்தீவு, நாகநயினார்தீவு, மணிநாகதீவு, மணிபல்லவத்தீவு, மணித்தீவு, பிராமணத்தீவு, ஹார்லெம் சம்புத்தீவு, நரித்தீவு, நாகேஸ்வரம், நாகேச்சரம் முதலிய பல பெயர்கள் உள்ளன.

## தலத்தின் தொன்மை

இலங்கையில் விசயன் வந்து சேர்வதற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே நாகரிக முதிர்ச்சியுள்ள நாகர் வாழ்ந்து வந்தனர் என முன்னர்க் குறிப்பிட்டுள்ளாம். இந்த நாகர்கள் வாழ்ந்தனர் என்ற பேருண்மையினை இன்றும் நினைவுறுத்துவது நயினாதீவு, நாகர்கோயில் முதலிய தொல்பதிகளாகும். இப்பொழுதுள்ள நயினாதீவின் விஸ்தீரணத்தைப் பார்க்கிலும் பண்டொருஞான்றிருந்த அதன் விஸ்தீரணம் பன்மடங்கு கூடியது என யூகிக்க இடமுண்டு. இப்போது குடாநாடாகவிருக்கும் யாழ்ப்பாணம் முன்னொரு காலத்தில், அதாவது கிறித்துவுக்கு அநேகவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இரண்டு தீவுகளாக இருந்தது. மேற்கே நாகதீவம், மணிநாகதீவம், மணிபுரம், மணிபல்லம் என்னும் நாமங்களால் வழங்கப்பட்ட பெருந்தீவும், கிழக்கே எருமை முல்லைத்தீவு, எருமைதீவு என்று பெயர்பெற்ற சிறு தீவும் ஆக இருந்தது. காலந்தோறும் பூகம்பங்களினாலும் பிரளயங்களினாலும் அழிக்கப்பட்டு மேற்கே ஒன்றாயிருந்த பெருந் தீவகம் பல தீவுகளாகப் பிரிக்கப்பட்டது சரித்திரகாலத்துக் குள்ளே. அதாவது கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலே திஸ்ஸன் என்னும் நாகவரசன் கல்யாணியில் அரசாண்ட காலத்திற்

சம்பவித்த கடற்கோளினால் இலங்கையின் மேற்குக் கரையில் ஒரு பெரும்பாகம் கடல்வாய்ப்பட்டபோது இத்தீவும் பிரிக்கப் பட்டிருக்கலாம்.

"காரைதீவு, வேலணை, மண்டைதீவு, புங்குடுதீவு, அனலைதீவு, நயினாதீவு நெடுந்தீவு முதலிய தீவுகளும் வலிகாமமும் அப்பெருந் தீவகத்தின் பகுதிகளேயாம். அவ்வாறே கிழக்கே ஒன்றாகவிருந்த சிறுதீவகம், களப்புக் கடலால் வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி யென்னும் பகுதிகளாகப் பிரிக்கப் பட்டது. " என்று முதலியார் இராசநாயகம் அவர்கள் குறிப்பிட்டுள் ளார்கள்.[1]

எனவே வட இலங்கையையடுத்துள்ள சிறு தீவுகளின் இப்போதைய நிலப்பரப்பின் அளவை ஆதாரமாகக் கொண்டு பழந்தமிழ் நூல்களிலும் சிங்கள நூல்களிலுங் கூறப்பட்டுள்ள நாடுகளின் பண்டைக்கால நிலைமையை வரையறுத்துக் கூறுவது இயலாததொன்றாகும். இதனாற்றான் நாகதீவு யாண்டுகளது என்பது பற்றிய இதுவரை பலவகைப்பட்ட கருத்துக்கள் கிளம்பியுள்ளன.

## நாகதீவு

நயினாதீவுக்கு இடப்பட்ட பழைய பெயர் நாகதீவு அல்லது நாகத்தீவு என்று கோடலே பொருத்தமாகத் தெரிகின்றது. பிறிதொரு காலத்தில் வட இலங்கை முழுவதுமே நாகதீவு என்றழைக்கப்படலாயிற்று, இப் பெயரே பின்னர் இலங்கை முழுவதிற்கும் இடப்படலாயிற்று.

இதன் பழைய பெயர் நாகதீபம். பகவான் புத்தர் தரிசித்த காலத்திலுள்ள நாமம் அதுவே. அக்காரணம் பற்றியே பௌத்தர்கள் இன்றும் அதனை நாகதீபம் என்றே அழைக்கின்றனர். மணிமேகலை விஜயஞ் செய்தபோது அதன் பெயர் மணிபல்லவமாக இருந்ததாய் அறிகின்றோம். சிவபெருமானுக்குத் தில்லை, அண்ணாமலை முதலிய பஞ்ச லிங்க ஸ்தலங்களை அமைத்த முறையில், பராசக்திக்குக் குண்டலினியோகத்திலுள்ள ஆறு ஆதாரங்களை உருவகப்படுத்தி அவற்றை விளக்கிநிற்க ஆறு ஸ்தலங்களை அமைத்து நம் ஆன்றோர்கள் நயினாதீவை மணிபூரகமாகப் பாவித்து அதற்கு **மணிபீடம்** என்று நாமஞ் சூட்டியதாகவும் அறிகின்றோம், அதுவுமன்றி சக்தி பீடங்கள் அறுபத்து நான்கினுள் இது ஒன்றே இலங்கையில் இருப்பதுங் குறிப்பிடவேண்டிய விஷயமாகும்.

"மாந்தரின் வருகையால் பரவிய புத்தமதத் தொடர்பில், தற்போதுள்ள வடமாகாண எல்லைக்குள் அடங்கிய பிரதேசம் முழுவதுமே நாகதீபமென அழைக்கப்பட்டது. இலங்கையைக்

கொழும்பெனவும், இங்கிலாந்தை லண்டன் எனவும், ஈழத்தை யாழ்ப்பாணமெனவும் அழைக்கும் முறையில் தோன்றிய தாகும் பிந்திய நாகதீபமென்னும் பெயர். இந்த உண்மையை அறியாத ஆராய்ச்சியாளர் இன்னும் பழைய நாகதீபத்தைத் தேடி அலைகின்றனர்." என்று **ஆத்மஜோதி** ஆசிரியர் **திரு. க. இராமச்சந்திரன்** அவர்கள் கூறியுள்ளார்கள்.[2]

யாழ்ப்பாணக்குடாநாடு முழுவதுமே நாகதீபம் அல்லது மணிபல்லவம் என்று கருதினார்கள். **முதலியார் இராசநாயகம்** அவர்கள். "நயினாதீவு மட்டும் பதினைந்தாம் நூற்றாண்டில் நாகதீவு என அழைக்கப்பட்டபோதிலும், நாகர்கோயிலுக்கும் அத்தீவுக்கும் இடைப்பட்ட நம் குடாநாடு முழுவதும் அதன் முன் பல நூற்றாண்டுகளாய் நாக தீவுப் பெயர்கொண்டிருந்தமை மறுக்கப்படுவதன்று. சிங்கள மகாவமிச நூல் இப் பெயரையே பலவிடங்களில் யாழ்ப்பாணத்துக்குச் சூட்டுகின்றது" என்று கூறுகின்றார் நல்லூர் **சுவாமி ஞானப்பிரசாகர்** அவர்கள்.[3] நாகதீபம் என்ற கட்டுரையினை வெளியிட்ட **முதலியார் ஏ. எம். குணசேகர** அவர்கள் புத்தளம், சிலாபம் ஆகிய கரையோரப் பகுதிகளும் அவற்றையடுத்துள்ள தீவும் நாகதீவு என்றழைக கப்பட்டதெனப் பிறிதொரு கொள்கையினை வெளியிட்டார்,[4] . இதற்கு ஆதாரமாக **இரசவாகினி** என்னும் பாளிமொழி நூலிலும் **சத்தர்மாலங்காரய** சிங்கள இலக்கியத்திலும் வரும் நாக உபாசிகையின் கதையை எடுத்துக் காட்டியுள்ளார். **'நாகதீபமும் யாழ்ப்பாணத்திலுள்ள பௌத்த சின்னங்களும்'** என்ற கட்டுரையில் டாக்டர் **போல் பீரிஸ்** அவர்கள் நாகர்கோவில் தொடக்கம் நயினாதீவு வரையுள்ள யாழ்ப்பாணக்குடாநாடு அல்லது தமிழ்ப்பட்டினம் முழுவதுமே நாகதீபம் என்றழைக்கப்பட்ட தெனவும் பிற்காலத்தில் நாகதிவதியின என **'நமபொத்த'** எனும் நூலிற் கூறப்பட்டிருப்பது இப்பொழுதுள்ள நயினாதீவையே குறிக்கும் எனவுங் கூறியுள்ளார்கள்.[5]

இனி வல்லிபுரக் கோயிற் பொற்சாசனத்தைப்பற்றி எழுதிய தொல்பொருட் பகுதி அதிபர் **டாக்டர் பரணவித்தான** அவர்கள், "நாகதீபம் எங்கேயுள்ளது என்பதைப் பற்றி ஆராய்ச்சியறிஞர் சந்தேகங் கொள்வதற்கிடமின்றிச் செய்துவிட்டது இச்சாசனம். அதன்படி யாழ்ப்பாணமே நாகதீவு என வழங்கப்பட்டது" எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.[6] இக் கொள்கையினையே இலங்கையின் சரித்திரச் சுருக்கம் எழுதிய **எச். டபிள்யு. கொட்றிங்டன்**[7] அவர்களும் சூளவம்சத்தை மொழிபெயர்த்த **கைகர்** அவர்களும் ஏற்றுக் கொண்டனர்.

வல்லிபுரக்கோயிற் பொற்சாசனம் இது.

1. ஸித$_4$ மஹிரஜ ரஜெஹி அமெதெ
2 இஸிகி$_3$ ரய நகதி$_3$ வ புஜமெனி
3. ப$_3$ த$_3$ கர - அதனெஹி$^3$ பியகு$^3$ கதிஸ
4. விஹர கரிதெ

(இதிற் குறிக்கப்பட்டுள்ள எண்கள் சமஸ்கிருத அக்ஷர வரிசை எண்கள். எடுத்தலோசையுடன் உச்சரிக்கப்படல் வேண்டும்.

இதன் பொருள் : "வாசப அரசன் காலத்தில் நாகதீவை ஆட்சிபுரிந்த அமத்தன் (அமைச்சன்) இஸிகிரயன் என்பவன் பதகர அ(த்)தனையில் பியகுகதிச விகாரையைக் கட்டினான்" என்பது, பிக்குராகுலரின் கட்டுரையைத் தமிழில் மொழிபெயர்த்த நண்பர் 'Badakra Atana' என ஆங்கில எழுத்துக்களிலிருந்த உருவத்தை 'படகர ஆற்றான்' எனத் தவறாகப் பெயர்த்துவிட்டார், இதன் சரியான உச்சரிப்பு 'பதகர அதன' எனக் குறிக்கப்பட்ட இடம் எத்திசையிலுள்ளதென்பதைத் திடப்படுத்துவதற்குச் சரித்திர ஆராய்ச்சியாளர்க்கு ஓர் அரிய சந்தர்ப்பம் எனப் பிக்கு ராகுலர் கூறியிருந்தார். ஒரு வாரத்தின் பின்னர் நல்லூர் **சுவாமி ஞானப்பிரகாசர்** இதற்குச் சரியான ஒரு பொருள் கொடுத்திருந்தார். . "வடகரை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே குறித்த சாசனத்தில் பதகர எனக் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதன என்னும் சொல் கூடியிருப்பதால் வடகரை நாடு எனப் பொருள் கொள்வது சாலும். வல்லிபுரக் கோயிலில் இச்சாசனங்காணப்பட்டதெனின் அப்பகுதியை விளக்கும் வடகரை நாடு என்ற பொருள் மிகவும் பொருத்தமுடையது. இப் பொற்சாசனத்திலிருந்தும் யாழ்ப்பாணத்தில் அக்காலத்திலே தமிழ்மொழி தான் பேசப்பட்டு வந்ததென்பது பெறப்படுகின்றது."[8]

இனி, மகியங்களைக் கருகே புராதன தாதுகர்ப்பம் ஒன்றிருக்கின்றது. இவ்விடமே நாகதீபம் என்றழைக்கப்பட்டதென்பர் பிறிதொருசாரார். 'மகியங்கனம், நாக தீபம்' என்ற பாலிச் சூத்திரத்தில் மகியங்கனைக்கு அடுத்த படியாக நாகதீபம் குறிப்பிடப்பட்டிருப்பதால் இக்கருத்துப் பரவியிருக்கலாம். மகாவமிசத்தில் வரும் நாகமன்னர்களின் கதையைக் கொண்டு களனியே நாகதீபம் எனக் கருதுகின்றனர் பிறிதொருசாரார். 'சத்தர்மாலங்காரய' என்ற சிங்கள இலக்கியத்தில் வரும் நாக உபாசிகையின் கதையை ஆதாரமாகக் கொண்டு இவ்விடம் தெல்வத்தையிலுள்ள தொட்டகமுவை விகாரையெனக் கூறுவாருமுளர். மாத்தறைக்கருகே நாகம் என்ற சொல் தழுவிய இடப் பெயர்கள் பரக்கக் காணப்படுதலால், அதுவே நாகதீபம் என்பாருமுளர். பாம்பன் தீவை அல்லது மன்னார் தீவை நாகதீபம் என்பாருமுளர். இக்கருத்துக்கள் எவ்விதமாயினும் யாழ்ப்பாணமே

நாகதீபம் என்பது சரித்திரச் சான்றுகளின் மூலமாக அறியக்கிடக்கின்றது என்று உதவித் தொல்பொருள் அதிபர் **திரு. எஸ். கருணாரத்ன** அவர்கள் 'தினமின' பொஸன் மலரில் (11.06.57) குறிப்பிட்டுள்ளார். "மணிபல்லவமேனும் நாகதீபமேனும் யாழ்ப்பாணக் குடாநாடல்ல என்பது வெளிப்படை" என்ற கருத்துப்பட நயினாதீவு **திரு. செல்லையா தில்லையம்பலம்** அவர்கள் '**நற்றவம் மிக்க நயினாதீவு**' என்னுங் கட்டுரையில் எழுதியுள்ளார்கள்.[9]

## வெடியரசன் வரலாறு[10]

தென்னாட்டிற் கற்புக்கரசி கண்ணகி வாழ்ந்த காலத்தில் தீவுப்பகுதிகளை வெடியரசன் எனும் அரசன் ஆண்டு வந்தான் என வெடியரசன் நாடகம் கூறுகின்றது. இந்த நாடகம் நவாலியூர் **வைரவி இராமு** என்பவரால் இயற்றப்பெற்றது. இவர் வாழ்ந்த காலம் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியும் எனலாம். இந் நாடகம் இயற்றி அரங்கேற்றப் பெற்ற காலம் 1844 ஆம் ஆண்டளவிலென இந்நூலின் முகவுரையிற் குறிப்பிட்டிருக்கின்றது. ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியுடைய வலது தொடையில் உதித்த பிள்ளை தான் குகனென்றும், அவனுக்கு வெடியரசன் என்னும் பட்டத்தையும் கருடக்கொடியையும் .**நீலகேசி** யென்னும் பெண்ணையும் கொடுத்து அவனுக்குச் சகோதரர் நால்வரையும் சிருஷ்டித்துக் கொடுத்து நாகநகரை அரசாளும்படி வைத்தார் என்று இந் நாடக நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். காகுந்தி புதல்வனான மீகாமன் சோழவரசனுடைய கட்டளைப்படி, மாநாய்கன் எனும் வணிகேசன் மகள் கண்ணகியின் பாதச்சிலம்பு செய்தற்கேற்ற நாகரத்தினம் வாங்க, நயினாதீவு என்று சொல்லப்படும் நாகதீவை நோக்கி வந்தான். அத்தீவு வெடியரசனுடைய ஆளுகைக்குட்பட்டது. வெடியரசன் நெடுந்தீவிற் கோட்டை கட்டி தீவுப்பகுதியை ஆண்டு வந்தான். வெடியரசனின் மாலுமி, மீகாமனையும் சேனையையும் கரையிலிறங்காதபடி தடுத்து, அவன் வரவை வெடியரசனுக்கு அறிவிக்க, அவன் தன் சமுகத்துக்கு மீகாமனை அழைக்கிறான். அவன் வந்த நாகரத்தினம் கேட்க, வெடியரசன் வெகுண்டு மீகாமனைப் போருக்கழைக்கிறான். பின்னர் மீகாமன் வெடியரசனைச் சிறை செய்கிறான். இதற்கிடையில் நீலகேசி தன் மைத்துனர் **வீரநாரயணதேவனுக்குச்** செய்தி சொல்லியனுப்ப, அவன் தன் சேனைகளுடன் போர்க்களம் ஏகச் சித்தம் செய்கிறான்.

மீகாமன் நாகரத்தினம் கிடைக்குமோ கிடையாதோ என்று பிராமணன் ஒருவனிடம் சாத்திரங்கேட்கப் பின்னவன் வெடியரசனைக் கொண்டு அரவத்திடம் நாகரத்தினம் கேட்பித்தால் கிடைக்கும் எனக்கூறுகிறான். மீகாமன் அப்படியே செய்து நாகரத்தினத்தைப் பெறுகிறான்.

வீரநாரயணன் வந்து மீகாமனைப் போருக்கழைக்கிறான். இருவரும் போர் புரிகிறார்கள். வீரநாரயணன் மீகாமனை வெட்டுகிறான். மீகாமன் குற்றுயிராய் விழும் போது 'கண்ணகையே' என்று கதறுகிறான். கலைமுனிவன் களரி மீது வந்து உதிக்கிறான். மீகாமனும் உயிர் பெற்றெழுகிறான். கலைமுனிவன் ஒரு வேலாயுதத்தை மீகாமன் கையிற் கொடுகிறான். மீகாமன் அவ்வேலாயுதத்தால் வீரநாராயணனை மடியச் செய்கிறான்.

வெடியரசனின் ஏனைய சகோதரர் **விளங்குதேவன், போர்வீரகண்டன், ஏரிலங்குருவன்** ஆகிய மூவரும் தத்தம் சேனையுடன் வருகின்றனர். போர் நடக்கிறது. மீகாமன் தோற்று அஞ்சலியஸ்தனாகி நிற்கிறான். அவனை வெடியரசன் முன் கொண்டு ஏகினார்கள். மீகாமன் கண்ணகைக்கு நாகரத்தினம் வாங்கும் பொருட்டு சோழவரசன் அனுப்பிய தூதனேயல்லாது யுத்தஞ் செய்யக் கரவாக வந்தவன் அல்லன். ஆகவே அவனை ஒன்றுஞ் செய்யாமல் நாகரத்தினத்தைக் கொடுத்து விட்டுவிடுங்கள் என வெடியரசன் கட்டளையிடுகிறான். தம்பிமார்களும் அப்படியே செய்கிறார்கள். மீகாமன் நாகரத்தினத்தைப் பெற்றுக்கொண்டு சோழதேசஞ் செல்ல, வெடியரசனுந் தம்பிமாரும் வீரநாராயணனின் ஈமக்கடனைகளை முடித்துக் கொண்டு தத்தம் இருப்பிடம் ஏகுகிறார்கள். இது செவிவழி வருஞ்செய்தியாதலின் இதனைச் சிறிது மாற்றியும் கூட்டியும் பல கதைகள் முளைத்துள்ளன. இவ் வரலாற்றினையே,

**"நசையாத நாகதீவில் நாகத்தின் மணிவாங்கக்**
**கசிவான மனதுடனே கடுகவுமை யழைத்தோங்கான்**

எனக் **கண்ணகி வழங்குரைகாதை**[11] அடிகள் குறிப்பிடுகின்றன.

கடல்சூழ் இலங்கைக் கயவாகு மன்னன் அரசாண்ட காலத்தில் நிகழ்ந்த கண்ணகியின் வரலாற்றுடன் சம்பந்தப்பட்ட கதையொன்றினைப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர் நாடகமாக இயற்றுமிடத்து, தாம் செவி வழிக்கேட்டு வந்த செய்தியைக் கொண்டே இயற்றினாராதல் வேண்டும். இவர் வாழ்ந்த காலத்தில் நாகதீவு, நயினாதீவு என்ற வழங்கப்பட்டதென்பதற் கையமில்லை. இதுவும் ஆராயத்தக்கது.

இதுவரை எடுத்துக் காட்டியவற்றை நோக்குமிடத்து நாகதீபம் எது என்பது பற்றித் தீர்மானிப்பது இலகுவான செயலன்று என்பது புலனாகும். புத்தர்பெருமான் தரிசித்த பதினாறு புனித தலங்களைக் குறிப்பிடுஞ் சூத்திரத்தில் மகியங்கனை, ஸ்ரீபாதம், களனி எனத் தலங்களின் பெயர்களே குறிப்பிடப்பட்டிருப்பதால் நாகதீவு என்பது ஒரு சிறு இடமாக இருந்திருக்கவேண்டுமேயன்றி, குடாநாடு முழுவதையுங் கருதிய

பெயராகக் கொள்வது பொருத்த மற்றதாகத் தெரிகிறது. ஆகவே நயினாதீவுக்கு முதற்கண் வழங்கிய பெயரே பின்னர் குடாநாடு முழுவதற்கும் வழங்கப் படலாயிற்று என்ற கொள்கை வலியுறுகின்றது. எனினும் இது நன்கு ஆராயப்படவேண்டியதொன்றாகும்.

கல்வியென்னும் பல்கடலில் வீழ்ந்த மக்கள் இவ்வாறு நாகதீபத்தைப் பற்றி ஆராய்ந்து முடிவு கட்டாதிருந்த போதிலும் பௌத்தப் பொதுமக்களுஞ் சைவப் பொதுமக்களும் நயினாதீவு தான் பௌத்தர் தரிசித்த புனித தலமெனவும், நாகேஸ்வரி கோயில் கொண்டெழுந் தருளியிருக்கும் அருட்டலமெனவுங் கருதி யாத்திரை செய்கிறார்கள். நயினாதீவு இப்பொழுது நித்திய யாத்திரைத் தலமாகி விட்டது. புத்தபகவான் நாகதீபத்தைத் தரிசித்ததாகக் கூறப்படுங் கதை மகாவம்சத்தில் முதலாவத அதிகாரத்தில் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளது. ('ஸ்ரீலங்கா' - ஜூன் 1952 - பக். 18 -19 ததாகதர் தரிசனம் பார்க்க) மகாவம்சத்தின் தமிழ் ஆக்கத்தினை யான் 'ஸ்ரீலங்கா' பத்திரிகையிலே தொடர்ந்து வெளியிட்டு வருகின்றேன். இரு நாக அரசர் ஒரு மணியாசனத்துக்கு உரித்துக்கொண்டாடிச் சண்டையிட்ட போது கௌதம் புத்தர் வான் வழியாக வந்து பஞ்சசீலத்தை அவர்களுக்குப் போதித்ததாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இச் செய்தி மணிமேகலையிலுங் கூறப்பட்டுள்ளது. இந்நூல் அச்செய்தி மணிபல்லவத்தீவில் நிகழ்ந்ததாகக் கூறுகின்றது.[12]

## மணி பல்லவத்தீவு

மணிபல்லவத்தீவு நாகதீபமாகிய யாழ்ப்பாணமேயென்பது முதலியார் இராசநாயகம், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், பண்டிதர் அ. சிற்றம்பலம் முதலிய அறிஞர்களின் கருத்தாகும். "இம் மணிபல்லவத்தைக் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து அடைய 'ஆறைந்தியோசனை தென்றிசை மருங்கில்' செல்லவிருப் பதாலும்[13] புத்தரின் அடியிணை பதிந்த சமந்தம் என்னும் சமனொளிச் சிலம்பு இதற்கு 'அயலகத்து' இரத்தினதீவத்திலுள்ள தெனப்படுவதாலும்,[14] அச் சிலம்புச்சியிற் சேர்ந்து புத்தரை வழிபாடாற்றினார். பரதகண்டத்துக்கு மீளும் வழியில் மணிபல்லவத்தையுங் கடந்து செல்வர் எனப் படுவதாலும்[15], மணிபல்லவம் நாகதீபமாகிய யாழ்ப்பாணமே என்பது மலையிலக்கு.[16] இதனை முன்னவரா யெடுத்து விளக்கினார். முதலியார் செ. இராசநாயகமவர்கள்.[17] மணிபல்லவமும் ஜம்புகொல பட்டினமும் ஒன்று என்பது **மயிலை சீனி வேங்கடசாமி** அவர்கள் கருத்து.[18] கம்பலச்செட்டி, சாவக நாட்டரசன், மணிமேகலை, ஆபுத்திரன் முதலியோர் மணிபல்லவத்தைத் தரிசித்தனர் என மணிமேகலை கூறுகின்றது. மணிபல்லவம் என்ற தீவில் இருந்து சென்றவர்களே

பல்லவர் என **முதலியார் இராசநாயகம்** குறிப்பிட்டுள்ளார்.[19] இதனை வித்துவான் **மா. இராசமணிக்கம்** அவர்கள் தாம் எழுதிய 'பல்லவர் வரலாறு'[20] எனுஞ் சிறந்த ஆராய்ச்சி நூலிற் குறிப்பிட்டுள்ளார். 'இங்ஙனம் பல்லவர் என்பார் பஹ்லவர் மரபினரே' என்று முடிபு கொண்டவர் பலர் உளர். இலங்கையிற் சிறந்த ஆராய்ச்சியாளராக இருத்த இராசநாயகம் என்பவர், இலங்கையை அடுத்துள்ள மணிபல்லவம் (காரைத்தீவு) பல்லவர் பிறப்பிடமாகும். மணிமேகலையிற் கூறப்பட்டுள்ள சோழனை மணந்த பீலிவளை என்பவள் நாகர் மகள் ஆவாள். அவள் பெற்ற மைந்தனே திரையாற் கடத்தப்பட்டுக் கரை சேர்ந்த முதற் பல்லவன். அவன் தொண்டைக்கொடியாற் சுற்றப்பட்டு இருந்தமையின் **தொண்டைமான்** என்றும், திரைகளால் உந்தப்பட்டு வந்தமையின் திரையன் என்றும் வழங்கப்பெற்றான். அவன் மரபினரே தம் தாயகப் பெயரைத் தாங்கிப் (மணி பல்லவம்) பல்லவர் எனப்பட்டனர். பல்லவர் முதல் அரசன் பெரும்பாணாற்றுப்படையிற் புகழப் பெற்ற **தொண்டைமான் இளந்திரையன்** ஆவன் என விளக்கியுள்ளார்.'"

யாழ்ப்பாணம், யாழ்ப்பாண மக்களால் மணிபுரம் எனப்படுகிறது. அங்கு நாகரும் இருந்தமையால் மணிநாகபுரம் என்னும் பெயர் பெற்றது. இந்தியாவிலிருந்து இலங்கை நோக்கி வருபவர்க்கு யாழ்ப்பாணம் ஒரு போது (போத்து .Sprout) போலக் காணப்படுதலின், அது போது (போத்து) எனப்பட்டது. **போது, போத்து, பல்லவம்** என்பன ஒரே பொருளைக் குறிப்பன. யாழ்ப்பாணத்திலிருந்து, போந்தவராதலின், தம்மைப் **'போத்தர்'** என்னும் **'பல்லவர்'** என்றும் பல்லவ அரசர் கூறிக்கொண்டனர். **மணிபல்லவம்** என்னும் தீவு மணிமேகலையிற் குறிப்பட்டிருத்தல் காண்க. இவற்றை நன்கு ஆராயின், **பல்லவம்** எனுஞ் சொல் மணிமேகலை காலத்து மக்கட்கு விளங்கி இருத்தல் புலனாகும். பல்லவத்திலிருந்து வந்தவர் பல்லவர் என்று தம்மைக் கூறிக் கொண்டமை இயல்பே. அன்றோ?[21] வீரகூர்ச்சன், நாகர் மகளை மணந்து அரசு பெற்றான் என்று பல்லவர் பட்டயம் கூறுதலும், கரிகாலன் நாகர் மகளை மணந்து பெற்ற இளந்திரையன் தொண்டைமண்டலம் ஆண்டான் என்பதும் ஆராய்ச்சிக்குரியன. மேலும் பல்லவர் இன்ன இடத்திலிருந்து தாம் வந்ததாக ஒரு பட்டயத்திலுங் கூற்றிலர் என்பது கவனிக்கத்தக்கது. முதலியார் இராசநாயகம் அவர்கள் பல்லவ உற்பத்தி பற்றி விரிவான கட்டுரையொன்று தமிழிலும் வெளியிட்டுள்ளார்கள்.[22] நயினாதீவு தான் எனக் கொள்வதில் விவாதத்துக்கிடமின்று.

## நாகநயினர்தீவு

மாநாய்கர் எனும் வணிகரே நயினாப்பட்டர் அல்லது நாயினார்பட்டர் என்பவரை நாகபூஷணி அம்பாள் ஆலய அர்ச்சகராகக் கொணர்ந்தார்

என்பது ஐதிகம். எனவே அவர் வாழ்ந்த தீவு நாகநயினார்தீவு அல்லது நாகநயினாதீவு, நயினாதீவு என்றாயிற்று எனக் கூறப்படுகின்றது.

**'நச்சுவிழி நாட்டியஞ்செய் வோர்கள் தானும்**
**நாகநயி னாதீவில் வாழு வோரும்'**

என **வையா பாடலில்** நாகநயினாதீவு என்ற பெயரே குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம். நாகர் தாம் வழிபட்ட நாகத்தை நாகநயினார் நாகதம்பிரான் எனப் போற்றியிருத்தல் கூடுமாதலின், அத்தெய்வம் கோயில்கொண்டெழுந்தருளிய தலம் நாகநயினார்தீவு, நயினாதீவு எனப் பெயர்பெற்றதாகவுங் கூறஇடமுண்டு.

## மணித்தீவு

சக்தி பீடங்கள் அறுபத்து நான்கனுள் புவனேஸ்வரி பீடமும் திரிபுரபைரவி பீடமும் மணித்தீவிலுள்ளன என்று **பிரபஞ்ச உற்பத்தி**[23], **யாமளதாண்டகம்**[24] முதலிய நூல்கள் குறிப்பிடுவதாலும், நயினாதீவிலுள்ள அம்பாள் ஆலயமே ஒரு சக்திபீடமாகக் கருதி வழிபாடியற்றப்பட்டு வருகின்றமையாலும், நயினாதீவு மணித்தீவு எனவும் பெயர் பெறலாயிற்று. புவனேஸ்வரியின் மகத்துவத்தை அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் பக்தி சிரத்தையுடன் விரிவாக எழுதியுள்ளார்.[25] எனினும் கோயிற் கட்டியத்தில் அம்பாள் நாகராஜேஸ்வரி என்றே போற்றப்படுகிறாள். அம்பாள் அநேக அம்சங்கள் உடையவள். யார் யார் எந்த அம்சத்தை விசேடமாகப் பெற விரும்புகின்றனரோ அதற்கேற்ற தேவியம்சத்தைப் பெரிதும் போற்றி வணங்குகின்றனர். உற்று நோக்குமிடத்து, பிரபஞ்சத்தைத் தோற்று வித்து நடாத்துகின்ற பராசக்தி பரசிவத்தின் வேறானதன்று என்பது புலப்படும். விளக்கும் ஒளியும் போல சக்தியும் சிவமும் ஒன்றே.

**"அருளது சக்தி யாகும்**
**அரன்தனக்கு அருளை யின்றித்**
**தெருள்சிவம் இல்லை அந்தச்**
**சிவம்இன்றிச் சக்தி இல்லை'**

எனச் **சிவஞானசித்தியா**ரிற் கூறியிருப்பதை நோக்குக.

## நாகதீவயின

தீவயின[26] என்னும் சிங்களப் பதம் தீவு என்னும் பொரு ளுடையது. துவீப என்னும் சமஸ்கிருத பதத்துக்குச் சகோதரத்து வமுள்ளது. யாழ்ப்பாணத்துத் தீவுகளைக் குறித்த சிங்களச்சொல் இ∴தே என்பதற்கு

**நம் பொத்த** என்னும் சிங்கள நூல் சான்றாகும். நயினாதீவின் பழைய சிங்களப்பெயர் நாகதீவயின. அதற்கு நாகர் தீவு என்பது அர்த்தமாகும். நயினா ஒருவன் பெயர். நயினாப்பட்டர் எனப் பெயரிய ஓர் இந்திய பிராமணோத்தமர் பண்டு நயினாதீவிலே மாநாய்க்கன், மாசாத்துவன் என்னும் நாமதேய முயை இளங்கோக்களினாலே இயற்றுவிக்கப்பட்ட நாகராஜேஸ்வரி கோவிலுக்கு ஆதிபுசகராய் அமர்த்தப்பட்டார் என்பது ஐதிகம். நயினாகட, நயினாவெல நயினாமடம் முதலியதான நாமங்களை நோக்குக.

## ஹார்லெம்

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் தீவுகளெல்லாவற்றிற்கும் ஒலல்ாந்த தேசப் பெயர்கள் இடப்பட்டன. நயினாதீவுக்கு ஹார்லெம்[27] என்றும், காரைதீவுக்கு அம்ஸ்ரடாம்[28] என்றும், அனலைதீவுக்கு றொற்றர்டாம்[29] என்றும், புங்குடுதீவுக்கு மிடில்பேர்க்[30] என்றும், நெடுந்தீவுக்கு டெல்வ்ற்[31] என்றும், ஊராத்துறைக்கு கைற்ஸ்[32] என்றும்,வேலணை அல்லது தண்ணித் தீவுக்கு லைடின்[33] என்றும் பெயர்கள் கொடுக் கப்பட்டன.

## நரித்தீவு

ஆங்கிலேயர் இலங்கையை வெற்றி கொண்டபோது இலங்கையிற் சத்தியவேதத்தைப் போதித்துவந்த பல்டேயல் பாதிரியார்[34] எழுதிய இலங்கைச் சரித்திர நூலில் நயினாதீவு என்றால் நரிகள் வாழுந்தீவு என்ற பொருளுடையது என்று குறிப்பிட்டுள்ளார். பாதிரியார் நயினாதீவு எப்படி ஏற்பட்டது என்று யாரையாவது வினாவிருத்தல்கூடும். அது சம்புத்தீவு என்று பழங்காலத்தில் அழைக்கப்பட்ட தென்ற விடை கிடைத்திருக் கலாம். சம்பு என்றால் என்ன என்று பாதிரியார் கேட்டிருக்க வேண்டும். யாரோ ஒருவர் சம்பு என்றால் நரி என்று விடைபகர்ந்திருக்கலாம். அந்நியரான பாதிரியார் அந்தக் கருத்தை உடனே தனது குறிப்புப் புத்தகத்தில் எழுதிக்கொண்டார் போலும்.

## படகுதுறை

நயினாதீவு பண்டைக் காலத்திற் சிறந்த துறைமுகமாகவும் விளங்கிற்றெனச் சரித்திரம் பேசுகின்றது. அந்நிய நாடுகளுக்குக் கப்பல்கள் செல்லும் பாதையில் நயினாதீவு இருக்கின்றமையால், தமிழ் நாட்டுக் கப்பல்களும் அந்நிய நாட்டுக் கப்பல்களும் இத்துறையிற் றங்கியே சென்றிருக்க வேண்டும். இத்தீவின் மேற்குக் கடற்கரையிற் படகுதுறை என்ற பெயரால் ஓர் இடம் இன்னும் அழைக்கப்படுகின்றது.

மேற்குப் பகுதிக் கடல் மிக ஆழமாகவும் பெரிய கப்பல்கள் போக்கு வரவு செய்யக்கூடியதாகவும் இருக்கின்றது. கற்பாறைகளில் மோதுண்டு கப்பல்கள் உடைவது முண்டெனக்கருத இடமுண்டு. நாகபூஷணி யம்மன் கோயிலுள்ள சிலாசாசனமும் இக்கொள்கையினை வலியுறுத்துகின்றது.

## நயினாதீவுச் சிலாசாசனம்

நாகபூஷணியம்பாள் கோயிலின் கீழைக்கோபுர வாயிலில் இந்தச் சிலாசாசனம் காணப்படுகின்றது. நல்லூர் **சுவாமி ஞானப்பிரகாசர்** அவர்கள் 1922ம் ஆண்டு மாசி மாதம் நயினாதீவுக்கு சென்ற பொழுது, சாசனக்கல்லை அக்கோயிற் பூசகர் **பிரம்மஸ்ரீ நா. சாமிநாகக்குருக்கள்** அவர்களுடைய உத்தரவோடு புரட்டுவித்துப் பின்னர் **திரு. லோசன்** எனும் பிரதிமைப்படக்காரரைக் கொண்டு கழுவி நன்றாக உரோஞ்சிக் கழுவிப் புகைப்படம் எடுப்பித்துக்கொண்டு திரும்பினார்கள்.[35] இந்தப் படத்தை **முதலியார் இராசநாயகம்** அவர்கள் சுவாமி யாரிடமிருந்து பெற்று முழுச்சாசனத்தையுந் தெளிவாக வாசித்துத் தமது 'புராதன யாழ்ப்பாணம்' எனும் நூலிற் பதிப்பித்தார். யாழ்ப்பாணச் சரித்திரத்திற்கரிசனை கொள்ளுமாறு எனக்கு ஊக்கமளித்த இவ்விரு அறிஞர்களின் உதவியால் இந்தச் சாசனத்திலுள்ள வரலாற்றுக் குறிப்புத் தமிழகத்துக்குக் கிடைத்துள்ளது. அந்தக் சாசனம் பின்வருமாறு.

ஊராத் துறையிற் பரதேசிகள் வந்து இருக்கவேணுமென்றும் இவர்கள் ரக்ஷிப்படவேணுமென்றும் பு(து) துறைகளில் பரதேசிகள் வந்த(ாலித்) துறையிலே(ல) சந்திக்க(ே)வேணு மென்றும் நா(வாய) ஆனை குதிரை யொடு(ம்) பண்டார சேவைக்கு ஆனை குதிரை கொடு வந்த மரங்கலங் கெட்டதுண்டாகில் நாலத் தொன்று பண்ட(ா)த்துக்கு கொண்டு மூன்று கூறும் (உ) டையவனுக்கு விடக்கடவதாகவும் - வாணிப ம்ரக்கலங்கேட்ட துண்டாகில் செமபாகம் பண்டாரத்துக்குக் கொண்டு செமபாகம் உடையவனுக்கு விடக்கடவதாகவும் இவ்வயவஸதை......... தித்து ...................... தனையுங்கல்லிலுஞ் செம்பிலும் எழுத்து வெட்டுவித்து இவ்வயஸதை செய்து கொடுத்து தேவ பராக்கறம் பூஜோ...........

இந்தச் சிலாசாசனம் மகாபராக்கிரமவாகுவால் 12ஆம் நூற்றாண்டிற் பழைய எழுத்துக்களிற் செதுக்கப்பட்டுள்ளது. நெடுந்தீவு, நயினாதீவு ஆகியவற்றை அடுத்துள்ள கடற்பகுதி களிற் கப்பல்கள் அடிக்கடி சேதமுற்றன என்பது இதனால் அறியக்கிடக்கின்றது. மேலும் வருடந்தோறும் 60 கப்பல்கள் சேதமடைவதாக ஜோன் எனும் கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர் குறிப்பிட்டுள்ளாரென **முதலியார் இராசநாயகம்**

அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். நயினாதீவின் தென்பகுதி மலையடிவாரம் என்றழைக்கப்படுகின்றது. ஊர்காவற்றுறை யிலிருந்து நெடுங்தீவுக்குச் செல்லும் வத்தைகள் ஏழாற்றுப் பிரிவினையும் 'மலையடி' யை யடுத்துள்ள கொந்தளிப்பான சமுத்திரத்தையுந் தாண்டிச் செல்லவேண்டும். நாவாய்கள் தம்முடன் மோதும் அலைகளினால் மேலெழும்பிக் கீழே விழும்பொழுது அவற்றினுள்ளே இருக்கும் பிரயாணிகள் பெருங் கஷ்டப்படுவது வழக்கம். இரண்டு தீவுகட்கிடையே செல்லும் கடற்பகுதியை ஓர் ஆறாகக் கருதி, ஏழு தீவுகட்கிடையே செல்லும் ஏழுகடற் பகுதிகளையும் ஏழு ஆறுகளாகக் குறிப்பிடும் மரபினை ஆதாரமாகக் கொண்டு, ஏழாற்றுப் பிரிவு என்ற பெயர் ஏற்படலாயிற்று. அம்பிகையின் சந்நிதியை யடையமுன்னர் ஏழாற்றுப் பிரிவினைக் கடத்தல் வேண்டும். நெடுங்தீவுக் கடலிற் கப்பல்கள் சேதமடைவது சர்வ சாதாரண மென்பதற்கு வைபமாலை யுடையார் குறிப்பிட்டிருப்பதும் தக்க சான்றாகும். "வட இலங்கையைச் சங்கிலி அரசன் ஆட்சி புரிந்த காலத்தில் நாற்பத்தொன்பது வன்னியர்மார் தென்னாட்டிலிருந்து மரக்கலமேறி வருகையில் நெடுந்தீவிற் கடலில் அமிழ்ந்துபோயினர் என்ற[36] குறிப்புக் காணப்படுகின்றது.

## சீனத்துச் சாடிகள்

சில ஆண்டுகளுக்கு முன் பப்பரவன் சல்லி என்னுங் காணியிற் கிணறு ஒன்று தோண்டியபோது அழகான சில சாடிகள் கண்டெடுக்கப்பட்டன. இவற்றுட் சிலவற்றைத் திரு. வி. செல்லத்துரை அவர்கள் 1937ஆம் ஆண்டில் கொழும்பு நூதனசாலைக் கனுப்பிவைத்த பொழுது, அவை சீனதேயத்துச் சாடிகள் எனவும் 12ஆம் நூற்றாண்டிற் செய்யப்பட்டவையா யிருத்தல் கூடும் எனவுங் குறிப்பிட்டு இத்தகைய சாடிகள் இன்னுங் கிடைத்தால் தங்கட்கு அனுப்பிவைக்குமாறு நூதனசாலை அதிகாரி கேட்டுக்கொண்டார். எனவே பன்னிரண்டாம் நூற்றாண்டிலும் சீனாவுக்கும் நயினாதீவுக்கும் தொடர்பு இருந்தது என்பது புலனாகின்றது. இத்தகைய சாடிகளை நயினாதீவில் இன்றுங்காணலாம். இவற்றில் தீட்டப்பெற்ற வர்ணங்கள் சிறிதும் சிதையாமல் இருப்பது வியப்பை விளைவிக்கும்.

## பௌத்த விகாரை

நயினாதீவிற் பழைய விகாரை யொன்றிருந்த தெனக் கருத இடமுண்டு. இந்த விகாரை யிருந்த இடம் புத்தர் கோயிலடி என்று அழைக்கப்பட்டு வருகின்றதென முதியோர் கூறுவர். இவ் விகாரையிருந்த இடத்துக் கண்மையில் ஒரு பொய்கையிருந்த அடையாள முண்டெனவும், அதுவே கோமுகி யெனப்பட்ட தெனவுங்

கூறுவர். நயினாதீவில் கடற்கரையோரத்தில் இப்பொழுது ஒரு புத்தவிகாரை கட்டப்பெற்றுள்ளது. அநேக பௌத்தர்கள் இந்தக் கோயிலுக்குச் சென்று வழிபடுகின்றார்கள். நயினாதீவு இப்பொழுது பௌத்த யாத்திரைத் தலமாக விளங்குகின்றது.

## கற்சில்லு

கோயில் வீதியில் கற்சில்லும் இரண்டு பீரங்கிகளும் கிடக்கின்றன. இந்தப்பீரங்கிகள் ஒல்லாந்தர் காலத்தனவா யிருத்தல் கூடும். இவை இத்தீவின் அயலிலுள்ள ஆழ் கடலில் இருந்தெடுக்கப்பட்டன. கற்சில்லு கப்பல்களின் நங்கூரமாய் உபயோகிக்கப்பட்டிருத்தல் கூடும். போர்த்துக்கீசர் ஆட்சிக் காலத்திற் கடலுள் உருட்சிவிடப்பட்ட தேர்களின் சில்லுகளுள் ஒன்றாக இருக்கலாம் எனச் சிலர் கருதுகின்றனர்.

ஒல்லாந்தர் காலத்திலும் ஆங்கிலேயர் காலத்திலும் நயினாதீவை யடுத்து கடலிற் சங்கு குளித்தல் நடைபெற்றது. இதனால் அரசாங்கத்துக்குப் பெரும் ஊதியம் கிடைத்து வந்தது. இப்பொழுது இது நடைபெறுவதில்லை. முன்னர்க் குறிப்பிட்ட காலத்திற் சங்கு குளிப்பதற்காக வந்திருந்த முஸ்லிம்கள் வணங்கும் பொருட்டு ஒரு பள்ளிவாசல் கட்டப்பெற்றுள்ளது. அதற்கருகில் முஸ்லிம் பெரியார் ஒருவருடைய சமாதியும் உண்டு.[37]

## மணிமேகலா தெய்வம்

மணிமேகலா தெய்வம் இத்தீவுகளைப் பாதுகாத்து வந்த தென்ற ஐதிகம் ஒன்றுண்டு. மணிமேகலா தெய்வமானது அரக்கர் வாதைபண்ணாதபடி இந்திரன் ஏவலாலே சில தீவுகளைப் பாதுகாத்துக் கொண்டிருந்தது. கோவலன் தன் குலத்தன் ஒருவனை இத்தெய்வம் கடலிற் பாதுகாத்த நன்றிக்காகத் தன் புதல்விக்கு மணிமேகலை யென்று பெயரிட்டான். இந்த மணிமேகலையை உபவனத்திலிருந்து மணிப்பல்லவங் கொண்டு சென்று புத்த பீடிகைக் காட்சியாற் பழம் பிறப்புணர்த்திற்றென மணிமேகலை யெனும் காப்பியம் கூறுகின்றது.

## தலத்தைத் தரிசித்தோர்

மணிபல்லவத்திற் சிறந்த துறைமுக மிருந்தமையால் மேனாட்டு வணிகரும் தமிழக வணிகரும் தங்கள் பிரயாணத்தின் போது இத்தீவினைத் தரிசித்தனர். மேலும் பல ஞானிகளும் அடியார்களும் காலத்துக்குக்காலம் இத்தலத்தைத் தரிசித்து வந்தனர். "சாவகநாடு

(ஜாவாதீவு), காகநாடு(பர்மாநாடு) முதலிய கீழ்நாடுகளுக்குத் தமிழ் நாட்டிலிருந்து வாணிகத்தின் பொருட்டு மரக்கலம் ஓட்டிச் சென்ற தமிழ்வணிகர், இடைவழியிலே மணிபல்லவத் துறை முகத்தில் தங்கிச்செல்வது வழக்கம். இதனை மணிமேகலை 14ஆம் காதையினால் அறியலாம். கம்பளச்செட்டி என்பவன் கடலிற்சென்று வாணிகம் செய்து திரும்பிவருகிற வழியில் மணிபல்லவத்தலே தங்கினான் என்றும், சாவநாட்டரசன் புத்தரது பாதபீடிகையை வணங்க மரக்கலம் ஏறி மணி பல்லவம் வந்தான் என்றும் மணிமேகலை கூறுகிறது."[38] மணிமேகலை என்பவளும் ஆபுத்திரனும் மணிபல்லவத்துக்கு வந்த செய்தி மணிமேகலையில் விபரமாகக் கூறப்பட்டுள்ளது.

கிறித்துவுக்கு 1500 ஆண்டுகளுக்கு முன் வட இந்தியா விலிருந்து அரசாண்ட பாண்டவர்களில் ஒருவனாகிய அருச்சுனன் தீர்த்தயாத்திரை காரணமாக மணபுரத்துக்கு வந்து அங்கே சித்திராங்கதை யென்னும் நாககன்னிகையைக் கண்டு காதல் கொண்டு மணமுடித்தான் என்று மகாபாரதம் குறிப்பிடுகின்றது.

கி.பி 150 - 200 வரை ஆண்ட **நெடுமுடிக்கிள்ளி** என்னும் சோழ அரசன் யாத்திரை காரணமாக மணிபல்லவத்திற்கு வந்து **வளைவணன்** என்னும் நாகவரசன் மகள் **பீலிவளை** என்பாளை மணந்து ஓர் ஆண்மகவைப் பெற்றான். சோழ வரசன் இப்பேரழகு வாய்ந்த பெண்மணியை ஓர் ஆதொண்டைச் செடியின் அருகே தான் முதன்முதலாகக் கண்டானாம். பீலிவளை தான் பெற்ற மகனைப் **கம்பளச்** செட்டியென்னும் வணிகனிடம் கொடுத்து, அவள் தந்தையிடம் சேர்க்கும்படி கையடையாகக் கொடுத்தாள். அச் செட்டியேறிப்போந்த கப்பல் காற்றினால் அடிபட்டுக் கரையிலேற்றப்பட்டு உடைந்து பிள்ளையுந் தவறிப் போனபடியால்,

**'கெடுகல மாக்கள் புதல்வனைக் கெடுத்தது**
**வடிவேற் கிள்ளி மன்னனுக் குரைப்ப**
**மன்னவன் மகனுக் குற்றது பொறாஅ**
**னன்மணி யீழந்த நாகம் போன்று**
**கானலுங் கடலுங் கரையுந் தேர்வழி"**

தொண்டைக் கொடியாற் சுற்றப்பட்டுக் கரையிலிருந்த புதல்வனைக் கண்டெடுத்துத் தொண்டைமான் இளந்திரையன் எனப் பெயர் வகித்துக் தக்க பருவத்திலே தனதரசுரிமையினொரு பகுதியை அவனுக்குக் கொடுத்துக் காஞ்சிபுரம் என்னும் நகரிலிருந் தரசாளும்படி வைத்தான். அவன்ர சாண்ட பூமி **தொண்டைமண்டலம்** எனப் பெயர் பெற்றது."[39] இவனுக்கு ஆதொண்டைச் சக்கரவர்த்தி என்னும் பட்டம் சூட்டப்பட்ட தெனவும் கூறுவதுண்டு. இவ்வாறு வணிகர், யாத்திரிகர், சித்தர்,

ஞானியர் முதலியோர் இத்தலத்தைத் தரிசித்துள்ளனர்.

## நயினாதீவுச் சுவாமியார்

நயினாதீவுச் சுவாமியார் என்று வழங்கப்பெற்று வந்தவராகிய முத்துக்குமார சுவாமியெனும் துறவியானவர் நயினாதீவிற்றான் பிறந்தார். சுவாமியவர்கள் துறவுக்கோலம் பூண்டு நைட்டிகப் பிரம்மசாரியாக வாழ்ந்து வந்தபடியால் அவர்கள் நயினாதீவுக்கு மட்டுமன்றிச் சைவ உலகம் அனைத்துக்கும் உரியவராவர். அவர் தோன்றிய பூமி நற்றவம் மிக்க நயினாதீவு எனினும், அவருடைய சீடர்கள் தீவுப் பகுதியிலும் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உண்டு. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக் கண்மையிலுள்ள சிவலிங்கப்புளியடி என்னுமிடத்தில், முன்னாள் கல்விப்பகுதியில் வேலை பார்த்த என் நண்பர் திரு. எஸ். சிவசுப்ரமண்யம் அவர்கள் இல்லத்தில் சுவாமியவர்களைக் காணும் பாக்கியம் அடியேனுக்கு இடைக்கிடை கிடைத்தது. "நயினாதீவுச் சுவாமி களிடத்து விளங்கிய தெய்வபக்தி, ஞானம், தூய்மை, மன அடக்கம், இன்சொல், அருளோடுகூடியநோக்கு, எந்தநேர முஞ் சிவசிந்தனை, இன்னலுற்றுத் தம்மையடைந்தார்க்குச் சொல்லும் தேறுதல் வாக்கு, தவக்கோலம், கோபம் முதலிய தீய குணங்கள் அறிவேயில்லாமை முதலிய சுகுணங்களோடு தூய செயல்களை யுடையவர் என்று அவருடைய சீடர்களில் ஒருவர் கூறினார். 1949ஆம் ஆண்டில் சுவாமியவர்கள் இயற்கையுடன் கலந்தார்கள். ஞானிகளுடைய வரலாறுகளை ஞானிகள் தாம் அறிந்து கொள்ள முடியும். இவர்களிற் சிலருக்கு விசரர் என்ற பட்டத்தையுஞ் சூட்டியது உன்மத்த உலகம்.

> **'பாலரொடு பேயர்பித்தர் பான்மையென நிற்பதுவே**
> ***சீலமிகு ஞானியர்தஞ் செய்கை பராபரமே'***

என்று ஞானியார்களின் செய்கையைக் குறிப்பிடுகின்றார் தாயுமான சுவாமிகள்.

> **'ஞாலமதின் ஞானநிட்டை**
> **யுடையோ ருக்கு**
> **நன்மையொடு தீமையிலை**
> **நாடுவதொன் றில்லை**
> ***சீலமிலை தவமில்லை***
> **விரதமொடாச் சிரமச்**
> **செயலில்லை தியானமிலை**
> **சித்தமல மில்லை**
> **கோல மிலை புலனில்லை**

கரண மில்லை
குணமில்லை, குறியில்லை
குலமு மில்லை
பாலருடன் உன்மத்தர்
பிசாசர்குண மருவிப்
பாடலினொ டாடலிவை
பயின்றிடினும் பயிர்வர்.'

என **அருணந்திதேவரும்** அறுதியிட்டுக் கூறியுள்ளார். எனவே சுவாமியவர்களைப் பற்றி எழுதுவதற்கு அவருடைய அணுக்கத் தொண்டரே அருகராவர். சுவாமியாரின் சமாதி காட்டுக் கந்தசுவாமி கோயில் கருப்பக்கிரகத்துக்குப் பின் புறமாக உண்டு. இதற்கண்மையில் **ஸ்ரீசத். சித்திரமுத்து அடிகளால்** அத்திவார மிடப்பட்டு திரு. சபாதிபதிப்பிள்ளை அவர்களுடைய பொருளுதவி கொண்டு கட்டிமுடிக்கப்பெற்ற திருவருள் ஒளிநிலையமும் உண்டு.

நயினாதீவிற் புராதனப் பெருமையும் பக்திப் பெருக்கமும் உள்ள நாகேஸ்வரி ஆலயத்தைத் தவிர வேறு பழைய கோயில் களும் உண்டு. இத்தீவின் தென்புறத்திற் காணப்படும் காளிகோயிலும் மிகத் தொன்மை வாய்ந்ததெனக் கருதப்படு கின்றது. யாழ்ப்பாணத்திலிருந்த கடையிற் சுவாமிகள் இந்தக் கோயில் உள்ள தில்லைவனத்தில் திரிவது வழக்கம் எனவும், தில்லைக்காளியே இங்கு எழுந்தருளியிருக்கின்றாள் எனச் சுவாமிகள் அடிக்கடி கூறிவந்தார்கள் எனவும் திரு. கா. ஆறுமுகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். 1882இல் தயாரிக்கப்பட்டு யாழ்ப்பாணக் கச்சேரியில் வைக்கப்பட்டுள்ள பழைய கோயிற் பதிவு டாப்பில் நயினாதீவில் அப்பொழுது நாகபூஷணி அம்மன் கோவில், இளைய பண்டாரம் அல்லது முருகமூர்த்தி கோயில், ஐயனார் கோயில். முருகமூர்த்தி கோயில், பிடாரி கோயில், காளி கோயில் எனக் கோயில்கள் பதியப்பட்டுள்ளன.

நயினைம்பதியிலிருந்து நாற்றிசையும் ஆளும் அகிலலோக நாயகியான நாகபூஷணி அம்பாள் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தின் சிறப்பினைச் சிறிது நோக்குவோம்.

## அடிக்குறிப்பு

1. யாழ்ப்பாணச் சரித்திரம் - பக்இ 1 - 2
2. ஆத்மஜோதி - சோதி 3: சுடர் 5. பக். 148 - 149
3. யாழ்ப்பாண வைபவ விமர்சனம் பக். 22
4. Nagadipa - by Mudaliyar A. M. Gunasekara - Royal Asiatic

Society (C.B) Ceylon Notes and Queries P. CXXI - CXXIV.
5. Nagadipa & Buddhist in Jaffna - by Dr. P. E. Peiris, R. A. S. C B. Vol. XXVIII - No. 70 Part 1 (1917), Vol. XXVIII - No. 72 (1919)
6. Eprigraphia Zeylanica - Vol. IV part 5 - Vallipuram Gold Plate Inscripation of the Reign of Vasabha PP. 229 - 237
7. A Short History if Ceylon - by -H.W. Codrington P.8
8. வல்லிபுரக்கோயிற் பொற்சாசனம் - 'தமிழ்மாணவன்' வரைவது - இக் கட்டுரையை (ஈழகேசரி - 6.11.38) எழுதியவர் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் **டாக்டர் க. கணபதிப்பிள்ளை** அவர்கள் போலும்.
9. ஈழகேசரி 14.3.37 - பக். 13 பார்க்க. இக்கட்டுரையாசிரியர், 1928 ஆம் அண்டு 'ஒற்றுமை' எனும் பத்திரிகையின் நாகரைப் பற்றி எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையின் முக்கிய பாகத்தையும் எடுத்துக்காட்டியிருத்தல் பாராட்டத்தக்க தொன்று.
10. ஈழத்தில் இயற்றப்பெற்ற நாடகங்கள் வெடியரசன் நாடகம் - வெள்ளவத்தை மு. இராமலிங்கம், இந்துசாதனம் 4.10.43.
11. இந்நூலின் கையெழுத்துப் பிரதியை எனக்குப் பார்க்கத் தந்துதவிய என் அருமை நண்பர் சோம. சரவணபவன் அவர்களுக்கு நன்றி செலுத்துங் கடப்பாடுடையேன். வெடியரசன் நாடகப் பிரதியொன்றைத் தேடுமாறு என்னைத் தூண்டியதும் இவரிடம் யான் கண்ட நாடகப் பிரதியேயாகும்.
12. மணிமேகலை - VIII 1-2, 43 - 63.
13. மணிமேகலை - VI - 211 - 212
14. மணிமேகலை - XI - 21 - 26.
15. மணிமேகலை - XXVIII - 107 - 109
16. R.A.S. CA - N.70
17. யாழ்ப்பாண வைபவ விமர்சனம் - பக். 23 - 24
18. மணிபல்லவம் - ஜம்புகொல பட்டினம். ஈழகேசரி 26.6.49.
19. Indian Antiquary - Vol. iii - pp. 75 - 80
20. பல்லவர் வரலாறு - வித்துவான் மா. இராச மாணிக்கம், பக். 25-26
21. Mysore Gazetteer - Vol.II Part - pp. 515 - 517.
22. பல்லவ உற்பத்தி - C. இராசநாயக முதலியார் 'செந்தமிழ்' தொகுதி 21 - பக். 205- 216.
23. பிரபஞ்ச உற்பத்தி - சிறுமணவூர் முனிசாமி முதலியார் - பக். 460.
24. யாமளாதண்டகம் - ஸ்ரீ சதாசிவ ஐயர் தமிழாக்கம் மல்குமணித்தீவில் எனுந் தொடரினை நோக்குக.
25. புவனேசுவரி மகத்துவமும் திருவூஞ்சலும் - அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்.
26. வடமாகாணத்துள்ள சில இடப்பெயர்களின் வரலாறு -

தெல்லிப்பழை ஸ்ரீ ச. குமாரசாமி, பக். 112.

27 Haorlem

28. Amsterdam

29. Rotterdam

30. Middlebury

31. Delft

32. Kayts

33. Leyden

34. A Description of Ceylon by Baldeus.

35. நயினாதீவுச் சிலாசாசனத்தைச் சுட்டிய சில குறிப்புக்கள் - நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், ஈழகேசரி 21.2.37.

36. யாழ் வைபவமாலை - **பக். 60.**

37. Ceylon by Bertolacci pp. 274 - 276.

38. மணிபல்லவம் - மயிலை சீனி வேங்கடசாமி ஈழகேசரி 26.6.49.

39. யாழ். சரித்திரம் - முதலியார் இராசநாயகம் **பக். 17-18.**

# நாகஸ்வரி ஆலயம்

## ஐதீகங்கள்

எவர் எவர் எந்த எந்த மார்க்கத்தைக் கைக்கொண்ட போதிலும் இறுதி இலட்சியம் ஒன்றுதான் என்பதை உணர்த்தும் தலங்கள் இக்காலத்தில் உலகெங்கணும் இருக்கத்தான் செய்கின்றன. எங்கள் சிறிய இலங்கையிலும் கானக மத்தியில் விளங்கும் **கதிர்காமம்**, வானுறவோங்கும் **சிவனொளிபாதம்**, வங்கம் மலி மாதோட்டத்துத் **திருக்கேதீச்சரம்**, கோயிலுஞ் சுனையுஞ் கடலுடன் சூழ்ந்த **கோணேச்சரம்,** வடிவாம்பிகையின் அருள் பெருகும் **முன்னேஸ்வரம்,** புலநரிச் **சிவன்கோயில்கள்,** கொழும்பு **மாரியம்மன் ஆலயம், பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம்,** வட இலங்கையிலுள்ள **செல்லச்சந்நிதி,** நயினாதீவிலுள்ள **நாகேச்சரம்** ஆகியன சைவர் மட்டுமன்றிப் பிறமதத்தினரும் வழிபடும் பெருமை வாய்ந்தனவாய் அமைந்துள்ளன.

## யாரே கூற வல்லார்.

நயினாதீவிலுள்ள நாகேஸ்வரி அல்லது நாகபூஷணி அம்பாள் ஆலயம் எப்பொழுது தோன்றியது? யார் தாபித்தது? அது எவ்வாறு விருத்தியடைந்து புகழ் பெற்றது? என்றின்னோரன்ன வினாக்களுக்கு ஆராய்ச்சியாளர் திருப்தி யடையக் கூடியதாக விடை கூறுஞ் சரித்திர நூல்கள் இல்லை. எனவே, செவி வழிவரும் கதைகளைக் (கன்ன பரம்பரை) கொண்டும், பிற்காலத்தவர் ஆங்காங்கு எழுதிய குறிப்புக்களைக் கொண்டும் இத்தலத்தின் பூர்வீக வரலாற்றினையும் பெருமையையும் ஓரளவுக்கு யூகிக்க முடியுமேயன்றி நிதார்த்தமாக அதுபற்றிக் குறிப்பிடத் துணிய வொண்ணாது.

"இலங்கா தீபத்தின் உத்தரபாகமாகிய யாழ்ப்பாணத் தைச் சார்ந்த தீவுகளிலொன்றாகிய நயினார் தீவிலே சகல லோகநாயகராகிய சிவபெருமானோடு அக்கினியும் வெம்மையும் போலப் பின்னமற்று விளங்கிய பராசக்தியாகிய அம்பிகை மெய்யன்பர்களுடைய வழிபாட்டையேற்று அவர்கள் வேண்டிய வேண்டிய வரங்களை யெல்லா மீந்தருளும் பொருட்டு ஸ்ரீ நாகபூஷணியம்மை என்னுந் திருநாமமுடையராய் எழுந்தருளி இங்கே வசிப்பவர்களுக்குப் 'பாலினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்து' திருவருள் பாலித்தும் பிறவூர்களில் வசிப்பவர்களுக்குச் சொப்பனத்திற் றோன்றித் தம்மை வந்து தரிசிக்கும்படி உணர்த்தியும் பல அற்புதங்களைப் பிரத்தியட்சமாகக் காட்டியும் **அடித்தடித்து வக்கார முன்றீற்றிய வற்புதமாக** அவர்களை வலிந்தாட் கொண்டும் விளங்குங் கருணைத் திறம் இவ்வளவிற்றென்று கூறுதற்கரிது.

மகோற்சவ காலங்களிலும் ஏனைய காலங்களிலும் பல ஆயிரக்கணக்கினராக யாழ்ப்பாணத்திலும் பிறவிடங் களிலுமுள்ள அன்பர்கள் வந்து வழிபாடு செய்து அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகையினைச் சார்ந்த பேறுகளையெல்லாம் வேண்டி வேண்டியவாறே பெற்று வருதல் எவரும் நன்கறிந்த உண்மையேயாம்.

"இத்தகைய திருவருட் பெருங் கொடையாளராகிய ஸ்ரீ நாகபூஷணியம்மை எழுந்தருளி யிருக்கும் ஆலயம் முதன் முதல் எக்காலத்தில் எவரால் ஆக்கப்பட்டதென அறியப்படாப் புராதனமுடையது. இந்தியாவிலுள்ள சிவஸ்தலங்கள் போல முற்காலத்தில் சிவசந்நிதி தேவிசந்நிதி

முதலியவற்றையும் ஏழு பிரகாரங்களையும் கோபுரங்களையும் கொண்டு விளங்கியது. செம்பினால் ஆக்கப்பட்ட தேரொன்றும் பவளரத்தினம் இழைத்துச் செய்யப்பட்ட தேரொன்றும் இங்கே யிருந்தன. ஒரு சர்ப்பம் இங்கே நெடுநாள் வசித்துத் தவஞ் செய்து தனது சாபம் நீங்கப் பெற்றது. அதனைத் தமது திருமேனியில் அணிந்து சாப நிவிர்த்தி செய்தருளியமையாற்றான் இங்கு எழுந்தருளிய அம்பிகை நாகபூஷணியம்மை யென்னுந் திருநாமம் உடையராயினர்." இவ்வாறு நயினார்தீவு **தியாகர் இராமச்சந்திரர்** பூர்வீகக் கதைகளைப் பயபக்தியுடன் குறிப்பிட்டுள்ளார். ஆதிசேடன், அனுமான், அருச்சுனன், இராவணன் முதலியோர் நாகபூஷணி அம்பாளை வழிபட்டனர் என்பது செவி வழிவரும் செய்தியாகும். ஆபுத்திரன், மணிபல்லவத்திற் பட்டினி கிடந்து உயிர் துறந்த வரலாறு மணிமேகலையில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

## நாகம் அர்ச்சனை செய்தது.

முன்னொரு காலத்தில் நயினாதீவிலுள்ள அம்பிகையை ஒரு நாகம் பூசித்து வந்ததாம். ஒரு நாள் அந் நாகம் அர்ச்சனை செய்தற் பொருட்டுப் பூக்கள் கொய்து கொண்டு புளியந்தீவிலிருந்து மீளும் வழியில் ஒரு கருடன் அதனைக் கொல்லும் பொருட்டு எதிர்த்து வந்தது. கருடனைக் கண்டஞ்சிய நாகம் கடற்கரைக்குச் சமீபத்தி லிருந்த கல்லொன்றினைச் சுற்றிக் கொண்டிருந்தது. கருடனும் அந்த நாகத்தைக் கொல்லாமலும் அதனை விட்டகலாமலும் அதற்கெதிரேயிருந்த கல்லொன்றின் மீது இருந்தது. இங்ஙனம் இவையிரண்டும் பகைமை கொண்டிருக்கும் சமயத்தில், அக்கடல் வழியாக மரக்கலத்திற் சென்ற வைசிகன் ஒருவன் (மாநாய்கன் என்பர் சிலர்) அந் நாகத்தின் பயத்தைக் குறிப்பாலுணர்ந்து, மரக்கலத்தை நிறுத்தி அக் கருடனை விலகும்படி கேட்டான். "உனது செல்வம் யாவற்றையும் கொணர்ந்து நாகம்மாள் கோயிலுக்குக் கொடுப்பாயானால் விலகுவேன்" என்றது கருடன். வணிகனும் அங்ஙனமே செய்தான். நாகமும் தனது நன்றியைச் செலுத்தி நயினாதீவை அடைந்தது. வணிகனும் தனது நாட்டுக்குத் திரும்பினான். நடந்தவற்றையெல்லாம் தன் மனையிடங் கூறினான். அன்றிரவு வணிகனும் மனைவியும் நித்திரை கொள்ளும் பொழுது ஒரு பேரொளி தோன்றி அவர்களுடைய கண்களைச் சிறிதுநேரம் கூசச் செய்தது. பின்பு அவர்கள் எழும்பிப் பார்த்தபொழுது நாகரத்தினக்

கற்கள் அவ்வறையிலே இருப்பதைக் கண்டார்கள். நயினாதீவிலுள்ள அம்பிகையின் திருவருள் இருந்தவாறென்னேயென அவர்கள் வியப்புற்று நயினாதீவுக்கு யாத்திரை செய்யப் புறப்பட்டார்கள். அவர்கள் நயினாதீவுக்குச் சென்று வடகிழக்குக் கடற் கரையில் நாகம்மாளுக்குச் சிறந்ததோர் ஆலயம் கட்டு வித்தார்கள்.

ஏழு வீதிகளும் கோபுரங்களும் அமைத்தார்கள். **நயினார்பட்டர்** எனும் பிராமண குருவைப் பூசகராக நியமித்தார்கள். இத் தீவுக்கருகில் இப்பொழுதும் பாம்பு சுற்றிய கல், கருடனிருந்த கல் என இரு கற்களைப் பக்தர்கள் காட்டுகின்றார்கள். இக் கற்கள் அலைகளினால் மோதுண்டு இயற்கையாகப் பெற்ற வடிவங்களை ஆதாரமாகக் கொண்டு மேற்கூறிய கதைகள் உருவாகி யிருத்தலும் கூடும்.

## நயினாப்பட்டர்

நாகபூஷணி அம்மாள் கோயிலுக்குப் பூசகராக வந்த நாயனார்பட்டர் அல்லது நயினார்பட்டர் நயினார்தீவு தெற்கு மண்ணிப்புளி என்னும் இடத்தில் வாழ்ந்தனர் எனவும், அது இக்காலத்தில் பட்டர் வளவு என அழைக்கப்படுகின்ற தெனவும் **திரு.சு. ஐயாத்துரைச் சோதிடர்** அவர்கள் கூறுகின்றார்கள்.[2]

## வீராசாமிச் செட்டியார்

மேற்கூறிய மாநாய்கரின் வழித் தோன்றலாகிய **வீராசாமிச் செட்டியாரும்** வியாபாரத்தின் பொருட்டுப் பிரயாணஞ் செய்யும்பொழுது நாகபூஷணி அம்பாளை வழிபட்டுச் செல்வது வழக்கம். அம்பாளும் அவருக்குக் காட்சி கொடுத்து அனுக்கிரகஞ் செய்தபடியால் இவர் அம்பாள் கோயிற் திருப்பணியில் ஈடுபட்டார் என்பது ஐதிகம்.

வெடியரசனுடைய கதையும் ஆதொண்டைச் சோழனுடைய கதையும் ஏற்கெனவே கூறப்பட்டுள்ளன.

## நாகேச்சரம்

பண்டொருஞான்று ஈழநாட்டில் நயினாதீவு எனப்படும் நாகேச்சரத்தில் அல்லது நாகேஸ்வரத்தில் அம்மன் சந்நிதியும் சுவாமி சந்நிதியும் வெவ்வேறாக இருந்தன வென்றும்,

நாகேச்சரத்து அப்பன் **நாகேஸ்வரன், நாக ராஜேஸ்வரன், நாகதம்பிரான், நாகநயினார்** எனவும், தேவி **நாகேஸ்வரி, நாகராஜேஸ்வரி, நாகராசேசுவரி, நாகபூடணி, நாகம்மாள்** எனவும் அழைக்கப்பட்டனர் என்றும் பல நூல்கள் குறிப்பிடுகின்றன. அன்றியும் அப்பனும் அம்மையும் கோயில்கொண் டெழுந்தருளியிருந்த ஆலயம் ஏழு வீதிகளையும் கோபுரங்களையுங் கொண்டதாகவும் விலையுயர்ந்த தேர்களை யுடையதாகவும் இருந்தது என்பது செவி வழிவரும் செய்தியாகும்.

## நாக வழிபாடு

இப் புனித ஆலயம் சரித்திர காலத்துக்கு அப்பாற்பட்ட நாக வழிபாட்டை எடுத்துக் காட்டும் சின்னமாக அமைந்துள்ளது என்ற கருத்தொன்றும் உண்டு. இக்கருத்தின் பிரகாரம் இலங்கையில் இப்புனித ஆலயத்தைப் போன்ற தொன்மை வாய்ந்த ஆலயம் பிறி தொன்றில்லையெனலாம். மூலஸ்தான விக்கிரகத்தின் அமைப்பைப் பார்த்தால் அது ஆயிரம் வருடங்களுக்கு முந்தியதாகப் புலப்படுகிறது. ஆனால் நாகப்பிரதிஷ்டை இதற்கு முன்னால் ஏற்பட்டிருக்கலாம். மூலஸ்தான விக்கிரகத்துக்குப் பின்னர் உள்ள நாகபடம் பார்க்கப் பயங்கரமாகவிருக்கிறது. சீறுவது போல இருக்கிறது என்று காரைக்குடி எம். செல்லக்கண்ணு ஸ்தபதியார் குறிப்பிட்டுள்ளார்.[33] இந்துமதச் சரித்திரத்தில் நாகபாம்பு ஓர் உன்னத ஸ்தானத்தை வகித்து வந்துள்ளது. இன்னும் வகித்து வருகின்றதென்று கூடச் சொல்லலாம். நாக வழிபாட்டைப் பற்றி முன்னரே கூறியுள்ளாம். "நாகதீவில் மூலஸ்தானத்தில் அம்மன் உருவம் போல இருப்பது பழைய நாகப் பிரதிஷ்டையே. இது மிகவும் தேய்ந்து அம்மன் உருவம் போலத் தெரிகிறது. இதற்குப் பின்னால் ஐந்தலை நாகப் பிரதிஷ்டை ஒன்றுண்டு. இந்தியாவிலும் நாக வழிபாட்டுக்கே பிரத்தியேகமாகவுள்ள இவ்வளவு புராதன கோயிலைக் காண்பதரிது. கலப்பற்ற தூய்மையான நாக வழிபாட்டைப் பண்பினை நயினாதீவிற் காணலாம். சரித்திர காலத்துக்கு எட்டாத காலந் தொடக்கமுள்ள கோயில் இது என்பது புலனாகின்றது" என்று இத் தலத்தைத் தரிசித்த தென்னிந்திய சிற்ப சாத்திர வல்லுநர் திரு. எம். நரசிம்மன் அவர்கள் தமது கருத்தை வெளியிட்டிருக்கின்றார்கள்.[14] உயிருள்ள நாகபாம்பு வழிபாடுகூட நயினாதீவில் இருந்த தெனச் **செல்வ". சீ. எவ். கோர்டன் கம்மிங்**[15] குறிப்பிட்டிருப் பதாக வண. ஜேம்ஸ்

காட்மன்[6] எடுத்துக் காட்டியுள்ளார். மணமுடித்து நெடுங்காலமாகப் பிள்ளைப்பாக்கியம் இல்லாதிருக்கும் பெண்மணிகள் நாகராஜனை வழிபட்டு, நாகப் பிரதிஷ்டை செய்தால், கைமேற் பலன் உண்டாகும் என்ற நம்பிக்கை நம் மக்களிடையேயுண்டு. நயினாதீவில் வேப்பமரத்தடியிலுள்ள நாகப்பிரதிஷ்டை இதனை வலியுறுத்துகின்றது.

## கோயிலை இடித்தல்

புராதனப் பெருமைவாய்ந்த நாகேஸ்வரி ஆலயம் வர்த்தகரின் பொருள் கொண்டு விஸ்தரிக்கப்பட்டு விளங்குவதைக் கண்ட போர்த்துக்கீசர் இதனைச்சும்மா விட்டு வைப்பார்களா? இந்த ஆலயத்தில் உள்ள பொருள் பண்டத்தை அபகரிக்கும் பேராசைபிடித்த போர்த்துக்கீசர் இதனை அழிக்கத் தொடங்கினர். கோயில் தரைமட்டமாக்கப் பட்டது. இந்த வன் கணாளரின் கொடிய செயலைக் கண்டு சைவ மக்கள் அனலிடைப்பட்ட புழுப்போலத் துடிதுடித்தனர். தாங்கள் பக்தியுடன் வழிபட்டுவந்த மூர்த்திகளையும் பூசைப் பாத்திரங்களையும் தேர்களையும் அந்நியர் தீண்டக்கூடா தெனக் கருதிய சைவ நன்மக்கள் அவற்றை வெவ்வேறிடங் களில் ஒளித்து வைத்தார்கள். அம்பாளை மேற்குக் கடற்கரையிலுள்ள ஓர் ஆலமரப் பொந்தில் வைத்து வழிபட்டு வந்தனர். இந்த மரம் "அம்பாள் ஒளித்த ஆல்" என வழங்கப்பட்டதென ஓர் ஐதீகமுண்டு. அந்தியர் கோயிலை இடித்த போதிலும் அம்பாள் வழிபாட்டை நிறுத்த முடியவில்லை. அவள் நயினாதீவு மக்கள் ஒவ்வொரு வருடைய உள்ளமாகிய பெருங்கோயிலில் உறுதியான இடம்பெற்று விளங்கினாள். அந்திய மதத்தினர் இன்னல் செய்தவிடத்தும் நயினாதீவு மக்கள் சைவப்பற்றினைக் கைவிடவில்லை யென்பதனை அது உறுதிப்படுத்துகின்றது. இக்கோயிலை அந்தியர் அழிக்க வந்தபொழுது கோயிற் தேர் தானாகவே உருண்டு மேற்குற் கடலில் ஆழ்ந்து விட்டதாம். ஒரு சமயம் அக்காலச் சைவமக்கள் அதனைக் கடலினுள் தள்ளிவிட்டிருத்தலுங்கூடும். சிற்சில காலங்களில் தேர்முடி கடலில் பௌர்ணமித் தினத்தில் தெரிகிறது என்ற கதையும் அடிக்கடி கேட்கப்படுவதுமுண்டு. இது பண்டைக் காலத்தில் தேர் முதலிய கடலினுள் தள்ளப்பட்ட நிகழ்ச்சியின் எதிரொலியாக இருக்கலாம். இவ்வாலயத்திற்குச் சமீபமாகவிருக்கும் தென்னந் தோப்புக் களிற் சில விடங்களிற் கிண்டிப் பார்த்தபொழுது, தரையின கீழ் பழைய கட்டடங்கள் காணப்பட்டன. திருக்குளமொன்று வெட்டியபொழுது கோயிற் பூசைக்குரிய வெண்கலப் பொருட்கள் சில வெளிக்கிளம்பின.

## கோயிற் புனரமைப்பு

டச்சுக்காரர் ஆட்சியின் பின்னர் நயினாதீவில் மீண்டும் நாககேஸ்வரி ஆலயம் சிறிய அளவிற் கட்டப்பெற்றது. எனினும் அங்கே தாபிக்கப்பெற்றிருந்த சிவலிங்கத்தைச் சைவர்கள் தாம் மறைத்து வைத்திருந்த இடத்திற் காணாமையாற் பெரிதுங் கவலைகொண்டார்கள். எனினும் நயினாதீவுக்கு வடபால் உள்ள புலியேத்தி அல்லது புளியந்தீவு எனும் சிறுதீவில் பழைய சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதாகக் கேள்வியுற்ற சைவர்கள் ஒருவாறு மனந்தேறினார்கள். இக்கோயில் நாக தம்பிரான் கோயில் என அழைக்கப்படுகின்றது. புலியேத்தி யிலுள்ள நாகதம்பிரான் கோயிலிலே தாபித்திருக்கும் சிவலிங்கம் நயினாதீவு நாகேஸ்வரி ஆலயத்தின் சுற்றுப் பிரகாரத்தில் முன்னரே பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த சிவலிங்கங்களுள் ஒன்றாயிருத்தல் கூடும் என்ற கொள்கையும் உண்டு.

டச்சுக்காரர் ஆட்சிக்குப் பின்னர் நாகேச்சரத்தில் தேவி ஆலயமே முதன்மை பெற்றுளதெனக் கருத இடமுண்டு. அற்றன்று, பண்டுதொட்டு இது தேவியாலயமாகவே விளங்கிற்று என வாதிப்பாரு முளர்.

## இப்போதுள்ள கோயிலமைப்பு

நயினாதீவின் கிழக்குத் திசையிற்றான் துறைமுகம். இத்துறைமுகத்திலிருந்து செல்லும் பாதை அம்பாளின் கீழை வீதிவரை சென்று பின்னர் தெற்கு நோக்கிச் செல்கின்றது. எனவே நயினாதீவுத் துறைமுகத்தில் வந்து இறங்குகின்ற சகலரும் அம்பாளிடம் விடை பெற்றே ஊருக்குள் உலாவவேண்டும் என்ற முறையிற் கோயிற் கிழக்கு நோக்கிய சந்நிதியுடையதாய்க் கட்டப்பட்டுள்ளது. யாத்திரிகர் நாவாயில் வரும்பொழுதே தூரத்தில் தூலலிங்க மாகிய கோபுரத்தைத் தெரிசித்து அம்பாளுடைய புனித தலத்திற் கால் வைக்கின்றனர். கோயிலும் அதனை சார்ந்த நிலமும் 150 லாச்சம் விஸ்தீரணமுள்ளது. கோயிலும் வீதியும் 15 பரப்பு வரை இருக்கும். மூர்த்தி தலம் தீர்த்தம் எனு மும்மையானும் சிறந்து விளங்குவது இந்த நாகேஸ்வரி ஆலயமாகும். கோயிலுக்குத் தென்புறத்திலும் வடபுறத்திலும் தீர்த்தம் உண்டு.

## இராமலிங்கம் இராமச்சந்திரர்

யாழ்ப்பாணக் கச்சேரியில் சைவசமயக் கோயில் களைப் பதிவுசெய்து வைத்திருக்கும் பழைய இடாப்பு ஒன்று உண்டு. இது 1882ஆம் ஆண்டளவில் தயாரிக்கப்பட்டது. அதில் இந்த நாகபூஷணி அம்பாள் ஆலயத்தைப்பற்றி எழுதப்பட்டிருக்கும் விபரம் பின்வருமாறு.

## நாகபூஷணி அம்மன் கோயில்

இராமலிங்கர் இராமச்சந்திரர் 1788இல் கட்டியது. மனேசச்சர், இராமலிங்கர் கார்த்திகேசரும் பிறரும், கல்லுக் கட்டடம்.

திருவிழா ஆண்டுக்கொருமுறை ஆனி 10ஆந் தேதி தொடக்கம் 20ஆந் தேதி வரை 10 நாட்கள் திருவிழா.

கோயில் வீதியில் மக்கள் அம்பாளைக் காவிக் கொண்டு வலம் வருதல் அல்லது தேரில் வலம் வருதல்.

திருவிழாக்காலங்களில் 10,000 பேர்வரை வரு கின்றனர். யாழ்ப்பாணத்திலும் அயலிலுள்ள தீவுகளிலுமிருந்து யாத்திரிகர் வருகின்றனர்.

மேலே குறிப்பிடப்பட்ட இராமச்சந்திரரின் ஆண் சந்ததியினரே இக்கோயில் மனேச்சராக இருந்து வருகின்றனர் எனச் சொல்லப்படுகின்றது.

காலத்துக்குக்காலம் இக்கோயிலில் அநேக திருப்பணிகள் நடைபெற்று வந்துள்ளன. திருக்கோயிலின் கீர்த்திக்கியைய வானுற ஓங்கிநிற்கும் கோபுரமொன்று கிழங்கு வாயிலில் அமைக்கப் பெற்றுள்ளது. இத் திருப்பணியில் வட்டுக்கோட்டையைச் சார்ந்த இரகுப்பிள்ளை மணியம் அவர்கள் அதிக அக்கறை எடுத்து வந்தார்கள். பின்னர் வேலணைச் சோமசுந்தரமணியம் அவர்களும் இத்திருப்பணியில் ஈடுபட்டுழைத்தனர். இந்தக்கோபுரம் 1935ம் ஆண்டளவிற் கட்டப்பெற்றது. இந்தக் கோயில் ஏனைய சாதாரண கோயில்களைப் போலவே கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் முதலியவற்றைக் கொண்டுள்ளது. கோயிலின்

தென்புற உள்வீதியில் தேவஸ்தான அலுவலகம் உண்டு. மேற்கு வீதியில் பிள்ளையார் கோயில் வாகனசாலை, சுப்பிரமணியர் கோயில் என்பவை உண்டு. கிழக்கு வீதியில் நவக்கிரகங்கள், வைரவர் கோயில் முதலியன உண்டு. தேரோடும் வெளிவீதியில் வேப்பமரங்கள் காணப்படுகின்றன. மேலும் சில முக்கியமான கோவில் அமைப்பும் தோற்றமும் புறச்சூழ் நிலைக் கட்டுமானங்களும் விபரமாக தரப்படுகின்றன.

## விமானப் புனரமைப்பு

நாகபூஷணி அம்பாள் கோயிலின் விமானப் புனரமைப்பு வேலையை, ஸ்தபதிகள் பரம்பரையில் உதித்த வரும் சிற்பத் தொழிலில் புகழ் பெற்றவருமாகிய காரைக் குடி திரு. எம். செல்லக்கண்ணு ஸ்தபதியார் 1951ஆம் ஆண்டு தை மாதம் மேற்கொண்டார். பாண்டிய நாட்டுச் சிற்ப முறையில் இரண்டு நிலை விமானம் அமைக்கப்பட்டது. அம்பாள் கோயிலின் விமான வேலையை முடித்த பின்னர் பரிவார மூர்த்திகளின் பண்டிகைகளும் திருத்தியமைக்கப் பட்டன. 26.4.51 இல் ஸ்ரீ நாகபூஷணாம்பிகை புனராவர்த்தன சம்புரோக்ஷண மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது. அப்பொழுது வெளிவந்த விஞ்ஞாபனப் பத்திரிகையில் இந்தத் தலத்தின் பெருமை இரத்தினச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. அது பின்வருமாறு.

ஸ்ரீ விராட்புருடனது சரீரமாகிய பிரமாண்டத்தின் இடை நாடிக்கு ஸ்தானமென்று சாந்தோக்கியம் முதலிய உபநிஷத்துக்களிலே எடுத்தோதப் பெற்றதும், இவ்விலங்கா தீபத்தின் கண்ணே அனேகம் சிவஸ்தலங்களோடு கூடியதும், வடமேற்றிசையில் ஆழிய சாகரம் மத்தியில் தோன்றி சப்தத்வீபங்களுட் சிறப்புற்று விளங்கும் நயினார்தீவில் இற்றைக்குப் பல்லாயிரம் வருடங்களுக்கு முன் சர்வலோக ரக்ஷகியாகிய உமையம்மையாருக்குப் பிரபல வாசஸ்தானங்களா யமையப்பெற்ற அறுபத்து நான்கு பீடங்களுள் ஒன்றாயதும், நாகர்களினால் பூஜிக்கப் பெற்றதும் அருச்சுனன் முதலிய அரசர்களால் தரிசிக்கப் பெற்றதும் அருச்சுனன் முதலிய அரசர்களால் தரிசிக்கப் பெற்றதும், சிவானுபூதிச் செல்வர்களாலும் பிறராலும் சிவபூமி, சுவர்ணபூமி, புண்ணிய பூமி அனுக்கிரக ஸ்தலம் என்று வியந்து கூறப்பெற்றதும், இவ்விலங்கா தேவியின் பராசக்திக்கு முக்கிய ஸ்தானமாகவுள்ளதும்,

சர்வான்மாக்களுக்கும் மனோபீஷ்டப்படி அனுக்கிரகிக்கும் சர்வரோக நிவாரணியும், ஆன்மாக்களது தியானாதி களுக்குத் தாம் அகப்படுதல் வேண்டுமென்னுந் திருவருளி னாலே சக்தி காரியமாகிய உருவத் திருமேனி கொண்டு திவ்விய மந்திர சிம்மாசனத்தின் மீது ஸ்ரீ நாகராஜேஸ்வரி எழுந்தருளியிருக்கும் திருக்ஷேத்திலே................"

சிலாபத்திலுள்ள முன்னேஸ்வரத்தில் வடி வாம்பிகைக்கு ஸ்ரீ சக்ரபூசை நடாத்தி வந்த பிரமஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்களின் சீடராகிய நயினாதீவு பிரமஸ்ரீ சுவாமிநாதக் குருக்கள் அவர்கள் சக்ர பூசையை நாகேஸ்வரி ஆலயத்திலும் ஆரம்பித்து வைத்தார்கள். குருக்கள் அவர்கள் கோயிற் கிரியைகளைப் பயபக்தியுடனும் முறை பிறழாமலும் செய்வதைப் பார்த்துக் கொண்டிருப்பவர் உள்ளத்தில் பக்தி தானாகவே அரும்பிவிடும். இவரிடம் கற்ற நயினாதீவு பிரமஸ்ரீ கயிலாயநாதக் குருக்கள் அவர்களும் கோயிற் கிரியைகளை முறையாகச் செய்வதிற் பிரசித்தி பெற்று விளங்குகின்றார்கள்.

## தியானஞ் செய்வதற்கேற்ற ஆலயம்

"அந்தராத்ம யோகத்தில் ஈடுபட்டவர்களுக்குத் தியானஞ் செய்வதற்குத் தகுந்த சூழ்நிலையை நயினாதீவு அம்பாள் கோயிற் சுற்றாடலிற் காணலாம். நாலா பக்கமும் கடலினாற் சூழப்பட்டு அழகிய சிறு தீவாக நயினாதீவு விளங்கிறது. பௌர்ணமித் தினத்தன்று நடுநிசியின் போது ராஜகோபுரத்தின் கீழமர்ந்து தியானஞ் செய்தால் பயங்கர மானதொரு தெய்வீகசக்தி நம்முள் இறங்குவதை உணரலாம். பயங்கரமான அச்சக்தி இருப்பதற்கு நம்மிட முள்ள குறைபாடுகளே காரணமாகும். சுயநல வழிகளில் அகம்பாவத்துடன் செல்லும் நம் மனசானது, சக்தி வாய்ந்த தெய்வசாந்நித்தியத்துடன் சம்மதப்படும்பொழுது ஒருவித அதிர்ச்சியை அடைகிறது. இந்த அதிர்ச்சியானது 'நான்' என்ற அகம்பாவத்தை ஈடாடச் செய்வதற்கே ஏற்படுகிறது. "நான்' என்ற உணர்ச்சியைப் பரித்தியாகஞ் செய்ய நாம் இலேசில் இடங்கொடுப்பதில்லை. ஆனால் 'நான்' என்ற உணர்ச்சி அற்றுப் போகாத விடத்துத் தெய்வ அருள் கிட்டாது.[7] சித்தர்களும் யோகிகளும் இந்தச் சூழ்நிலையைப் பெரிதும் விரும்பிச் செல்கின்றார்கள்.

## ஆலய பூஜையும் விழாவும்

உஷத்காலம், காலைசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தசாமம் என ஐந்து கால நித்திய பூஜை நடைபெறுகின்றது. கோயிலுக்கென நித்திய மேளம் உண்டு. சிவன், அம்பாள், விநாயகர், சுப்பிரமணியர், விஷ்ணு முதலிய ஐவரின் பூஜைத் தினங்கள் ஒவ்வொரு மாதத்திலும் நடைபெறும். ஆனி மாதத்தில் மகோற்சவம் நடைபெறும். புரட்டாதியில் நவராத்திரி பூஜை சிறப்பாக நடைபெறும். பகலிற் சங்காபிஷேகமும் இரவில் ஸ்ரீசக்கர பூஜையும் நடைபெறுவதுடன், விஜயதசமியன்று அம்பாயுத பூசையும், வன்னி விருட்ச பூஜையும் நடைபெறும்.

இவ்வாலயத்திற் பாரம்பரியமாகச் சந்தான கோபாலப் பிரதிஷ்டை செய்து அளவிறந்த பக்தர்கள் புத்திர சந்தான முடையவர்களாய் மீண்டும் அம்பாள் தரிசனை செய்து விலைமதித்தற்கரிய திருவாபரணம், வாகனம், தீபம் முதலிய வற்றைக் காணிக்கையாகக் கொடுத்திருக்கின்றனர். இந்தக் கோயிலில் அழகிய கைலாச வாகனம், சர்ப்ப வாகனம், காமதேனு வாகனம் முதலியன உண்டு. இவை யாவும் பக்தர்கள் காணிக்கையாகக் கொடுத்து உதவியனவாகும்.

## ஆலய நிர்வாகம்

யாழ்ப்பாணத்திலுள்ள சைவக் கோயில்களுக்குச் சாதாரணமாக ஏற்படும் நோய்கள் அம்பாள் ஆலயத்தையும் விட்டுவிடவில்லை. ஆலய நிருவாகம் சம்பந்தமாக வழக்குகள் தொடரப்பட்டன. ஆனால் இப்பொழுது நிர்வாகப் பொறுப்பு ஒன்பது அங்கத்தவர்களைக் கொண்ட தர்மகர்த்தா சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக ஆலய நிர்வாகஞ் சீராகவுஞ் சிறப்பாகவும் நடைபெறுகின்றது.

## அடிக்குறிப்பு

1. நயினார்தீவ க்ஷேத்திர வைபவம் - தியாகர் இராமச் சந்திரர். - பக். 3 - 5
2. நயினார்தீவு என வழங்கும் நாகதுவீபமகத்துவம் - க. ஐயாத்துரைச் சோதிடர். - பக். 6 - 7
3. நயினாதீவில நிகழும் நாகபூஷணி அம்பாள் ஆலயம் - 'சாது' எழுதிய வீரகேசரி, 11.3.1951
4. The Religious Associations of this Island are probably much earlier than the date of the Buddha - 'Nagadipa and Buddhist Remains in Jaffna' - by Dr. P. E. Peris, RASCB No. 70p. -13.
5. Two Happy Years in Ceylon - Miss C.F Gordon Cumming. - Vol. 1. p. 127.
6. Hinduism in Ceylon - by Rev. James Cartman. - p.84.
7. நயினாதீவில் நிகழும் நாகபூஷணி அம்பாள் ஆலயம் - 'சாது' -

# பசுமை படர்ந்த நினைவலைகள்

**(அன்று முதல் இன்று வரை (1944 முதல் 2002வரை)**

தொகுப்பு: **திரு.கா.ஆ.தியாகராஜா**

(தலைவர் அறங்காவலர் சபை நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்)

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம் பற்றிய வரலாற்று வெளியீடுகள் அவ்வப்போது வெளிவந்துள்ளன. ஆய்வுக் கட்டுரை களாகவும் பலர் வெளியிட்டுள்ளார்கள். நாம் வாழும் சுற்றுச் சூழல் பற்றியும், புராதன கோவில்கள், வரலாற்று இடங்கள் பற்றிய அறிவுதேடும் ஊக்கம் சிறுவர் முதல் பெரியவர் வரையும் சிறப்பாக புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்களிடமும், மிக்க ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை இங்கு வருகை தரும் அடியார்கள் மூலமும், சுற்றுலா வரும் மக்கள் மூலமும் அறிந்து கொண்டதன் காரணமாக "நாகம் பூஷித்த நயினை நாகபூஷணி" என்ற முன்னைய வெளியீட்டை மீளவும் புதிப்பித்து மேலும் சில தகவல்களுடன் வெளியீடுவதில் கோவில் அறங்காவலர் சபையினர் மகிழ்ச்சி கொள்கின்றனர். எமது இந்தப் பணிக்கு ஊக்கம் தந்தவர்கள் அன்னையின் அடியவர்கள் தான் என்றால் அது மிகையாகாது தகவல்கள் அதாவது 1944 ம் ஆண்டு வரையான காலப்பகுதி வரை ஆலய அமைப்பும், கட்டுமான நிலைப்பாடுகள் பற்றியும், 1944 முதல் 2002 வரையான காலப்பகுதியில் உள்ள நிர்வாக, திருப்பணிகள் பற்றிய விபரங்களும் இக்காலத்தில் நடைமுறையில் இருந்து வருகின்ற இரண்டு நடைமுறைத் திட்டங்களின் படி பணியாற்றிய அறங்காவலர் விபரத்தையும் இத்தகைய திருப்பணிகள் எந்த எந்த காலப்பகுதியில் நடைபெற்றன என்ற விபரங்களையும் பின் இணைப்பாகத் தந்துள்ளேன். நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் அறங்காவலர் சபையின் தலைவர் என்ற வகையில் ஆலய பரிபாலனம் பற்றிய சில முக்கிய விடயங்களை இன்றைய சமுதாயமும், எதிர் காலச் சமுதாயமும் அறிந்துகொள்ளும் வகையில் வெளிப்படுத்திக்கொள்ளவேண்டி கடமைப்பாடுடையவனாய் உள்ளேன்.

இவ்வாலயத்தில் தொன்றுதொட்டு இருந்து வந்த பரிபாலன முறையில் ஒரு மாற்றம் வேண்டுமென அன்றைய மக்கள் விரும்பினர். இது சம்பந்தமாக 1938ஆம் ஆண்டு எழுந்த கோரிக்கையின் பிரகாரம் 1939ஆம் வருடம் கோவில் நிர்வாகம் சம்பந்தமாக ஆரம்பித்த வழக்கு 1944ஆம் ஆண்டு ஒரு உடன்படிக்கையின் பிரகாரம் முற்றுப்பெற்றது. யாழ் நீதி மன்றத்தால் அங்கீகரிக்கப்பெற்ற யாப்பு விதிகளுக்கு அமைய நான்கு பரம்பரை உறுப்பினர்களும், ஐந்து வழிபடுநர் உறுப்பினர்களுமாக ஒன்பது பேரைக் கொண்ட தர்மகர்த்தா சபை நிர்வாக மாற்றத்தைப் பெற்று பரிபாலனம் செயற்பட ஆரம்பித்தது.

1944ஆம் ஆண்டு தொடக்கம் முதலாவது நிர்வாக சபை ஐந்து வருடங்களுக்கு அதாவது 1949 வரை செயற்பட்டது. இத்திட்டத்திற்கு அமைய ஆலயப் பரிபாலனம் 1976 ஆம் ஆண்டு வரைக்கும் புரிந்துணர்வும், ஆற்றலும் அனுபவமும் உள்ள அறங்காவலர்களால் செம்மையாக நடாத்தப்பட்டதனை யாவரும் அறிவர். 1944 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த நிர்வாகத்தில் இருந்த அனைவரையும் நன்கு தெரிந்து கொண்டவன் என்ற வகையிலும், பின்னர் அவ்வவ்போது தெரிவு செய்யப்பட்டவர்களை நன்கு அறிந்து கொண்டவன் என்ற முறையிலும், அவர்கள் நிர்வாகத்தில் இருந்த பொழுது ஆற்றிய திருப்பணிகளைப் பற்றி இங்கு எடுத்துக்கூற வேண்டியவனாய் உள்ளேன். அத்தோடு இத்திட்டத்திற்கு அமைய தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை நினைவு கூர்ந்து வரிசைக் கிரமமாக இங்கு பட்டியல்ப்படுத்தியுள்ளேன். இங்கே குறிப்பிட்டவர்கள் நிர்வாகத்தில் அங்கம் வகித்திருந்தமை பலருக்குத் தெரியாமலும் இருக்கலாம்.

ஒரு சில அறங்காவலர்கள் யாப்பு விதிகளுக்கு அமைய இரண்டு, மூன்று தடவையும் அறங்காவலர்களாகப் பணியாற்றி யுள்ளார்கள். நிர்வாகத்தின் பொறுப்பான பதவிகளை இரு பகுதியினரும் பகிர்ந்துவிட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் அவ்வப்போது தெரிவு செய்து நிர்வாகமும் சுமூகமான முறையிலும் செயல்பட நடைமுறைப்படுத்தி வந்தார்கள். தலைவர், பொருளாளர் போன்ற பதவிகளை வழிபடுனர்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களே வகித்து வந்தார்கள். செயலாளர் பதவியை பாரம்பரை தர்மகத்தாக்களின் ஒருவர் வகித்து வந்தார். இந்த வகையில் இவர்களிடையே இருந்த வந்த புரிந்துணர்வும், கட்டுக்கோப்பும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் தெளிவாக விளங்கியது. பரம்பரை அறங்காவலர், சபையில் இடம்பெறுவதால் செயலாளர் பதவி அவர்களிடமிருந்தமை நிர்வாக செயற்பாட்டுத் தொடர்புக்கு பொருத்தமானதாகவும் இருந்தது. இவர்களின் நிர்வாகக் காலத்தில் அரிய பல திருப்பணி வேலைகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதனை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

1976ஆம் ஆண்டிலிருந்து 1985ஆம் ஆண்டு வரை நிர்வாகத்துக்குள் ஏற்பட்ட புரிந்துணர்வற்ற தன்மையாலும் அறங்காவலர் சபையை தவிர்ந்த ஒரு திருப்பணி சபையை நிர்வாகம் நடைமுறைப்படுத்த முற்பட்டதனாலும் நிர்வாகம் நீதி மன்றத்தால் உறங்கு நிலையில் வைக்கப்படது. இக்காலத்தில் பெறுநர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் ஆலயம் பரிபாலிக்கப்பட்டு வந்தது. இதனால் ஆரம்பிக்கப்பட்டிருந்த திருப்பணிகள் ஒரு ஸ்தம்பித நிலையை அடைந்திருந்தது.

1985ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஓர் புதிய நிர்வாக திட்டத்தை

நீதிமன்றம் வழங்கியது. இதன் பிரகாரம் 1986ம் ஆண்டு மொத்தம் பன்னிரண்டு பேர் கொண்ட உறுப்பினர்கள் நிர்வாகத்தில் இடம்பெற்றார்கள். அதாவது பரம்பரை உறுப்பினர்களில் நால்வரும், வழிபடுனர் மகா சபையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட (8)எண்மருமாக (12)பன்னிரண்டு பேரைக் கொண்ட புதிய நிர்வாகம் அமைக்கப்பட்டது. இந்த நிர்வாகமே தற்போது நடைமுறையில் உள்ளது.

1944 ஆம் ஆண்டு முதல் 1949 ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருந்த முதலாவது நிர்வாகத்தில் பரம்பரை தர்மகர்த்தாக்களாக முத்துக்குமாரு காசிப்பிள்ளையும், பரமலிங்கம் கந்தசாமியும், வேலுப்பிள்ளை பொன்னம்பலமும், சரவணமுத்து இரகுப்பிள்ளையுமாகிய நால்வருடன் கணபதிபிள்ளை, வேலாயுதபிள்ளை, கதிரித்தம்பி கந்தையா, ஆறுமுகம் நாகலிங்கம், சண்முகம் நாகநாதர் கந்தையா, சின்னத்தம்பி துரைச்சாமி ஆகியோர் வழிபடுநர் மகா சபையின் உறுப்பினர்களாக இருந்து முதல் நிர்வாகத்தை ஆரம்பித்தார்கள். பின்பு முகாமைத் திட்டத்தின் விதிகளுக்கு அமைவாக பரம்பரை முறையில் மு. காசிப்பிள்ளை, பின் கா. ஆறுமுகமும், க. கந்தசாமியின் பின் க. கனகசபாபதியும், ச. இரகுப்பிள்ளையின் பின் இ. தியாகராசாவும், கா. ஆறுமுக த்தின் பின், ஆ. தியாகராசாவும், வே. பொன்னம்பலத்தின் பின் பொ. இராசலிங்கமும், க. கனகசபாபதியின் பின், க. நாகேஸ்வரனும் பரம் பரை தர்மகர்த்தாக்களாக நிர்வாகத்தில் சேவையாற்றியும், சேவையாற்றிக் கொண்டும் உள்ளனர்.இ.தியகராசா தாமாக விலகியதால் அவரின் இடத்திற்கு கு.சரவனபவானந்தன் நீதிமன்றத்தால் நியமனம் பெற்று பரம்பரை அறங்காவலராகி யுள்ளார்.

இதனைத் தொடர்ந்து வழிபடுனர் மகா சபையின் மூலம் தெரிவாகிய உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிந்த பின் தொடர்ந்து யாப்பு விதிகளுக்கு அமைய காலத்துக்காலம் அவ்வப்போது ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவரின் விபரங்கள் இங்கே காட்டப்படுகின்றது. (இணைப்பு II).

1944 ஆம் ஆண்டு முதல் 1986 வரை நடைமுறையிலிருந்த ஒன்பது பேர் கொண்ட அறங்காவலர் சபையில் காலத்துக்காலம் தெரிவு செய்யப் பெற்ற 29 பேர் கடமையாற்றியுள்ளார்கள். (பெயர் விபரம் 01-29) 1987ஆம் ஆண்டு முதல் 12 பேர் கொண்ட புதிய நிர்வாகத்திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. இதன் பிரகாரம் தெரிவுச் செய்யப் பெற்றவர்கள், 2002ஆம் ஆண்டு வரை பெயர், விபரம் 30 முதல் 56 வரையாகும். இவர்களில் எனது நிர்வாக காலப்பகுதியில் என்னுடன் இணைந்து பணியாற்றியவர்களும் இதில் அடங்குவர். இவர்களில் பலர் இரண்டு நிர்வாகத் திட்டங்களிலும் அறங்காவலர்களாகவும் இருந்துள்ளனர். இதனைத் தொடர்ந்து, வழிபடுநர் மகாசபையின் மூலம்

தெரிவாகிய உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிந்தபின், தொடர்ந்து யாப்பு விதிகளுக்கமைய காலத்துக்குக்காலம் அவ்வப்போது ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவரில் விபரம் இங்கே காட்டப்படுகின்றது.(பட்டியல் I)

## மகாசபை உறுப்பினர்

## இணைப்பு I

| இல | பெயர் | முகவரி |
|---|---|---|
| 1 | வ. முருகேசு | நயினாதீவு - 08 |
| 2 | சி. சின்னப்பு | நயினாதீவு - 02 |
| 3 | செ. ஐயாத்துரை | நயினாதீவு - 05 |
| 4 | க. சோமசுந்தரம் | நயினாதீவு - 01 |
| 5 | செ. சிவஞானம் | உதவி அரச அதிபர் |
| 6 | த. கிருஷ்ணசாமி | நயினாதீவு - 08 |
| 7 | வே. சுந்தரம்பிள்ளை | யாழ் விவேகனந்தா அச்சகம் |
| 8 | செ. தில்லையம்பலம் | நயினாதீவு - 02 |
| 9 | த. அமிர்தலிங்கம் | நயினாதீவு - 05 |
| 10 | க. சிவசிதம்பரம் | நயினாதீவு - 04 |
| 11 | க. கனகரெத்திரம் | நயினாதீவு - 02 |
| 12 | க. வே. பரமலிங்கம் | நயினாதீவு - 08 |
| 13 | சு. கதிரேசு | நயினாதீவு - 05 |
| 14 | ஆ. கந்தையா | யாழ் உதவி அரச அதிபர் |
| 15 | வே. கந்தையா | நயினாதீவு - 03 |
| 16 | சி. குமாரசாமி | நயினாதீவு - 05 |
| 17 | த. தம்பிமுத்து | நயினாதீவு - 06 |
| 18 | நா. கணபதிப்பிள்ளை | நயினாதீவு - 03 |
| 19 | ம. ஸ்ரீகாந்தா | யாழ் அரச அதிபர் |
| 20 | வே. செல்வநாயகம் | விவேகானந்தா அச்சககம் |
| 21 | சி. நா. மதியாபரணம் | நயினாதீவு - 08 |
| 22 | நா. க. கதிரவேற்பிள்ளை | நயினாதீவு - 04 |
| 23 | வி. சபாநாதன் | நயினாதீவு - 05 |
| 24 | நா. சிவராசசிங்கம் | நயினாதீவு - 02 |
| 25 | க. இரத்தினசபாபதி | நயினாதீவு - 08 |
| 26 | தி. திருநாவுக்கரசு | நயினாதீவு - 02 |
| 27 | சோ. செல்வரெத்தினம் | நயினாதீவு - 06 |
| 28 | அ. சண்முகநாதன் | நயினாதீவு - 05 |
| 29 | தி. க. மகாலிங்கம்சிவம் | நயினாதீவு - 08 |
| 30 | த. குலசேகரம்பிள்ளை | யாழ் உதவி அரசஅதிபர் |
| 31 | கு. வை. முத்தையா | யாழ்ப்பாணம் |

| | | |
|---|---|---|
| 32 | திருமதி. ம. சிவகாமி | நயினாதீவு - 06 |
| 34 | மு. ச. திருநாவுக்கரவு | நயினாதீவு - 03 |
| 35 | நா. க. குமாரசூரியர் | நயினாதீவு - 02 |
| 36 | தி. பாலசிங்கம் | புங்குடுதீவு - 03 |
| 37 | மு. நவரெத்தினம் | நயினாதீவு - 03 |
| 38 | சோ. ஞானேஸ்வரன் | நயினாதீவு - 05 |
| 39 | பொ. தில்லைநாதன் | நயினாதீவு - 03 |
| 40 | நா. விசுவலிங்கம் | நயினாதீவு - 05 |
| 41 | க. மாணிக்கவாசகம் | நயினாதீவு - 06 |
| 42 | சி. தனபாலசிங்கம் | நயினாதீவு - 03 |
| 43 | ந. விஸ்வநாதன் | நயினாதீவு - 05 |
| 44 | கா. பொ. இ. குலசிங்கம் | நயினாதீவு - 05 |
| 45 | மு. நா. நடராசா | நயினாதீவு - 06 |
| 46 | சி. பரராசசிங்கம் | நயினாதீவு - 04 |
| 47 | நா. சண்முகநாதன் | நயினாதீவு - 04 |
| 48 | ச. தருமராசா | நயினாதீவு - 06 |
| 49 | நா. இராதாகிருஷ்ணன் | நயினாதீவு - 08 |
| 50 | சி. வை. சபாரெத்தினம் | நயினாதீவு - 05 |
| 51 | சி. க. பொன்னையா | நயினாதீவு - 07 |
| 52 | வை. சுப்பிரமணியம் | நயினாதீவு - 02 |
| 53 | இ. பேரின்பநாதன் | நயினாதீவு - 05 |
| 54 | இ. யோகநாதன் | நயினாதீவு - 05 |
| 55 | க. ஜீவசீலன் | நயினாதீவு - 05 |
| 56 | திருமதி. ச. தவமணி | நயினாதீவு - 05 |

இவ்வாலயத்தில் 1951ஆம் ஆண்டு அம்பிகையின் ஆலய விமானங்கள் காரைக்குடி, திரு. எம். செல்லக்கண்ணு ஸ்பதியார் குழுவினரால் புனரமைக்கப்பட்டு 26.04.1951 ஆம் திகதி மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அம்பிக்கைக்கு சித்திரத்திருத்தேர் அமைக்கவேண்டுமென விரும்பிய அப்போதைய வடமாகாண அரசாங்க அதிபருமாகிய திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்களைத் தலைவராக் கொண்டு, தேர்த் திருப்பணிச் சபை உருவாக்கப்பட்டது. 21.08.1955ல் நடைபெற்ற கூடத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஆலோசனையுடனும் அனுசரணையுடனும், தமிழ்நாடு நாகர்கோவில் ஸ்தபதியார் குமாரசுவாமி அவர்கள் தலைமையிலான குழுவினரால் சித்திரத் தேர் வேலை 24.8.1956 இல் ஆரம்பமாகியது. சபையினரின் அயராத முயற்சியினால் செய்து முடிக்கப்பட்ட திருத்தேர் 8.7.1957 இல் வெள்ளோட்டம் விடப்பட்டு, 1957ஆம் ஆண்டு மகோற்வசத்திற்கு அதாவது 11.7.1957 ஆம் திகதி தேர்த்திருவிழாவன்று புதிய தேர் திருவீதியுலா வலம் வந்தது. அன்றைய நாளில் இத்தேர்த் திருப்பணி ஒருபாரிய திருப்பணியாக இருந்தது என்பதையும் நினைவுகூர

வேண்டியவனாயுள்ளேன். தேர்த்திருப்பணி சபையினரால் தேர்த்திருப்பணிச்சபை" மலர் என்ற பெயரில் தரமான மலரொன்றும் வெள்ளோடத்தின் போது வெளியிடப்பட்டது.

பின்பு 1963ஆம் ஆண்டிலும் 1983ஆம் ஆண்டிலும் மகா கும்பாபிஷேகங்கள் சிறப்பாக நடைபெற்றன. இக் கும்பாபிஷேகங்களை முன்னிட்டு அவ்வப்போது பாரிய திருப்பணிகளும் நடைபெற்றுள்ளன. உள்வீதிக் கொட்டகையமைத்தல், உள்வீதித்தளவேலை, வசந்த மண்டபம், வெளிவீதி விஸ்தரிப்பு, புதிய காரியாலயங்கள், சுற்றுப்புற மதில்கள், நிரந்தர மின்விநியோகம், புதிய திருக்குளம், பிள்ளையார், சுப்பிரமணியர் தேர்களும் அம்பிகையின் மஞ்சமும் விடுவதற்கான தரிப்பு மண்டபங்கள் கிரியா மண்டபம், கோபுர மண்டபம், பிள்ளையாருக்கான தேர், சுப்பிரமணியருக்கான தேர், அம்பிகைக்கான திருமஞ்சம், புதிய சப்பரம், தெற்குக் கோபுரம், கல்யாண மண்டபமும், புதிய வாகனசாலை, ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோயில், நால்வர் கோயில், புதிய சகடைகள், புதிய கோபுரக்கதவு, அறுபத்தி மூவர் (நாயன்மார்கள்) சிலைகள் அமைத்தல் போன்ற இன்னும் பல திருப்பணிகளையும் அபிவிருத்தி வேலைகளையும் செய்து முடிப்பதற்கு அம்பாளின் அனுக்கிரகம் கிடைத்தது.(1963-1986)

1991ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதல் யாழ்ப்பாணப் பெருநிலப்பரப்புடன் தீவகம் துண்டிக்கப்பட்ட பொழுது தெய்வாதீனமாக செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலிருந்து கடமை காரணமாக நயினாதீவுக்கு வருகை தந்தேன். அன்றிலிருந்து இங்கேயே தங்க வேண்டிய நிலைப்பாடு ஏற்பட்டது. நவராத்திரித் திருவிழா நடந்து கொண்டிருந்த காலம் அது. தீவுப்பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருந்த மக்களும் ஒரு துர்ப்பாக்கியமான சூழ்நிலைக்குள் அகப்பட்டனர். திருவருள் நினைத்தால் ஆகாதது ஒன்றில்லை என்பதற்கமைய கொழும்பிலிருந்து வந்த பணிப்பின் பெயரில் அடியேன் விடுபட்ட தீவகத்தின் தென்மேற்குப் பகுதியின் பிரதேச செயலாளராகவும் உதவி அரசாங்க அதிபராகவும் நியமனம் பெற்றேன். அத்துடன் சகல திணைக்களங்களின் இணைப்பாளர் பதவியும் என்மேல் சுமத்தப்பட்டது. இந்த நிலையில் தீவக மக்களின் நலன்களைக் கவனிக்கும் பாரிய பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப் பட்டது. இந்நிலையில் 1992ஆம் ஆண்டு முதல் இவ்வாலயத்தின் அறங்காவலர் சபைத் தலைவராகவும் இருக்கவேண்டுமென்ற நியதியையும் அம்பாள் வகுத்துத்தந்தாள். தீவுப்பகுதி மக்களின் நலன்களையும், நிர்வாகம் மற்றய விநியோகங்களையும் கவனிப்பதற்கும், அம்பாளின் நித்திய நைமித்திய கருமங்களை கவனிப்பதற்கும் எனக்குக் கிடைத்த வாய்ப்பு இதுவெனக் கருதி அல்லற்பட்ட தீவக மக்களுக்கு என்னால் ஆன பணியை ஆற்ற முடிந்ததுடன் அன்னையின் சகல கருமங்களும் அவளருளால் தடங்கல் எதுவுமின்றி நடைபெறவும் திருவருள் கூடியுள்ளது.

இக்காலப்பகுதியில் எனக்கு உறுதுணையாக இருந்து என்னுடன் ஒத்துழைத்த அறங்காவலர்களின் சேவையை நான் பாராட்டாது இருக்க முடியாது. தீவகம் துண்டிக்கப்பட்ட நெருக்கடியான சூழ்நிலையில் நித்திய நைமித்தியக் கருமங்கள் முட்டின்றி நடைபெறுவதற்கு உதவிய யாழ் செயலக அதிகாரிகளையும் திருகோணமலை மார்க்கண்டு அன் பிறதர்ஸ் ஸ்தாபனத்தினரையும் திருகோணமலை, காரைநகர் கடற்படைப் பொறுப்பதிகாரிகளையும் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன். எந்த இடர் வரினும் நாள் தவறாது நின்று இக்கால கட்டத்தில் நித்திய பூசைகளை விதி முறைப்படி வழமை போல் செய்து வந்த எங்கள் குருமணி சிவஸ்ரீ சாமி. பாலசுந்தரக் குருக்கள் அவர்களையும், உயர் திருவிழாக்களை அவ்வப்போதுள்ள பல தரப்பட்ட இடையூறுகளையும் தடைகளையும் தாண்டி யாழ் அரச அதிபரின் உதவியுடனும் கடற்படை அதிகாரிகளின் உதவியுடனும் கோப்பாயிலிருந்து வருகை தந்து உயர் திருவிழாக்களைச் செய்து சிறப்பித்த சிவஸ்ரீ.வை.மு. பரமசாமிக்குருக்கள் அவர்களை அம்பாளின் பிரத்தியட்ச ரூபமாக வணங்கி நிற்கின்றேன். அதுமட்டுமன்றி பூசை உரிமைக்குரிய நித்திய பூசகர்கள் கடமைக்கு வராத காரணத்தினாலே அம்பாளின் நித்திய பூசைகள் குறைபாடின்றி நடைபெற வேண்டும் என்ற நல்நோக்கில் தமது மூத்த புதல்வராகிய சிவஸ்ரீ ப. முத்துக்குமார சாமிக்குருக்களை இங்கேயே தங்கியிருந்து சேவை செய்யும்படி பணித்த, அவரின் உயரிய நோக்கத்தையும். தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்றேற்று 1995 ஆம் ஆண்டு முதல் இங்கேயே தங்கியிருந்து நித்திய பூசைகளைச் செய்து வருகின்ற சிவஸ்ரீ. ப. முத்துக்குமாரசுவாமிக் குருக்களுக்கும் எனது வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

1997 - 98 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவ்வாலயத்தில் பாரிய திருப்பணிகளைச் செய்து மகா கும்பாபிஷேகத்தினை செய்யவேண்டுமென எனது அறங்காவலர் சபை எடுத்த தீர்மானத்தை நாம் செயலுருப்படுத்தி 1.4.1998இல் மகாகும்பாபிஷேகத்தை சிறப்பாக செய்துள்ளோம். நிறைவேற்றப்பட்டுள்ள திருப்பணிகளை, இங்கு சுட்டிக்காட்ட வேண்டியதும் என் கடமையாகும். சுமார் நாற்பத்தைந்து வருட காலத்திற்கு முன்பு அமைக்கப்பட்ட ஆலய கொட்டகையை முற்று முழுதாகப் புனரமைத்து உட்புறமாகச் சீற் அடித்து, உள் சுவர்களுக்கும் தளத்திற்கும் மாபிள் கல் பதித்தும், மின்சார புனரமைப்புகளைச் செய்தும் 1986 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வன்செயலால் அழிக்கப்பட்ட, பிள்ளையார், சுப்பிரமணியர் தேர்களை இவ்வருடம் புதிதாகச் செய்து வீதியுலாவரச் செய்யவும், கோபுரங்கள், பண்டிகைகளுக்கும், கோபுரச் சுவர்களுக்கும் வர்ணம் தீட்டுவதும், பாதிக்கப்பட்ட தேர்ப்பாதுகாப்பு மண்டபமும், தெற்குக் கோபுர மண்டபமும், அடியார்களுக்கான குடிநீர் வசதி நீராடுவதற்கான நீர் நிலைகள், உயிர் திருவிழாக்களுக்கான பணிமனைகள்,

மஞ்சத்திருப்பணி என்பனவும், தொடர் திருப்பணி வேலைகளாக செய்யப்பட்ட வேண்டுமென சபை தீர்மானித்தது. இவற்றிற்கான மூலப்பொருள் பெறப்பட்டு வேலைகள் தொடர்ந்து நடைபெற்று நிறைவுற்றன.. என்பதையும் இங்கு குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

எமது உள்ளத்திலே நீண்ட காலமாக இருந்து வந்த மனக்குறை, அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்களுக்கு இரவு பகல் உணவு அளிக்கவேண்டும் என்பதாகும். அந்தக் குறையும், நடைபெற்ற கும்பாபிஷேக விழா முதல் அதாவது 1.4.1998 முதல் ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைந்துள்ள கல்யாண மண்டபத்தில் தினமும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இச்சேவை மூலம் அடியார்கள் பசிப்பிணி நீங்கிச் செல்வது கண்டு பூரண மனநிறைவு கொண்டுள்ளோம். தொடர்ந்து இன்னும் பல வசதிகளை அடியார்களுக்குச் செய்வதற்கும் எம்மை ஆயத்தப்படுத்தி வருகின்றோம். எனது எண்ணங்கள் பூரணமாக நிறைவேற அடியார்களின் ஒத்துழைப்பும் அன்னையின் ஆசியும் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

அறங்காவலர் சபைத் தலைவராக பொறுப்பேற்ற நாள் முதல் இன்று வரை எனது நிர்வாக இயந்திரம் நல்லபடி சீராகவும் சிறப்பாகவும் செயற்பட ஒத்துழைப்பு வழங்கிய அறங்காவலர் சபை செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்களுக்கும், நாளாந்த நிர்வாகத்தை நல்ல முறையில் நிர்வகித்து வரும் நிறைவேற்று அலுவலர், மற்றும் பணிமனை ஊழியர் அனைவருக்கும், ஆலய உள் நிர்வாகப் பொறுப்புக்களை கவனித்துவரும் காசாளர், மற்றும் ஊழியர்களுக்கும் அவர்தம் சேவைகளைப் பாராட்டிக் கொள்கின்றேன். பாரிய திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போது ஒப்பந்த அடிப்படையிலும், தினசரி வேலை அடிப்டையிலும், வேலை செய்த நயினை விஸ்வகுல தொழிலாளர்களுக்கும், கட்டுமான வேலைகளைச் செய்த கொத்தனார் மற்றும் சக தொழிலாளர்களுக்கும், ஆலய பண்டிகை கோபுரங்கள் மற்றும் தேர் கட்டுமாணங்களுக்கும் வர்ணம் தீட்டிய நயினைக் கலைஞர்களுக்கும், சிற்பக் கலைஞர் குழுவினருக்கும், மங்கள வாத்தியக் குழுவினர் களுக்கும், பூமாலை தொடுப்பவர்களுக்கும், போக்குவரத்து வசதியை ஏற்படுத்திக் கொடுத்த படகு உரிமையாளர்களுக்கும், பலவகையாலும் அவ்வப் போது வந்து உதவி செய்த நயினை மகாவித்தியாலய, நயினை கணேச, கனிஷ்ட மகாவித்தியாலய, சாரணர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், தொண்டர் ஸ்தாபனங்களுக்கும், மகோற்சவ காலங்களில் அலை அலையாகத் திரண்டு வரும் பல்லாயிரக் கணக்கான அடியார்களுக்கு தாராள மனத்துடன் அமுதமளித்து கொண்டிருக்கும் அமுத சுரபி அன்னதான சபையினருக்கும், வெளியிடங்களிலிருந்து வந்து தொண்டு செய்த சகல துறையினருக்கும், வேப்ப மரத்தோப்புக்களால் நிறைந்துள்ள வீதியைக் கொண்ட ஆலயச் சுற்றாடலை தினசரி துப்பரவு செய்து புனிதமாக்கிக் கொண்டிருக்கும் தொழிலாளர்களுக்கும், எவ்வித பிரதிபலனையும்

எதிர்பாராமல், வருகின்ற அடியார்களுக்கு வேண்டிய போதெல்லாம் குடிநீர் வழங்கி தாகசாந்தி செய்து வரும் தம்பையா தாகசாந்தி நிலையப் பொறுப்பாளருக்கும், சபையின் தலைவர் என்ற முறையில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எனது தலைமையிலான நிர்வாக காலத்தில் என்னுடன் ஒத்துழைத்து நிர்வாகம் சீராக நடைபெற உதவிய அறங்காவலர்கள், பட்டியல் 02 என தந்துள்ளேன்.

பட்டியல் - 02

**அறங்காவலர்கள் விபரம்**

**1991-2003**

1. மு. ச. திருநாவுக்கரசு J.P
2. நா.க. குமாரசூரியர் J.P
3. க. உருத்திரகுமாரன்
4. ச. பொ. தில்லைநாதன்
5. ந. விசுவநாதன்
6. நா. விசுவலிங்கம்
7. கா. பொ.இ.குலசிங்கம்
8. பொ. இராசலிங்கம்
9. க. மாணிக்கவாசகர்
10. மு. நா.நடராசா.
11. வி.சபாநாதன் J.P
12. சி. க. பொன்னையா
13. சி. பரராசசிங்கம்
14தி.க. மகாலிங்கசிவம்
15. நா. சண்முகநாதன்
16. ச. தருமராசா
17. நா. இராதாகிரு'ணன்
18. சி. வை. சபாரெத்தினம்
19 வை. சுப்பிரமணியம்
20. இ. பேரின்நாதன்
21 இ. யோகநாதன்
22 க. ஜீவசீலன்
23. தவமணி
24. சி. தனபாலசிங்கம்

நன்றி

கா.ஆ.தியாகராசா

தலைவர்

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

நயினாதீவு

# கோவில் சூழல் 1944 முதல் 1950 வரை
## உட்பிரகாரம்

தொகுப்பு: **திரு.கா.ஆ.தியாகராஜா**
(தலைவர் அறங்காவலர் சபை நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்)

உள் விதி கொட்டகைகள் ஏதுமின்றி கொடித்தம்ப மண்டபம் மட்டும் சுண்ணாம்பு தூண்களில் அமையப்பெற்ற கொட்டகைகளுடன் இருந்தது. கும்ப மண்டபம் வியாழ வரிமட்ட அளவிலான சிறிய கொட்டகையுடன் இருந்தது. உயர் திருவிழாக் காலங்களில் நான்கு வீதிகளும் கிடுகினால் வேயப்பட்ட தற்காலிக கொட்டகைகளாக அமைக்கப்படும். உள் வீதித்தரை மணற் தரையாகவே இருந்தது. வசந்த மண்டபம் சிறிய அளவில் அமைந்திருந்தது. பிள்ளையார் கோவிலிற்கும் முருகன் கோவிலிற்கும் இடைப்பட்ட பகுதியில் (தற்போது புவனேஸ்வரி அம்மன் கோவிலும் அறுபத்து மூவர் சிலையும் அமையப் பெற்ற இடம்) சிறிய சந்தான கோபாலர் கோவிலும், வாகன சாலையும் அமைந்திருந்தன. சூரிய சந்திரர் கோவில் விக்கிரகங்கள் பிரதிஸ்ட்டை பண்ணப்படாமல் இருந்தது 1935-1938 இல் கட்டி முடிக்கப்பட்ட கிழக்குக் கோபுரம் விக்கிரகங்கள் ஏதுமின்றி இருந்தது. தெற்கு வாசல் கோபுரம் அமையப் பெற்ற இடத்தில் மரப்பலகையிலான பாரிய நெல்லுப்பத்தாயம் அமைந்திருந்தது. இப்பத்தாயத்தில் சுமார் நூறு மூடைகளிற்கு மேலான நெல் சேகரிக்கப்பட்டு நித்திய, நைமித்திய பாவனைக்கும், குருமார்களிற்கான ஊதியத்திற்குமாக அறங்காவலர்களால் வழங்கப்பட்டு வந்தது. இந்த நெல் அம்பிகையின் அதிபக்தர்களான தீவுப்பகுதி அராலி, வட்டுக்கோட்டை, சித்தங்கேணி, மூளாய், தொல்புரம், பூநகரி, காரைநகர் போன்ற இடங்களில் இருந்து மீசுவரி நெல் என்று அம்பாளிற்கு ஒவ்வொரு கால போகத்தின் போதும் அடியார்களால் வழங்கப்பட்டு வந்ததாகும்.

# வெளிப்பிரகார அமைப்பும் வீதி விஸ்தரிப்பும்

நூறு வருடங்களிற்கு மேலான கிழக்குப் புறமாகஅமைந்த படிக்கட்டுக்களுடன் தேர்முட்டி தோற்றமளித்தது. அம்பாளிற்குரிய தேர் கிடுகளினால் வேயப்பட்டிருந்த கொட்டகையில் நிறுத்தப்பட்டிருந்தது. 1958 இல் இத் தேர்கொட்டகை அரச படைகளினால் தீக்கு இரையாக்கப்பட்டது. தெற்கு வீதியில் தற்போது அர்ச்சனைக் கடை இருக்கும் இடத்திற்கு தெற்காக வேலணை

மணியகாரன் மடமும் அதற்கு மேற்குப் புறமாக தெற்கு வாசலிற்கு இடைப்பட்ட பகுதியில் திருக்குளமும், ஆறு சுண்ணாம்புத் தூண்களினால் அமையப்பட்ட தெற்கு வாசல் மண்டபமும் தற்போது மூடிக்கப்பட்டுள்ள தெற்கு வாசல் கிணற்றிற்கு பக்கத்தே மேற்குப்புறமாக நான்கு பாதுகாப்பு கதவுகளுடனான நான்கு அறைகளைக் கொண்ட பிரதான களஞ்சியமும், உயர் திருவிழக்கால பிரதம குருக்கள் தங்கியிருக்கும் குருநிவாசமும் அமைந்திருந்தன. அர்ச்சனைக் கடைக்கு தெற்காக வேலனை மணியகாரன் மடமும், தம்பையா தாக சாந்தி மடம் அமைந்திருக்கும் இடத்தின் மேற்றுப்புறமாக கொட்டடி கணபதியார் மடமும் அதற்கு மேற்குப் புறமாக தொண்டர் சபை அமைந்திருக்கும் இடத்திற்குக் கிழக்குப்புறமாக வாணர் மடமும் தொண்டர் சபை அமைந்திருக்கும் இடத்தில் தெற்குப் புறமாக கிழக்கு மேற்காக அமைந்த ஒரு மடமும் (இது உயர் திரு விழாக்காலங்களில் பொலிஸ் பாதுகாவலர் பணிமனையாக பாவிக்கப்படுவது) தற்போது நிகழ்ச்சிகள் நடைபெறும் மேடையில் இருந்து வடக்குத் தெற்காக ஒரு மடமும், ஆலய பூந்தோட்டமும் அமைந்திருந்தன. மேற்கு வீதியில் தற்போது மின்சாரஇயந்திர கட்டடத்திற்கு முன்பாக ஒரு மடமும், தற்போது இருக்கும் சிறுத் தொண்டர் மடத்திற்கு வடக்குப் புறமாக பெரிய அளவிலான நகரத்தார் மடமும் (செட்டியார் மடம்) அமைந்திருந்தன. தனியாரின் பராமரிப்பில் இருந்த வடக்கு வீதியில் உள்ள அன்னப்பிள்ளை மடமும் (தற்போதைய தியான மண்டபம்) சுப்பையா மடமும்)புவனேஸ்வரி மடம் அன்னபூரனி மடம் என்பன தற்போது கட்டப்பட்டிருக்கும் இடத்தில் ஒருஅறையைக் கொண்ட தனியொரு மடமும் காணப்பட்டது. கிழக்கு வீதியில் வைரபர் கோயிலுக்குப் பின்புறமாக நாக தம்பிரான் கோவிலும் அமைந்திருந்தன. (ஆக மொத்தம் 12 மடங்கள்) வீதி விஸ்தரிப்புக் காரணமாகவும் அடியார்களின் நலன்களைக் கருத்தில் கொண்டும் இரகுநாதர் முதலியார் மடம் தவிர்ந்த (தியான மண்டபம்) ஏனைய மடங்கள் யாவும் அகற்றப்பட்டன. இவற்றுள் மூன்று மடங்கள் கட்டிக்கொடுக்கப்பட்டும் ஒரு மட உரிமையாளரிற்கு வீடும் காணியும் கொள்வனவு செய்யப்பட்டும் அலய நிர்வாகத்தால் கொடுக்கப்பட்டது. தனியாருக்கு சொந்தமாக இருந்த வல்லிக்காடு என்னும் காணியையும் (ஐயனார் கோவில் அடங்கலாக) நிர்வாகம் கோவிலுக்கு கொள்வனவு செய்தது. தற்போது 250 பரப்பு விஸ்தீரணத்தில் கோவில் வளாகம் அமைந்துள்ளது.

## 1944-1956 வரையான திருப்பணிகள்

புதிய நிர்வாகத்திட்டத்திற்கு அமைய அமைந்த நிர்வாகம் முதலில் நீண்ட காலமாக கும்பாபிஷேகம் இன்றி இருந்த ஆலயத்தை புனரமைப்புச் செய்து 26.04.1951 மகா கும்பாபிஷேகத்தைச் செய்து முடித்தது. இதனைத் தொடர்ந்து உள்வீதியில் நிரந்தரமான

கொட்டகையை அமைப்பதற்கான வெள்ளைக் கற்தூண்களை நிறுத்தம் பணியை முன்னுரிமை கொடுத்து செய்து முடித்ததுடன் கொட்டகை வேலைகட்கு தேவையான பாலை மரங்களையும் தருவித்து அரிவித்து வேலைகளை தொடர்ந்து செய்து 58/59ம் ஆண்டுகளில் கொட்டகை வேலையைப் பூர்த்தியாக்கி முடித்தார்கள்.

## தேர்த்திருப்பணி

21.08.1955 இல் தேர்த்திருப்பணிச்சபையொன்று அப்போதைய யாழ் மாவட்ட அரச அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தாவின் தலைமையில் உருவாகியது. தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் ஆசியுடனும் அனுசரணையுடனும் தமிழ் நாடு நாகர் கோவில் குமாரசாமி ஸ்த்தபதியாரின் குழுவினர் அம்பாளின் தேர் வேலைகளைப் பொறுப்பெடுத்து செய்து முடித்தார்கள். இலங்கையில் உள்ள அனைத்துத் தேர்களுக்கும் ஓர் நாயக தேராக இது அமைந்துள்ளது. இந்த தேர் உருவாகுவதற்கு அயராது உழைத்தவர்களில் இணைச் செயலாளர்களாக இருந்த விவேகானந்தா அச்சக உரிமையாளர் திரு. வே. சுந்தரம்பிள்ளையும் கோவில் அறங்காவலர் சபை செயலாளர் திரு. கா. ஆறுமுகமும் இணைப் பொருளாளர்களாக ஊர்காவற்றுறை காரியாதிகாரியாக இருந்த திரு. செ. சிவஞானமும் அறங்காவலர் சபை பொருளாளராக இருந்த திரு. க. சோமசுந்தரமும் செயல்பட்டார்கள். 08.07.1957 ல் முடிவுற்றது. 11.07.1957 அம்பாள் வீதி உலாவரவும் திருவருள் கைகூடியது. இத்திருப்பணி அப்போது ஒரு பாரிய திருப்பணியாக இருந்தது. இத்திருப்பணிச்சபையினர் ஓர் மலரினையும் வெளியிட்டார்கள். 1000 பிரதிகள் மட்டும் அச்சாகியது. வெள்ளோட்டத்தன்றே விற்பனையாகி விட்டது. இது ஒரு வரலாற்றுச் சான்றுகளைக் கொண்ட மலராகும். தமிழ் பெரியார் திரு. குல. சபாநாதன் அவர்கள் இம் மலரின் ஆசிரியராக இருந்தார். 1958 ல் அரச படைகளின் அக்கினிப்பிழம்பிற்கு அம்பாளின் தேர் கிடுகு வேலி மறைப்பில் இருந்தும் தம்பியது என்றால் இது ஒரு திருவருளே மேலும் 03.03.1986 ல் நடந்த அனர்த்தங்களிலும் தப்பியது. மேலும் வியப்பினை ஊட்டியது.

## 1960 - 1986 காலத்திருப்பணி

1963ம் ஆண்டிலும் 1983ம் ஆண்டிலும் மகாகும்பாபிஷேகங்கள் மிக சிறப்பாக நடந்து முடிந்தன. இந்த கால கட்டத்தில் பல திருப்பணிகளும் இடம்பெற்றன. சிறப்பாக உள்வீதி கொட்டகை அமைத்தல், உள்வீதி சீமெந்து தளமாக அமைத்தல், புதிய வசந்தமண்டப கட்டுமானம் தெற்கு, மேற்கு, வடக்கு, சுற்றுமதில்கள் கட்டப்பட்டன. நிரந்தர மின்பிறப்பாக்கி கொள்வனவு, புதிய திருக்குளம் பிள்ளையார் முருகன் தேர்கள், அம்பாள் திருமஞ்சம், என்பன

செய்யப்பட்டன. இவைகளைப் பாதுகாப்பதற்கான மண்டபங்களும் கட்டப்பட்டன. (இவைகள் யாவும் 3.3.1986 ல் அரச படைகளின் தீக்கிரையாகி அழிந்து விட்டன) தென்வாசல் கோபுரம் புதிய வாகனசாலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் கோவில், நால்வர் கோவில், புதிய சகடை, சப்பறம், புதிய கோபுரக்கதவு நாகசாந்திமடம், அறுபத்திமூவர் சிலைகள் என்பனவும் சகடைகள் சப்பரங்கள் பாதுகாப்பு மண்டபமும் அமைக்கப்பட்டதுடன் நீர் விநியோக குழாய்களும் பொருத்தப்பட்டன.

## 1958 ல் அரச படைகளால் தீக்கிரையாக்கப்பட்டவை

1. கிழக்கு கோபுர முகப்புக் கொட்டகை.
2. தலவிருட்சமான வன்னி மரம் (மீண்டும் தளிர்விட்டுத் தழைத்துள்ளது)
3. தெற்கு மடம்
4. பூந்தோட்டமும் வேலிகளும்
5. பழைய தேர் கொட்டகை (தேர் தப்பிவிட்டது,) இழப்பீடு எதுவும் தரப்படவில்லை.

## 1986.03.03 இல் தீக்கிரையாக்கப்பட்டவை.

1. கிழக்கு பிரதான கோபுரக்கதவுகள்
2. 100 வருட பழமை வாய்ந்த அம்பாள் தேர் (58ல் தப்பி இருந்தது)
3. பிள்ளையார், முருகன், தேர்களும் பாதுகாப்பு மண்டபமும்
4. அம்பாள் திருமஞ்சமும் பாதுகாப்பு மண்டபமும்
5. மூன்று வாசல் பெரிய சப்பரமும் பாதுகாப்புக் கொட்டவையும்
6. மின்பிறப்பாக்கி இயந்திரமும் அனைத்து இணைப் புக்களும்
7. பணிமனை உபகரணங்கள் சேதப்படுத்தப்பட்டன.
8. உள்பணிமனை பணப்பெட்டி சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டன, சூறையாடப்பட்டன.
9. பகல் பூசை வேளையில் இடம்பெற்ற இந்த நிகழ்வால் விக்கிரகங்களில் அணிந்திருந்த திருபாபரணங்களும் சூறையாடப்பட்டன.
   (இவையாவும் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் இழப்பீடும் ஒரு பகுதி வழங்கப்பட்டது)
10. கடற்படையினரின் பூரண கட்டுப்பாட்டில் இருந்த காலகட்டத்தில் ஊரடங்கு சட்டம் நடைமுறையில் இருந்த இரவு வேளையில் அம்பாளின் கோவில் களஞ்சியம் உடைக்கப்பட்டு நித்திய பாவனை திருவாபரணங்கள் சூறையாடப்பட்டன. இவற்றின் அன்றைய பெறுமதி ரூபா175,000/-. வாகும். இரவுக் காவலாளி சம்பவம் நடந்த தினத்தில் 1993-12-17 கடமையில் . இல்லை என்பது பொலிசாரின் கூற்று.

# 1987 - 1996 வரையான நிலைப்பாடு

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் பாரிய திருப்பணிகள் எவையும் இடம் பெறவில்லை. ஆரம்பிக்கப்பட்டிருந்த திருப்பணிகளும் தடைபெற்றன. ஆனால் வழமையான நித்திய நைமித்தியங்கள் எவ்வித தடையுமின்றி நடைபெற்றன. 1990 இல் ஏற்பட்ட யாழ்ப்பாணத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்ட காலப்பகுதியில் தீவகம் ஒரு (தளம்பல்) நிலையில் இருந்த போதும் அம்பாளின் நித்திய நைமித்தியங்கள் வழமை போல் நடைபெற்றன. (இக்காலத்தில் அடியேன் தலைவராகவும் தீவக உதவி அரச அதிபராகவும் இருந்ததும் ஒரு காரணம் என்பதை பணிவாக தெரிவிக்கின்றேன். 1997 - 2002 காலம் மிகவும் எழுச்சியான திருப்பணிக்காலம் என்றும் கூறலாம். 97/98 ஆண்டினை அறங்காவலர் திருப்பணி ஆண்டாக முன்னிலைப்படுத்தி மகாகும்பாபிஷேகத்தைச் செய்து தொடர்ந்தும் திருப்பணிகளைச் செய்தது இந்த வகையில் 01.04.1998 இல் மகாகும்பாபிஷேகம் நடந்ததும், நாற்பது வருடங்கட்கு மேலாக அமைக்கப்பட்ட உள்வீதி, கொட்டகையை முழுமையாக கழற்றிப் புனரமைப்பு செய்தது. உள்கொட்டகை பூராகவும் சீற் அடிக்கப்பட்டது. உள்வீதி சுவர்களுக்கும், வீதி தளத்திற்கும் மாபிள் பதிக்கப்பட்டன. சுவர்கள் வர்ணம் தீட்டப்பட்டன. 03.03.1986 ல் அரச படைகளால் தீக்கிரையாக்கப்பட்ட பிள்ளையார் முருகன் தேர்களும் கோபுரக்கதவும் மஞ்சமும் புதிதாக செய்யப்பட்டன. கோபுரங்கள் மண்டபங்கள் யாவும் வர்ணம் தீட்டப் பெற்றன. தென் வாசல் கோபுரமண்டபம் புதிதாக அமைக்கப்பட்டது. 03.03.1986 இல் முற்றாக எரிக்கப்பட்ட தேர்கள் மஞ்ச பாதுகாப்பு மண்டபங்கள் மீளவும் கட்டப்பட்டன. அடியார்களுக்கான குடிநீர் வசதிகள், நீராடுவதற்கான கிணறுகள், மலசல கூடங்கள் புதிய பணிமனைகள் என்பனவும் நிகழ்ச்சி மேடையும் அர்ச்சனைக் கடை ஒழுங்கும் அமைக்கப்பட்டன. நீண்ட காலமாக பிணக்கில் இருந்த வட்டுக்கோட்டை இரகுநாத முதலியார் மடமும் காணியும் அறங்காவலர் சபையால் பொறுப்பேற்கப்பட்டது. அம்மடமே இன்று தியான மண்டபமாக வடக்கு வீதியில் அமைந்துள்ளது. மீளப் புனரமைப்பு செய்யப்பெற்ற வல்லிக்காட்டுக் காணியில் 250 க்கு மேற்பட்ட தென்னங்கன்றுகள் நாட்டப்பட்டு இன்று அவை காய்க்கும் நிலைக்கு வந்து விட்டன. வல்லிக்காட்டில் இருந்து குளாய்கள் மூலம் நீர்விநியோகமும் நடைமுறையில் இருப்பதால் அடியார்களின் பாவனைக்கான தண்ணீர் தடங்கல் இன்றிக்கிடைக்கின்றது. நிரந்தர மின்பிறப்பாக்கி இயந்திரம் ஒன்று புதிதாக இலண்டன் நகரில் உள்ள நயினை அன்பர் மூலம் அன்பளிப்பு செய்யப்பட்ட போதும் அதனை இலண்டனின் இருந்து கொழும்புக்கு வரவழைத்து அங்கிருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டு ஆலயத்துக்கு கொண்டு வந்து பொருந்திய தோடு மின்சார ஒளி அமைப்பிலும் நவீன முறையான மாற்றங்களை இக்கால கட்டத்தில் செய்ய முடிந்துள்ளது.

## அறங்காவலர்களின் தனிச்சிறப்பு

இக்கோவிலில் பண்டு தொட்டு இன்று வரை திருமுறைகளை ஓதுபவர்களும், புராணங்களைப் படித்துப் பொருள் சொல்பவர்களும் அறங்காவலர்களாகவே இருந்து வருகின்றார்கள். அதாவது அந்த அளவு இவர்கள் திருமுறைகளை பண்ணோடு பாடுவதிலும் விழாக்காலங்களிலும் விஷேட நேர்த்தி வேண்டுதல்களிலும் உரிய திருமுறைப் பாடல்களை அந்த அந்த இடங்களில் பாடுவார்கள். இதே போன்று கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், சிவராத்திரி புராணம் திருவாதவூர் புராணம் போன்றவற்றிற்கு பாடியும் பண்ணோடு பயன் சொல்வதிலும் தனித்துவம் மிக்கவர்கள் என்று பல அறிஞர்கள் வாயாரக் கூறியும் எழுதியும் உள்ளார்கள். அத்தோடு இந்த வரன் முறையால் கட்டாயம் அறங்காவலர் ஒருவர் நித்தியம் ஆலயத்தில் சமூகம் கொடுக்க வேண்டிய ஒரு நிலைப்பாட்டையும் சட்டமாக அன்றி சம்பிரதாயமாக ஏற்படுத்தி செயல்பட்டும் வருகின்றார்கள்.

## நித்திய நைமித்தியங்கள்

நான்கு காலப் பூசைகள் சிறப்பாக நடைபெறுவதுடன் அடியார்களின் பிரார்த்தனை, நேர்த்திகள் அபிஷேகங்களும் மாத விஷேட தின விழாக்களும் சிறப்பாக நடைபெறுகின்றன. இந்த வகையில் இங்கு நடைபெறும் விழாக்கள் மேலும் சிறப்புற 2002ம் ஆண்டு உயர் திருவிழாவைத் தொடர்ந்து இங்கு வரும் அடியார்களின் பேராவலையும், மனக் குறையையும் கருத்தில் கொண்டு அம்பாள் பகல் பூசை முடிந்ததும் வசந்த மண்டபத்திலிருந்து உள்வீதியுலா வந்து காட்சி கொடுப்பது நித்திய விழாவாகவும் அமைந்துள்ளது. இதனால் உயர் திருவிழாக்காலங்களில் அம்பாளின் வீதியுலாவைக் காண முடியாத நிலையில் இருந்த அடியார்களின் மனதில் மட்டில்லா மகிழ்ச்சியினைக்காண முடிகின்றது. தொன்றுதொட்டு 10 நாள் உயர் திருவிழாவாக இருந்ததை 1960 ம் ஆண்டில் இருந்து 15 நாள் விழாவாக ஆக்கியதால் உபயகாரருக்கு மேலும் உபயம் கிடைத்தது ஒரு வரப்பிரசாதமாகும்.

## நித்திய நைமித்திய குருமார்கள்

அம்பாளின் நித்திய பூசைகளையும் மாதாந்த உற்சவங்களையும் சிவஸ்ரீ. ஐ. கைலாசநாதக் குருக்கள் வாமதேவக்குருக்களும் சிவஸ்ரீ சாமிநாதர் பாலசுந்தரக்குருக்களும் சிவஸ்ரீ சம்பு மகேஸ்வரக்குருக்களும் செய்து வருகின்றார்கள். (பரம்பரை உருத்தாளர்கள்)

கொடி ஏற்றம் முதலாக கும்பாபிஷேக கிரிகைகளை வடகோவை

சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்களும் செய்து வருகின்றார். (இவரும் பரம்பரை உருத்தாளர்) நித்திய நைமித்திய குருமார்கள் ஆலய அறங்காவலர் சபையின் தீர்மானங்கட்கு அமைய தமது கருமங்களையும் ஆற்றி சிறப்பாக பணிபுரிந்து வருவதையும் அடியார்களின் வேண்டுதல்களை மிகுந்த பயபக்தியுடன் செய்வதையும் அவதானிக்க முடியும்.

## அரிசனர் ஆலயப்பிரவேசம் 1964

எவரின் பலவந்தமும் இல்லாமல் 1964 இல் யாழ் குடாநாட்டில் ஆலயப்பிரவேசத்தைத மனப் பூரணமாக அங்கீகரித்து எல்லோரும் சென்று வழிபட வழிகாட்டிய கோவில்களில் முதன்மையானது நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் தான் என்பதை யாவரும் அறிவர். இந்த ஆலயப் பிரவேசத்தை அரசியல் ஆக்கி பெருமை தேட முயன்றவர்கட்கு, அறங்காவலர் சபை எடுத்த தீர்மானமும் செயற்பாடும் பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்தது என்றால் மிகையாகாது.

## தங்குமிட வசதிகள்

அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்கள் தங்கிச் செல்வதற்கு வசதியாகவும் திருமணங்களைச் செய்வதற்காகவும் கல்யாண மண்டபமும் அடியார் தங்கும் இடம் அமைத்த ஒரு பாரிய மண்டபமும் திறந்த நிலைப்பாடு கொண்ட அன்னபூரணி மண்டபமும் புவனேஸ்வரி மண்டபமும் என இரண்டு மண்டபங்களும் கட்டப்பட்டுள்ள இவற்றில் சாதி சமய இன பாகுபாடு இன்றி எவரும் தங்கிச் செல்ல முடியும்.

## நிதி நிர்வாகம்

யாப்பு விதிகட்கு அமைய நிர்வாக அலகு முறையாக செயல்படுகின்றன. நவீன முறையான கணக்கு முறைகள் வங்கி நடைமுறைகள் ஊடகத் தொடர்புகள் தலைப்புக்களின் கீழ் வருமானங்கள் கணக்கீடும் செலவும். அங்கீகரிக்கப்பட்ட பட்டயக்கணக்காளர்களால் ஆண்டு முடிவில் ஆய்வு செய்யப் பெற்ற கணக்கறிக்கை வெளியிடுதல் புதிய நிர்வாகத்திற்கு அறங்காவலர்களை நியமனம் செய்யும் தேர்தல் முறை என்பன முறையாக கடைப்பிடிக்கப்படுகின்றது. பெரிய அளவிலான பணிப்பாளர்களையும் ஊழியர்களையும் கொண்டு செயல்படும் கோவில் இது தான் என்றும் கூறலாம். ஐந்து வருடங்களுக்கு மேல் தொடர்ந்து வேலை செய்யும் ஊழியர் பணியாளர்கட்கு சேவையில் இருந்து அவர்கள் தாமாக விலகும் போதும் அல்லது ஓய்வு பெறும் போது பணிக்கொடை வழங்கப்படுகின்றது. அக்கொடுப்பனவு அறங்காவலர்களின் தீர்மானத்தின் அடிப்படையில் வழங்கப்படும்.

## அறக்கொடைகள் விடயம்

எந்த ஒரு அமைப்புக்குமோ, தனி நபர்கட்குமோ நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் பெயரில் நிதிவழங்கவோ நிதியைப் பெற்றுக்கொள்ளவோ அறங்காவலர் சபை அனுமதி வழங்கவில்லை. இதனால் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் பெயரிலான மோசடிகள் தவிர்க்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளிலும் இப்படியான மோசடிகள் இடம் பெறாமல் அந்த அந்த நாடுகளில் வாழும் அடியார்கள் மிக கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றார்கள் அறங்காவலர் சபையும் இது விடயத்தில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்துவருகின்றது.

## நிரந்தர கழிப்பறை வசதிகள் நீராடக் கிணறுகள்

முன்பெல்லாம் அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்கள் கழிப்பறை வசதி இன்மையாலும் குளிப்பதற்கு கிணறுகள் இல்லாமையாலும் பலதரப்பட்ட சிரமங்களை அனுபவித்தார்கள். இக்குறைபாடு 1996இல் திருப்திகரமாக நீங்கிவிட்டது. கோவில் காணிக்குள் நிரந்தரமாக எழுபத்தைந்து(75) மலசல கூடங்களும் பத்து (10) கிணறுகளும் பாவனையில் உள்ளன.

## அன்னதானம் - 1960 ன் முன்னும் பின்னும்

ஆபுத்திரனும் மணிமேகலையும் அன்னதானம் பண்ணிய பூமி சரித்திர இலக்கிய வரலாற்றுச் சான்றுகள் கொண்டது. உயர் திருவிழாக்காலத்தில் கடல் கடந்து வரும் அடியார்கட்கு 1960க்கு முன்பு ஆலய வீதிகளில் இருந்த நாட்டுக் கோட்டை நகரத்தார் மடத்திலும் இராகு நாதமுதலியார் மடத்தினர் வேலணை மணியகாரன் மடத்தினர் கொட்டடி தருமலிங்கம் மடத்தினர் போன்றோர் இயன்ற அளவு அன்னதானத்தினைச் செய்து வந்தார்கள். நயினைச் சுவாமியாரும் தம் அடியார் மூலம் அன்னதானத்தினைச் செய்து வந்தார். காலப்போக்கில் அம்பாளின் அருட்பிரபாகம் நாடெங்கும் பரவவும் பிரயாண வசதிகள் நவீனமாகவும் இலகு வழிப்பிரயாணமாகவும் அமைய மடங்களின் சேவைகள் போதாமல் இருந்தது. இதனை அவதானித்த நயினைப் பெருமக்கள் 1960 இல் இருந்து பெரிய அளவில் அமுதசுரபி அன்னதான சபையை அமைத்து திருவிழாக் காலத்தில் வரும் அடியார்கட்கு சிறந்த முறையில் அன்னதானம் வழங்கி வருகின்றார்கள்.

# கோவில் வடக்கு விதி கல்யண மண்டபத்தில் நித்திய அன்னதானம்.

அம்பாளின் ஆலயத்தின் அமைவிட சூழலும் தற்போதைய வளர்ச்சி பெற்ற நவீன பிரயாண வசதிகளும் புதிய கல்வித் திட்டமும், நயினையம்பதினை ஒரு பிரசித்திபெற்ற புராதன வழிபாட்டுத் தலமாகவும், சுற்றுலாத்தலமாகவும் ஆக்கிவிட்டது. இலங்கையில் கடல் கடந்து சென்று வழிபாடு செய்யும் ஒரு பிரசித்த பெற்றதலமாக இவ்வாலயம் தான் இருக்கின்றது என்று கூறினால் இது தவறில்லை. இந்த அடிப்படையில் தினமும் பலநூறு ஆயிரம் என்று கூறப்படும் எண்ணிக்கையில் பல்லின மக்களும், பல்சமய மக்களும் வழிபாட்டிற்காகவும் கல்விச்சுற்றுலாவுக்காகவும் வந்து செல்கின்றார்கள். வருபவர்களில் எண்பது வீதமானவர்கள் வழிபாட்டிற்கே வருகின்றார்கள். இப்படியான சூழ் நிலையில் 1990 முதல் 1998 வரை வரும் அடியார்களுக்கு சிறிது தேனீர் தானும்பருக முடியாத ஒரு நிலைப்பாடு இருந்தது. இதனைக் கருத்தில் கொண்ட ஆலய நிர்வாகம் ஒரு சிற்றுாண்டிச்சாலையை சிறிது காலம் நடாத்தியது. அதுவும் பூரண திருப்தியாக அமையாத தன்மையால் 01.04.1998 ல் நடந்து முடிந்த மகாகும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து வரும் அடியார்கட்கு தினமும் பகல் வேளையில் உயர் திருவிழாக் காலம் தவிர்ந்த 350 நாட்களும் கோவில் கல்யாண மண்டபத்தில் அன்னதானம் வழங்கவேண்டும் என்றும் அடியார்கள் மூலம் இதனை ஊக்குவித்துச் செய்யவேண்டும் என்றும் அறங்காவலர் சபையினர் தீர்மானம் எடுத்து செயற்பட்டு வருகின்றார்கள். இந்தப் பெரிய சேவைக்கு உலகம் எங்கும் வாழும் நல்மனம் கொண்ட அன்பர்கள் தமது மனப்பூர்வமான வரவேற்பினை எமக்கு அளித்துவருவதுடன் இத்தர்மகாரியத்தில் தம்மையும் இணைத்துக் கொண்டு தமது அன்னதானத்தினங்களில் வந்து பங்குபற்றிச் சிறப்பித்தும் செல்கின்றர்கள். தம்மையும் ஒரு தினத்திற்கு இணைத்துக்கொள்ளும் படியாகவும் பதிவு செய்தும் செல்கின்றார்கள். இந்த தர்மகாரியத்திற்கான வைப்பு நிதியை எவரும் வேறு தேவைகட்கு எடுக்க முடியாது.

## தாகசாந்தி

சுமார் 100 வருடங்கட்கு மேலாக அன்னையைத் தரிசிக்க வரும் அடியார்கட்கு எதுவித பிரதிபலனையும் எதிர்பாராமல் அமரர் தம்பையா அவர்கள் தாக சாந்தி நிலையம் அமைத்து தொண்டாற்றினார். அவரின் பணியை மகனார் (டாக்டர்) த. சோமசேகரம் தொடர்ந்து செய்து வருகின்றார். இவரின் இப்பணி ஒரு பாரிய தொண்டாகும். தாகம் தீர்க்க நீர் பெற தனியான கிணறும், அன்னையை பூசனை செய்ய தனியான

மலர் தோட்டமும் அமைத்து தொண்டுசெய்யும் இப்பெரியாரின் தொண்டிற்கு நம் நாயன்மார்களில் எவரை ஒப்பிடலாம் என்பது எமக்கு தெரியவில்லை.

## குடிநீர்த்திட்டம் 1996

தீவுப்பகுதியெங்கும் குடிநீர்த்தட்டுப்பாடு உள்ளதனை சகலரும் அறியலாம். என்றாலும் அம்பாளின் ஆலய நிர்வாகம் தீவுப்பகுதிக்கே ஒரு முன்னோடியான திட்டமாக மழைக்காலத்தில் பெய்யும் மழைநீரை பாரிய நிலத்தடி நீர்த்தொட்டிகளை அமைத்து சேகரித்து வைத்து எவ்வித சலனமும் இன்றி உரிய சுகாதார ஆலோசகர்களின் ஆலோசனைகட்கு அமைய பாவனைக்கு வைத்துப்பராமரித்து வருகின்றது.

## தகவல் நிலையம்

யாழ் குடாநாட்டில் வாழும் மக்கள் மட்டுமல்ல உலகம் எங்கும் வாழும் அன்பர்கள் யாவரும் அம்பாளின் ஆலய விழாக்களையும், விழாக்கள் நடக்கும் தினங்களையும் மற்றும் விபரங்களையும் அறியும் வகையில் தொடர்பு சாதன அமைப்புக்கள் மூலம் தகவல்களை வழங்கிவருகின்றார்கள். மேலும் ஆலய நிர்வாகம் நவீன தொலைத்தொடர்பினை விரிவுபடுத்த மின் அஞ்சல் ஒலி ஒளி பரப்பு சேவைகளையும் ஆயத்தங்கள் செய்து வருகின்றது. யாழ்ப்பாணத்தில் உடனடியாக ஒரு தகவல் நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

## சமய சமூக சேவை

அம்பாளுக்கு அடியார்களால் தரப்படும் தர்மச்சொத்தை அறப்பணிக்கும் ஆலயத் திருப்பணிக்கும் அடியார் வசதிகட்கும் செலவு செய்யும் அறங்காவலர் சபை தர்ம தாபனங்கட்கும் நிதி உதவி செய்து வருகின்றது என்பதை அடியார்கள் நன்கு அறிவார்கள். "ஆம் பொருள் நமதே ஆனால் அறம் பிறர்காவதுண்டோ" என்ற கடவுள் மாமுனிவரின் வாக்குக்கு அமைய யாம் கொடுத்த பொருளை நயினை ஸ்ரீ நாகபூஷனி அம்மன் ஆலய அறங்காவலர்கள் நல்ல பணிகட்டு வழங்கின்றார்கள் என்பதை அடியார்கள் உணர்ந்து கொண்டு மேலும் இப்படியான தொண்டுகளில் இணைந்து வருகின்றார்கள்.

## படகுச்சேவை

அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்களின் நலன்கருதி கோவில் நிர்வாகம் இரண்டு மோட்டார் படகுகளை கொள்வனவு செய்து 2002ம் ஆண்டு உயர் திருவிழா முதல் குறைந்த கட்டணத்தில் சேவையில் விடப்பட்டுள்ளது.

# புராதன சின்னங்கள் வழிபாடு

அம்பாளின் ஆலயத்தோடு தொடர்புடைய புராதன சின்னகளில் அதி முக்கியமானவை சப்த்த சமுத்திரங்களும் கலந்து புரண்டோடும் ஏழாற்றுப்பிரிவு என்ற கடற்பரப்பில் அமைந்துள்ள கருடன் கல் நாகக்கல் (பாம்பு சுற்றிய கல்) என்பவற்றிற்கு உயர் திருவிழாக்காலத்தில் (11ம் நாள் உபயகாரர்) விஷேட பூசைகள் பிரார்த்தனைகள் செய்து வருவது வழமை இப்பிரார்த்தனையை அங்கீகரிப்பது போல் பூசை நடைபெறும் போது வானத்தில் கருடன் தோன்றி மூன்று முறை வட்டமிட்டு மறைவது காணக்கிடைக்காத ஒரு தரிசனமாகும். (இந்த பாம்பு சுற்றிய கல் "கருடன் கல்" என்பன பற்றி இவ்வூரில் இருந்த குட்டிப்பிள்ளை என அழைக்கப்படும் திரு தியாகர் இராமச்சந்திரர் அவர்கள் பாடிய பாடலையே இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும் என தந்துளளேன்..

## கும்பாபிஷேகங்களைச் செய்த குருமார்

1951 - ஊரெழு சிவஸ்ரீ. வை. பாலசுந்தரக்குருக்கள்
1963 - நயினை சிவஸ்ரீ. ஐ. கைலாசநாதக்குருக்கள்
1983 - கோப்பாய் சிவஸ்ரீ. வை. மு. பரமசாமிக்குருக்கள்
1998 - கோப்பாய் சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக்குருக்கள்

(அ) 1986.03.03 இல் தீக்கிரையாக்கப்பட்ட தேர்கள் மஞ்சங்களைச் செய்தவர்கள்

பிள்ளையார் தேர் திருநெல்வேலி. ஆ. சீவரெத்தினம் ஆசாரியார் : வெள்ளோட்டம் 01.07.1968

முருகன்தேர்,மஞ்சம் திருநெல்வேலி. செ. கந்தசாமி ஆசாரியார் :
தேர் -வெள்ளோட்டம் - 03-7-1976
மஞ்சம் : வெள்ளோட்டம் 12-7-1781

(ஆ) 1986ல் எரிக்கப்பட்ட தேர்களுக்குப் பதிலாக புதிய தேர்கள்,மஞ்சங்களைச் செய்தவர்கள்

பிள்ளையார் தேர் திருநெல்வேலி சு.இராசரெத்தினம் ஆசாரியார் வெள்ளோட்ம் 01-07-1998

முருகன் தேர் அராலியூர் சி.அமரசிங்கம் ஆசாரியர்
வெள்ளோட்டம் 25-06-1999

அம்பாள் மஞ்சம் அராலியூர் சி.அமரசிங்கம் ஆசாரியர்
வெள்ளோட்டம் 11-06-1-2000

பெரிய சப்பரச்சகடை நயினை வீ.வைத்திலிங்கம்
ஆசாரியர் குழுவினர் 1988

சிறிய சகடை திருநெல்வேலி ஆ.சீவரெத்தினம்
ஆசாரியர் 1987

வெள்ளிக் கொடித்தம்பம் செய்யப்பெற்றது 2002ம் வருடம் திரு. சு. பாஸ்கரன் ஆசாரியார், யாழ்ப்பாணம்.

## மகாயாகம் - 2000

2000ம் ஆண்டு பிறப்பையொட்டி நாட்டுக்கும் மக்களுக்கும் சேமம் வேண்டியும் சாந்தியும் சமாதானமும் வேண்டியும் மகாயாகம் ஒன்று பலலட்ச ரூபா செலவில் கோவில் முன்றலில் மிக சிறப்பாக நடைபெற்றது. நாட்டின் பல பாகங்களிலும் இருந்தும் அடியார்கள் பங்கு பற்றி அருள் பெற்றார்கள். இம் மகாயாகத்தை வடகோவை சிவஸ்ரீ. வை. மு. பரமசாமிக்குருக்கள் பல அந்தணப் பெரியார்களின் உதவியுடன் சிறப்பாக நடாத்தி வைத்தார்கள்.

## 2002 சிவசக்தி சிலைகள் இரண்டு பிரதிட்சை

கனடாவில் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் பெயரில் அமைக்கப்பட இருந்த கோவிலின் திருப்பணிகள் தடைப்பட்டதன் காரணமாக அங்கு பிரதிட்சை செய்வதற்கு இந்தியாவில் செய்யப்பட்ட இரண்டு பெரிய விக்கிரகச் சிலைகள் அதனைச் செய்வித்தவராலேயே இந்தியாவில் இருந்து நயினாதீவுக்கு அனுப்பப்பட்டன. இவைகள் தற்பொழுது கோவிலின் கிழக்கு கோபுர வாசலின் வடக்குப் புறமாக அமைக்கப்பெற்ற கோவில் ஒன்றில் 2002ம் ஆண்டு உயர் திருவிழாக்காலத்தில் பிரதிட்சை செய்யப்பட்டு இருப்பதைக் காணலாம்.

(ஸ்ரீ அறம் வளர்த்த நாயகி சமேத ஏகாம்பரர், ஸ்ரீ நாகேஸ்வரி சமேத நாகேஸ்வரர்) இத்திருவுருவங்களின் அமைப்புக்களே இவ்வாலயத்தின் கடிதத் தலைப்புக்களில் பண்டு தொட்டு காட்சியளித்த வடிவங்ள் ஆகும் என்பதை அம்பிகையின் அடியார்கள் நன்கு அறிவார்கள்.

# தொடரும் எம் பணிகள் 2004ல்

எமது பணிகளைத் தொடர முடியாமல் இடர் செய்யும் நோக்கில் சிலர் எடுத்த முயற்சிகளையெல்லாம் தனது அருளால் துடைத்து விட்டு மீண்டும் எம்பணிகளைத் தொடர அம்பாள் திருவருள் புரிந்தாள். இந்த குறுகிய கால எல்லையில் (அதாவது 2007 யூலை மாதம் முதல் 2008 மே மாதக்காலப்பகுதியில்) எமது ஊக்கத்தால் பாரிய திருப்பணி களையும் சமூக சமய செயல்திட்டங்களையும் செய்து அன்னையின் ஆலயத்தைப் புதுப் பொலிவுடன் அடியார்கள் மனம்களிக்க அமைத்துள்ளோம். இத்திருப்பணிகள் தொடர்ந்த நாட்கள் முதல் மேலும் பல பல சோதனைகளையும் அடியவர் மனத்தில் ஒரு சஞ்சலத்தையும் ஏற்படுத்தும் வகையில் குறை காண்போர் மனம் குழறிய படியே குழம்பி நிற்கின்றார்கள். இவர்களை அம்பாள் உரிய முறையில் ஆட்டி வைத்து இறுதியில் மண்டி இடவைப்பாள் என்பது திண்ணம்.

எது எப்படி இருந்த போதும் இக்காலப் பகுதியில் எம்மால் செய்யப் பெற்ற திருப்பணிகளை இங்கு ஓரளவாகிலும் குறிப்பிட வேண்டியதும் எமது கடமையாகும். இத்திருப்பணிகட்கு இயன்ற மட்டும் கோவிலில் இருந்த மூலப்பொருட்களைப் பாவித்து சிறு சிறு திருத்த வேலைகளாக கட்டுமானங்களில் நூற்றுக்கு மேற்பட்ட வேலைகள் செய்யப்பட்டன. பாரிய வேலைகளாக சுனாமிப் புயலால் பாதிப்புற்றிருந்த பிள்ளையார், முருகன் தேர், மஞ்சக் கொட்டகைகள் புனரமைப்பு,தேர் அர்ச்சனைப்படி ஏணிகள் ஐம்பது(50)வருடங்களுக்குப்ப பின் புனரமைப்புடன் வர்ணம் தீட்டப்பட்டன. இவற்றிற்கு எல்லாம் மேலாக கோவில் கிழக்கு, தெற்கு, கோபுரவாசல்கள் உட்பட மண்டபங்கள் யாவும் நவீன முறையில் பளிங்குக் கற்பதிப்பு வேலையும்,செப்பு,பித்தளை பாவனைப் பொருட்கள் புதிய மெருகூட்டல் முறையில் சுத்திகரிக்கப்பட்டும், அன்னையின் ஆலய உட்புறம் அலங்கார தோரணங்களுடன் அலங்கரிகப்பட்டிருப்பதும் ஒரு தனிச்சிறப்பாகும். நவீன முறையில் மின் கம்பங்கள் நிறுத்தப்பட்டு வீதியெங்கும் ஒளிப்பிரகாசமயமாய் இருப்பதும் ஒரு தனியழகாகும்.

2002ல் எம்மால் வேலைகள் ஆரம்பித்த அறிவாலயம், அரும் பொருள் காட்சி மண்டபம் சூழ் நிலையால் இடைநடுவில் தடைப்பட்டு மீண்டும் நவீன முறையில் புனரமைக்கப்பட்டு 06.02.2008ல் திறப்பு விழாவும் கண்டு சிறப்புடன் செயல்படுகின்றது. சுமார் 2000க்கு மேற்பட்ட பல்துறைசார் நூல்கள் இன்று இந்த ஆய்வக நூலகத்தில் பயனாளிகட்டு

உள்ளன. தொடர்ந்தும் அன்பர்கள் நூல்களை வழங்கி ஊக்கம் தந்து உதவுகின்றார்கள்.

50 வருடங்கட்கு முன் (1958ல்) அம்பாளின் தேர் பாதுகாப்பு மண்டபத்திற்கு போடப்பட்டிருந்த படல்கள் சேதமுற்றிருந்ததை யாவரும் அறிவர்.இப்படல்கள் புதிய முறையில் முற்றுமுழுதாக மாற்றப்பட்டு பொருத்தி இருப்பதை இன்று கண்டுகொள்ள முடியும். உயர் திருவிழாக் காலத்தில் கடமைக்கு வரும் காவல் துறையினர் தங்கியிருப்பதற்கும், விஷேடமாக கடமை காரணமாகவும் தரிசனத்திற்காகவும் வரும் பிரமுகர்கள் தங்கிச் செல்வதற்கு வசதியாக நீண்ட ஒரு மண்டபமும் இணைந்த ஆறு அறைகளும் கட்டி முடித்துள்ளோம் என்பதனையும் சுட்டிக்காட்டியே ஆன வேண்டும்.

சமய சமூகப்பணிகளை செய்கின்றீர்களா? என்ற கேள்வியை கேளாமல் கேட்டுக்கொண்டிருக்கும் பலருக்காக இந்த விடயங்களை சுட்டிக்காட்ட வேண்டிய சூழ்நிலையில் பின்வரும் விடயங்களைப் பட்டியல் படுத்தி உள்ளோம்.

1) மிக மிக மோசமான நிலையில் யுத்த சூழ்நிலையில் பாதிப்புற்றிந்த யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று முழுப்பகுதியையும் புனரமைத்து வர்ணம் தீட்டி கொடுத்தோம். இதனைப் பத்திரிகைகள் பாராட்டின. பண்புள்ளம் கொண்டவர்கள் தமது இதய பூர்வமான கருத்தை எழுதி ஊக்குவித்தார்கள்.

2) வருடம்தோறும் தீவக கல்வி வலய மாணவர் பண்ணிசைப் போட்டிக்கான பரிசில் தொகைகளை வழங்கி வருகின்றோம்.

3) திருநெல்வேலி சைவப்பராமரிப்பு சிறுவர் இல்லத்திற்கு நிதியும்/ புடவை உதவிகளையும் வழங்கி வந்தோம்.

4) கிளிநொச்சி யோகர்திருவடி முதியோர் இல்லம்/ நல்லை ஆதீனம்/ திருமலை சைவச்சிறார் இல்ல, வவுனிய அருளக சைவச்சிறார் இல்ல மாணவ மாணவியர்கட்கு உடுபுடவைகளை வழங்கி கௌரவித்தோம்.

5) மானிப்பாய் கண்பார்வையற்ற முதியோருக்கு விசேட தேவை உரியோருக்கு கண்பார்வைக்கான உபகரணங்களை கொள்வனவு செய்ய நிதி உதவி வழங்கினோம்.

6) ஊனமுற்ற பெண் ஒருவருக்கு மானிப்பாய் கிராம அலுவலரின் சிபார்சின் பேரில் சுயமுயற்றி ஊக்குவிப்புக்காக நிதி வழங்கினோம். இதனால் இந்தப் பயனாளி நலிவுற்ற தன் குடும்பத்தை வளப்படுத்தி வாழ்ந்து வருகின்றார்.

7) நயினாதீவில் கடமைபுரியும் வைத்தியருக்கு மாதாந்தம் ஊக்குவிப்புத் தொகையாக ரூபா 5000/- வழங்கிவருகின்றோம்.

8) நயினாதீவு மகாவித்தியாலயம் / நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளிலும் இசையாசிரியர் இல்லாத காலத்தில் தொண்டு அடிப்படையில் சேவை செய்த ஆசிரியர்கட்கு மாதம் தோறும் ரூபா 5000/- வழங்கிவந்தோம்.

9) நயினாதீவில் உள்ள சனசமூக நிலையங்களால் நடாத்தப்படும் சமய அறிவுப் போட்டிக்கு ஊக்குவிப்புத் தொகையாக அவ்வப்போது நிதி உதவி வழங்கி வருகின்றோம்.

10) நயினாதீவில் உள்ள அனைத்து முன்பள்ளி ஆசிரியர்கட்கும் மாதம் தோறும் வரையறுக்கப்பட்ட ஊதியத்தை வழங்கி ஊக்குவித்து வருகின்றோம்.

11) நயினாதீவில் உள்ள முன்பள்ளி பாடசாலை மாணவர்கட்கு அடிப்படை சுகாதார பற்பசை தூரிகைகளை வழங்கி ஆரம்ப சுகாதாரப் பழக்க வழக்கங்களை எப்படி குழந்தைகட்கு அறிவுறுத்துவது என்பதை பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் உதவியுடன் நடைமுறைப் படுத்திவைத்தோம்.

12) யாழ் குடாநாட்டில் உள்ள புற்று நோயாளர் சங்கத்தாரின் அனுசரணையுடன் அவர்களால் முன்வைக்கப்படும் தேவைகளை நோயாளர்களுக்கு வழங்கி வருகின்றோம்.

13) தீவக மாணவர்களின் இணைப்பாடவிதமான சேவைகட்காக அவ்வப்போது கோரிக்கை அடிப்படையில் நிதி உதவி வழங்கி வருகின்றோம

14) வேலணைப் பிரதேச செயலக கலாச்சார விடயங்கட்கும், மெய்வல்லுனர் செயற்பாடுகட்கும் நிதி உதவி வழங்குதல்.

15) 5ம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற விழாவில் மூன்று (03) மாணவர்களுக்கு புதிய மிதிவண்டிகளை வழங்கி வைத்தோம்.

16) அவ்வப்போது கோவில் வளாகத்தில் இடம் பெறும் பொது மக்கள் வைத்திய சேவைக்குரிய மருந்து வகைகளை கொடுத்து உதவுதல்.

17) எழுவைதீவு மக்களின் சேமநலன்கருதி கோவில் படகினை அவ்வப்போது வைத்தியரை அழைத்துச் செல்வதற்கு கட்டணம் எதுவும் இன்றி சேவையில் ஈடுபடுத்தி வந்தோம்.

18) மன்னார்,முல்லைத்தீவு, வவுனியா,கிளிநொச்சி மாவட்டங்களில் யுத்த சூழ்நிலையால் பாதிப்புற்ற முதியவர்,சிறுவர்,பெற்றோரை இழந்தவர்களுக்கான தேவைகளை அறிந்து வேண்டிய உதவிகளை பொருட்களாக வழங்கி உள்ளோம்.

"இத்தகைய சேவைகள் எதிர்காலத்திலும் தொடரும்.........."

# 108 அடி உயர கோபுரம்

அம்பாளின் கோபுர தரிசனம் இந்து மாகடலில் ஒளிபரப்பி நிற்கவேண்டும் என்ற எண்ணத்தால், கிழக்கு நுழை வாசலில் 108 அடி உயரத்தில் (9) ஒன்பது கலசகோபுரம் அமைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டு செயல் வடிவமும் ஆரம்பமாகி உள்ளது. பல அடியார்களின் வேண்டுதலும் இதுவேயாகும். இப்பெரும்பணி தொடர அன்னையின் திருவருளும், அடியார்களின் அறக்கொடையும் எமது பணிக்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் என்பது திண்ணம். இப்பணியை தொடர்ந்து முன்னெடுத்து செல்வதற்கு ஏற்பட்ட சில தடைகள் காரணமாக கொள்வனவு செய்யப்பட்ட கட்டுமானப்பொருட்கள் யாவும் பல வகையிலும் வீணடிக்கப்பட்ட நிலையில் இப்பணியை தொடர்வதற்கு மீண்டும் அம்பாளின் அனுக்கிரகம் கிடைத்துள்ளதென்பதையும் இப்பணி மீண்டும் தொடரும் என்பதையும் அம்பிகை அடியார்களுக்கு அறியத் தருவதோடு எமது பணி தொடரும் என்பதையும் வலியுறுத்தி கூறி இதற்கான அத்திவாரக்கல் நாட்டுவிழா சமயக் கிரியைகளுடன் 18-06-2008 அதிகாலையில் பூர்வாங்கமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதையும் அறியத்தருகின்றோம்.

## குறிப்பு

### பிராத்தனை நேத்திகள்

இங்கு பிரார்த்தனை அபிடேகங்கள், சாந்திகள் செய்வதாயின் முன்கூட்டியே பதிவு செய்யதல் வேண்டும். ஆகக்குறைந்தது ஒரு மாத கால இடைவேளியில் பதிவு செய்தால் தான் செய்யமுடியும். பதிவு செய்தவர்கள் உரிய தினத்திற்கு வரமுடியாத சூழ்நிலை ஏற்படும் போது ஒரு வாரத்திற்கு முன்பாக அறங்காவலர் சபைக்கு அறிவிக்க வேண்டும். சகல தொடர்புகளும் கௌர தலைவர் அல்லது செயலாளர், பொருளாளர் மூலமாக இருப்பது மிகவும் விரும்பத்தக்கது.

### குறிப்பு 11

ஸ்ரீ சக்கரபூசை மாதம் தோறும் பூரணையன்று நடைபெறுவது தனிச்சிறப்பு.

### குறிப்பு 111

விஷேட பிராத்தனைகள்

1) நாக தோஷ நிவத்தி
2) புத்திரபேற்று பிராத்தனை
3) திருமணதடங்கல் நீங்கப்பிராத்தனை
4) கிரக தோஷப்பிராத்தனை

குறிப்பு IV

63 மூவர் பூசை கார்த்திகை விளக்கீட்டன்றும் நால்வர் குரு பூசை உரிய மாதங்களிலும் நடைபெறும்.

# நயினை நாயகி புலவர் நாவினிலே

நீருக்குள் குளிர்ச்சியாகவும். அக்கினிக்குள் உஷ்ணமாகவும் நீக்கமற நிற்பவளே சக்தியானவள். காலம் கடந்து கருத்தினிற்கு எட்டாமல் இந்த ஞாலமெல்லாம் நிறைந்து நிற்கும் சக்தி இறைவனுடன் பின்னிப்பிணைந்து ஆன்ம மலம் நீக்கி தன் திருவருளால் ஆன்மாக்களை பேறடையச் செய்கின்றாள். இந்த வகையில் இறைவனாகவும், இறைவியாகவும் வேண்டுவார் மனதில் வேண்டும் வரம் நல்க அன்னை எழுந்தருளி உள்ள தலம் தான் அறுபத்தி நான்கு சக்தி பீடங்களில் ஒன்றாகிய, புவனேஸ்வரி பீடம் எனப்போற்றப்படும் நயினையம்பதி. இப்புண்ணிய தலத்தில் கைபுனைந்தியற்றா கவின் பெறுவடிவில் தோன்றி அருள்புரியும் அன்னை ஸ்ரீ நாகபூஷணியைப் பாடிப் பரவிய புலவர் பலர். அன்னையின் வல்லபம் பற்றியும், மகத்துவம் பற்றியும், தாய்மை பற்றியும் தளர்வுற்றபோது தாங்கும் தன்மை பற்றியும் இன்று நாடுற்ற நிலை கண்டு சாந்தி வேண்டித் துதித்தும், பாடப் பொற்ற பாவாணர் பாடல்களில் சிலவற்றைத் தொகுதித்து தரவேண்டும் என்ற கருத்தில் தந்துள்ளேன். ஆர்வலர் படித்து இன்புறுவதோடு அன்னையின் அருளையும் பெறுவார்களாக!

இங்கு என்னால் தரப்பெற்ற பாடல்களில் அட்டவதானம் வீராச்சாமிச் செட்டியார் பாடல் காலத்தால் முந்திய பாடலாகும் என்பது என் கருத்து. அடுத்துவரும் பாடல்களைப் பாடியவர்கள் குரு சிஷ்ய முறையில் அமைந்தவர்கள். ரமண மகரிஷியின் சீடர் வரிசையில் ஈழத்துச் சித்தர் நயினை முத்துக்குமாரசாமியாரும், இவர் தம் சீடர்களாக ஈழத்தில் ஓர் இல்லறஞானி என்று போற்றப்படும் திரு. க. இராமச்சந்திரனாரும், இவர் தம் சமகால நண்பரான நயினை நாகமணிப் புலவரும் பாடிய பாடல்களில் ஒவ்வொன்றை இந்த ஆக்கத்தில் தந்துள்ளேன்.

“அண்ட கோடிகள் எல்லாம் ஒரு தலையில்
நீ சுமந்து அருளுதலினால் அல்லவோ
அம்புயப் பிரமன் படைக்கத் தொடங்கினான்
அகிலமும் சிதைவுறாமல் புண்டரீக லோசனன்
பாதுகாக்கின்றனன் புராந்தகன் சங்கரித்துப்

புகழ் மருவுகின்றனன் இணங்கியே
நீ தயை புரியாதிருந்தயேனில் எண்டிசையும்
பரவு கடலும் கிரியும் எப்படி நிலைத்திடும்
எவ்விதத்தினில் அந்த மூவர் தொழில் ஈடேறும்
ஈசன் அரவிந்த பாதத் தொண்டர்கள் சூழ்
இலங்கை நயினாநகர் துதி செய்யும்படி அமர்ந்தோய்
சுரலோக லோகேந்திர நரலோக
புவனேந்திரர் தொழ வாழும் நாகேஸ்வரனே."

(நாகேஸ்வரியே)

இந்தப் பாடலை மட்டுமல்ல இதுபோல் இன்னும் பல பாடல்களை நயினை ஸ்ரீ (நாகேஸ்வரன்) நாகேஸ்வரி மேல் பாடியவர் தான் அட்டாவதானம் வீராசாமிச் செட்டியார் என்பவர். ஆனால் தற்போது எமக்குக் கிடைத்தள்ள பாடல் இதுவொன்று தான். இப்பாடல் 1861ன் முன்னர் பாடப்பட்டதாக இருக்கவேண்டும். நயினை அம்பாள் மேல் பாடப்பெற்ற பாடல்களில் காலத்தால் முந்திய பாடலாகவும் இருக்கலாம் என்று கூறலாம். ஏன் அப்படிக் கூறுகின்றேன் என்றால் இவரின் வாழ்க்கை வரலாற்றினையும், இவரோடு சமகாலத்தில் வாழ்ந்த புகழ்பூத்த பெருமக்களையும், அவர்தம் செயற்பாடுகளையும் அவர்களின் உயர்வுக்கு இவர் எப்படி உதவினார் என்பதனையும், கருத்தூன்றிப் படித்தால் தெரியும்.

இவரது இயற்பெயர் வீரராகவசாமி. இதுவே பின் வீராசாமி என்றாயிற்று. சென்னைத் துரைத்தனத்தார் கல்வி நிறுவனத்தில் பீற்றர் பேர் சிவல் பாதிரியார் கீழைத்தேய மொழிகளில் தலைசிறந்தவராக இருந்தபோது அவருடன் இணைந்து படிப்பித்தவர் வீராசாமிச் செட்டியார். மேலும் இவர் இவரது சமகாலப் பேரறிஞர்களில் தலை சிறந்தவராகவும் இருந்தார். நயினை நாகம்பாள் திருப்பணியிலும் இவர் ஈடுபட்டதாகவும் வரலாறுகள் உள்ளன.

"உவின் சுலோ" அகராதி வெளிவருவதற்கு பெரிதும் உதவியவர் இவர். அகராதிப் பணிமனையில் பெரிதும் உழைத்த பேரறிஞர்களில் இவரும் ஒருவர். "திருயாக்குப் புராணம்" பாடிய கனகசபைபிள்ளையும், இவருடன் பணிபுரிந்தவர்களில் ஒருவர். இவர்களின் காலத்தை ஒப்பிட்டு நோக்கும்போது 1860க்கு முன்பாகவே இருக்கும்.

வீராசாமிச் செட்டியார் ஓர் பழுத்த வைணவர். நரைத்தமுடி. குடுமியாக அதனைக் கட்டியிருப்பார். இத்தகைய ஒருவரை நயினை நாகபூஷணி எப்படித்தான் தன் பணிக்கு ஆளாக்கித் தன்னையே பாடும் பாடியாகப் பணித்தாள் என்பது சாதாரணமாக ஒவ்வொருவர் உள்ளத்திலும் எழும் ஒரு கேள்வியாகும்.

அடுத்து இவ்வன்னையின் மைந்தர்களின் ஒருவரான ஸ்ரீலஸ்ரீ

முத்துக்குமாரசுவாமிகள் பின்வரும் பாடல் மூலம் நன்மையெல்லாம் தரும் தாயின் தலத்திற்கு அழைத்துச் செல்கின்றார்.

"நாரணிசரசுபரி பூரணியுமாவுலக
காரணி மனோன் மணிகங்கபிராமி
வாமணி கலசமுலை மார்பணிபதக்கம் அராமாமணி
பிலாக்கு மூக்குத்தி மின
கண்ணுதல் திலகமுதல் விண்மணிகள் நாணுமுயர்
ஞானவடிவான விழியருளுரல்
தார் முலை சுரந் தொழுகு பாலென விளங்கி மதி
நேர்முக மிளமுறுவ லொளிகால
செந்துவர் வாய்யாழ் கிளிமொழிக் குரல் மௌன
நிலையாருமறியு மறி விலமையாது
தார்புரள் சதுர்த்திருத் தோள் ஓர்கரம் வரம் தரும்மற்
றோர்கர மஞ்சாதீ ரென்றுலகாளும்
காவிகள் தொறும் கரும்பு மாபாலக் கதலி நறும்
பூவினைத் தேனுண்டு கரும்பிசை பாடும்
காவியொடு செங்கழுநீர் வாவிகளில் நீர்பெருகி
கால்வழி சென்றூர் வயல் நெல்விளைவாகும்
கங்கைக் கரையெங்கும் நுரை பொங்கு நயினாநகரில்
தங்கு புவனேஸ்வரி நம் தாயான
சாம்பவி சுமங்கலை பரகிருபானந்தயிரு
தாள் தொழத் தரும் பரமானந்தத்தானே.".

நயினாதீவுச் சாமியார் என்று அழைக்கப்படும் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார சுவாமிகள் 1915 வரையும் ஆறுமுகம் முத்துச்சாமி என்று தான் இருந்தார். தன் தமையனாராகிய ஆறுமுகம் முருகேசுவுடன் கொழும்பில் பொரளையில் ஒரு சுருட்டுக் கடை வைத்திருந்த முத்துச்சாமியை துறவுபூண வைத்தது எது என்று அவரது தமையனர் பின்வருமாறு எனக்கு 1968இல் கூறினார். "மகனே 1915இல் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறத்திலும் ஏற்பட்ட இனக்கலவரத்தால் நாங்கள் தங்கியிருந்த பெரும்பான்மை இனத்துப் பெண் பிள்ளைகளை கூரிய வாள் கொண்டு வெட்டிக் கொலை செய்த காட்சியைக் கண்டு துடிதுடித்த என் தம்பி துறவியானார். கண்டும் செயலற்று நின்ற நான் இன்று கண்பார்வையற்ற குருடன் ஆனேன் என்றார்." ஆம் இந்த முத்துச்சாமி தான் இன்று நயினைச் சாமியார் என்று மட்டுமல்ல, ஈழத்துச் சித்தர்களில் ஒருவராகவும் போற்றி வழிபடப்படுகிறார். இவரை சிவலிங்கப் புளியடிச் சாமியார் என்றும் யாழ் மக்கள் சிறப்பித்துக் கூறுவர். இவரது அருட்பார்வைக்கு ஆட்பட்டோர் இன்று பல வழிகளாலும் பேரும், புகழும் சேவை உணர்வும், குருபக்தியும் கொண்டவர்களாகச் சிறப்புடன் வாழ்கின்றார்கள். ரமண மகரிஷியின் அருள்நோக்கால் ஆட்பட்ட நயினைச் சுவாமிகள் அன்னை ஸ்ரீ

நாகபூஷணி மேல் அபாரபக்தி கொண்டவர். நயினாதீவுக்கு வரும் போதெல்லாம் ஆலய வடக்கு வீதியில் உள்ள மடத்தில் (தற்போது தியான மண்டபமாக அமைந்துள்ளது) தங்கியிருந்து அருளாசி கூறுவார். செம்மணத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் பலநாள் தங்கியிருந்து பலவிதமான சிந்துகளையும், அருள் உரைகளையும் வழங்கிய இவர் நயினையில் உள்ள தலங்களின் மகத்துவத்தினைச் சிறப்பாகப் பாடியுள்ளார். இந்த வகையில் (64) அறுபத்திநான்கு சக்தி பீடங்களில் புவனேஸ்வரி பீடமாகத் திகழும் நயினை நாகேஸ்வரியை புவனேஸ்வரியாகப் பாடிய பாடல் தான் ஆர்வலர் சுவைக்குத் தரப்பட்டுள்ளது. (இவரது காலம் 1897-1949) அடுத்து இவரின் ஆன்மார்த்த சீடர் நயினை தந்த இல்லற ஞானி க. இராமச்சந்திரனார். இன்றையச காலகட்டத்தில் நாம் அனைவரும் வேண்டுதலாக வேண்ட வேண்டிய பாடல் ஒன்றை நமக்குத் தந்துள்ளார்.

"எனக்கென்றோர் தனிவரம் யான் கேட்கவில்லை
என் இனத்தார் வாழ்வொன்றே கருதவில்லை
உனக் கெல்லா உயிர்களுமே சொந்தமென்ற
உண்மையை நான் ஒருபோதும் மறந்ததில்லை
சினங்கொண்டு தீங்கிழைக்குந் தீயர் தாமும்
சீலமுற வேண்டுமென்றே வேண்டுகின்றேன்.
தனக்கொருவரொப் பில்லாத் தாயே! இந்தத்
தரணியில் சாந்தியையே தருவாய் நீயே."

ஈழத்தில் ஓர் இல்லற ஞானி என்று போற்றப்பட்டவரும் ஆத்மஜோதி என்ற ஞானவெளியீட்டை வெளியிட மூலகாரணமாக இருந்து வழிப்படுத்தியவருமான ஞானியர் திரு. க. இராமச்சந்திரனார் நயினை ஈன்ற தவப்புதல்வர்களில் ஒரு தனிப்புதல்வர். "பிறக்கவும் பிறந்த பின் வழிபடவும் பின் இறக்கவும் பேறு பெற்ற தலம் ஒன்று உண்டென்னில் அது உலக மாதாவாகிய அன்னை ஸ்ரீ நாகபூஷணியாள் எழுந்தருளியுள்ள திவ்விய தலமாகிய திருநயினை ஊரே" என்று தனது நாட்குறிப்பில் பதித்து வைத்திருந்தார். பெற்ற தவப்பயனால் பேரும் புகழும் சிறக்க தானும் வாழ்ந்து தன் வழித்தோன்றல்களையும் வாழ வழி சமைத்த இப் பெரியார் கொழும்பில் "தலங்கமை" என்ற இடத்தில் வாழ்ந்து வரும்போது 1958 வன் முறைக்கும்பலால் பெரிதும் பாதிப்புற்றபோது இருந்த இல்லத்தை மட்டுமல்ல, தான் இருந்த ஆசனத்தை விட்டுத் தானும் எழும்பாமல் இருந்தார். தன்னை அடக்கித் தியானித்ததில் ஆழ்ந்தார். நாமஸ் மனனம் (இறைவி நாமத்தை) செபித்தார். நயினை நாயகியை தன் நெஞ்சில் நிறுத்தி நினைத்து, நினைத்து கண்ணீர் விட்டுத் தோத்திரம் செய்தார். தனது பூசை அறையிலிருந்து அன்னையை வேண்டிப் பகைவர்க்கருள்வாய் தாயே என்று பாடினார். வாளேந்தி வந்தவர்கள் அவர் தாள் வீழ்ந்தார்கள். வன்முறைக் கும்பலைத் தண்டிக்க வந்த அரச படையினரைத் தடுத்தார். ஏதும் அறியாதவர்கள் இவர்கள். எய்தவன்

இருக்க அம்பை நோகலாமா? என்று கேள்வி எழும்பினார். ஆம் அன்று ஐயா நயினைத் தாயிடம் எதனை வேண்டினார் எப்படி வேண்டினார். இப்பாடலில் அவர் வேண்டிய வேண்டுதல் இன்றுவரையும் இன்னும் பூரணமாக வில்லை வெகு விரைவில் வேண்டுதல் பூரணமாகும். இதுவே நாமும் வேண்டுவது. அடுத்து வருவது அவர் தம் ஆத்ம நண்பர் நயினை நாகமணிப் புலவர் பாடல்.

"பெற்றதா லன்னை பெறுமுயி ரனைத்தும்
பேணலா லன்னை பெற்றிட வோ
உற்றதா லன்னை விரும்பிய அனைத்தும்
உதவலா லன்னை எக்கலையும்
சொற்றதா லன்னை உலகொடு வானுந்
தொழுதலா லன்னை என்றென்றும்
புற்றதாங் கருணை பொழிதலா லன்னை
பராபரை நாக பூஷணியால்"

நயினை தந்த ஒரு கவிச் செல்வர் ஸ்ரீலஸ்ரீ நாகபூஷணிப் புலவர். இருந்தால் பாட்டு, எழுந்தால் பாட்டு, நடந்தால் பாட்டு, கிடந்தால் பாட்டு என்று இவரிடம் பாட்டுப் பட்டபாடு சொல்லுந்தரமன்று. அந்த அளவுக்கு பல பாடல்களை இவர் பாடி இருந்த போதும், அவையாவும் முறையாக படியெடுத்து வைக்கப்படப்படவில்லை. அதனால் அரிய பல பாடல்கள் கிடைக்காமல் போய்விட்டன. ஒரு தாயானவள் எப்படி எப்படியெல்லாம் தாயாகி தான் பெற்ற பிள்ளைகளை வளர்த்து எடுத்து ஆளாக்கி வையத்துள் வாழ வைக்கின்றாள் என்பதனை நாம் கண்ணால் காண்கின்றோம். இந்தப் பிரபஞ்சத்தையே படைத்து எண்பத்து நான்கு நூறாயிரம் கோடி யோனி பேதங்களையும் தன் பிள்ளைகளாகக் கண்டு அருள்புரியும் உலக மாதாவாகிய ஸ்ரீ நாகபூஷணியின் தன்மை எப்படி எப்படியெல்லாம் இருக்கின்றது என்பதே இந்தப் பாடலாகும். இதுபோன்ற ஒரு சில பாடல்கள் தான் அவர் பாடிய பாடல்களில் இப்போது கைவசம் உள்ளன. இவர் பாடிய "வழி நடைச்சிந்து" பாடல் படிக்கப் படிக்க இனிக்கும். நயினைத்தீவில் இருந்து காரைநகர் வந்து யாழ்ப்பாணம் வரும் வரையும் காணும் காட்சிகளைக் கவிநயம் சொட்டச் சொட்டப் பாடியுள்ளார். மேலும் "நயினை மான்மியம்" என்ற ஒரு பாடல் தொகுதியையும் இவர் பாடி இருந்தார். ஆனால் தற்போது முழுப் பாடல்களும் கிடைக்கவில்லை. ஒரு சில பாடல்கள் தான் உள்ளன.

புராணங்கட்கு பண்ணோடு பொருள் சொல்ல வல்லவர் வாழ்ந்த மண் நயினையம் பதி சமகாலத்தில் அதாவது இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன் சகல புராணங்கட்கும் பொருள் சொல்வதில் ஆற்றல் மிக்க பௌராணிகர் சுமார் பத்துப்பேருக்குமேல் இருந்தார்கள். இவர்களை விட புராணங்களை பொருள் பிரித்துப் பாடவல்லார் பலர் இருந்தார்கள் இவர்களின் மிகவும் சிறப்பு மிக்கவர் எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பட்ட குட்டிப் பிள்ளையார் என்று அழைக்கப்படும்

தியாகராசா். இராமச்சந்திரா் இவா் சிறந்த கல்விமான், கவிஞா், ஜோதிடா் வல்லாா், இவரிடம் புராணங்களைக் கற்று பிரபல்யமானவா் யாழ் குடாநாட்டில் பலா் இருந்தாா்கள் அத்தகைய பெரியாா்களை நேரடியாக கண்டு உறவாடவும் அவா்களுடன் இணைந்து கொழும்பில்

1963ல் புராணப் படலம் செய்யும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. இது என் மூதாதையாரை கற்றவா் வாய் மூலம் அறிந்து கொள்ளவும் கிடைத்த ஒரு பேறாகக் கொண்டேன். தியாகராசா் இராமச்சந்திரா் அம்பாள் மேல் பல பாடல்களைப் பாடியுள்ளாா். இவற்றுள் அம்பாளின் திருவருட் திறனும் தொன்மையும், சான்றும் எவ்வாறு இவா் நாவினில் பாவாக மிளிா்கின்றது என்பதைப் பாா்ப்போம்.

மன்னுசீா் இலங்காபுரியிலம்பிகை நின்
மாபெரும் புகழினுக் கிலக்காய்
இன்னல் மேவிய நல்லரவு சுற்றிய கல்
இருஞ்சிறைக் கருடன் மேவிய கல்
இன்னபாஷைய தென்று அறிவுரு எழுத்தால்
இலங்கு கற்சாதனம் இரண்டு
தன்னை நேரிலா நின் உருபெறும் ஐந்தும்
சாட்சியாம் நாகபூஷணியே.

## நயினாதீவு
## நாகேஸ்வரியம்மை பதிகம்

சந்திரபூ ரணரத்ன தங்ககோ டக்கிரிட
தண்ணின்ற தவழ வட்டத்
தனபதியை நிகா்மன்ன ரடிதொழச் சதுரங்க
தானைவெள் ளங்கள் சூழச்
சிந்துரப் பகைமைபிடா் பீடிகை யிருந்தெண்டி
சாமுகமு மேயி றைஞ்சத்
தேவேந்திர சுகமுற் றிருப்பவா்க ளுன்பாத
சேவைபுரி பகவா்க ளன்றோ
மந்திர காரண ரூபரு பாதிசிவ
மகமாயி புவன நேசி
வாலசுந் தரி கெளரி நயினைமா நகா்க்கண்
வைகியரன் செய்யும் மொருதாய்
நந்துறு கரன்பிரம ணங்கமணி கங்களொடு
நஞ்சணி பிறங்கு களமே
நாகமணி யும்பரமா் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

சோடுற்ற நவரத்தின கும்பியும் மேலிட்ட
தொங்கலும் அகில ளாவிச்
சொருகிட்ட கொண்டையுஞ் சுட்டியும் மலர்கையால்
தொட்டிட்ட சிந்தூரமும்
தோடுற்ற கொந்தழக மரகதக் கொப்புமார்
துணைவிழியி லெழுது மையும்
துகளற்ற வெண்டரள முருகுநற் பவளவாய்த்
துவருமொளிர் நளின முகமும்
தேடுற்ற செங்கமல பொற்பதமும் மழகான
திருவுருவு மறிவி னாலே
தெரிசிக்க வருடந்து நீடாயு ளும்பெருஞ்
செல்வ முந்தர வேண்டுநீ
நாடுற்ற பாலவளமும் முறையுமெழில் நயினா
நகர்கண் மருவுங் கௌரியே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே

ஆரணத் துபநிடத வக்கரத் தொனியாகி
யாககாய வட்ட மாகி
அறுகோண மிருகோண முக்கோண நாற்கோண
மாகிநிற மைத்து மாகி
காரணத் துருவாகி யருவாகி யாவுமாய்க்
காக்கு முன் பெருமை யெளிதோ
கருணைப்பிர வாகமா மானந்த வெள்ளங்
கசிந்தூறுபே ராழியே
ஏரணைத் திடுமருத வேலிசூழ் நயினா
வெனும்பதி சிறந்து மேவும்
யாமள சௌந்தரீ கோமள சொரூபியே
ராசபர மேசு வரியே
நாரணற்கொரு சகோதரி யென்ன வந்தருளும்
நாக பூஷணீ நாரணீஇ
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

சத்திபை ரவிகௌரி அக்கணியு முக்கணீ
சடாதரி சடாட்ச ரத்தி
சங்கரி சுமங்கலி மதங்கியரு ளம்பிகை
சவுந்தரி சண்ட சண்டி
உத்தமி பராபரை மனோன்மணி சிவானந்தி
யுமையிமைய முதவு மங்கை
உலகுதவு மன்னையா மளைபொன்னியம்பலவவே

ருடனிட மகிழ்ந்து மேவும்
நித்தியகல் யாணிசாம் பவி கௌமாரி
நிமலை மகமாயியென்றே
நெஞ்சில்நித முந்நினைவு தத்துனை வணங்கவரு
நின்னடி யவர்க கருளுவாய்
நத்துலவு சுத்தமணி யெய்துநயி னாநகரில்
நாளுமுறை யாழின் மொழியே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

ஆகமது கூனித் தளர்ந்துரோ மம்வெளுத்
தைம்புல னொடுங்கி மேலாம்
அறவழிந் தைமே லெழுந்ததீ தத்தினுயி
ரணுகுமக் காலை தனிலே
வேகவெங் கடமைபிடர் நெளியவரு ஞமனெற்கு
விடுகயிறு முடுகி யடுமுன்
வினையேனை யஞ்சலென் றுனுதுநா யகருடன்
வெள்ளை விடைமீ தேறியே
பாகமுறு வந்துநின் றடிமைகொண் டெனையும்நீ
பாதுகாத் தருள வேண்டும்
பைங்குலைத் தெங்கிளஞ் சோலைசெறி நயினைநகர்
பண்பு கொண்டுறை செல்வியே
நாகமடர் தாருவென மேவிமுனி வோர்களுறை
நாடிவரு கோப விடமார்
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

மாற்றிற் சிறந்தபொற் குவையென்ன வளர்சாலி
வயலிற் கிடந்த நத்தம்
மடையிற் றவழ்ந்தேறி மனையிற் புகுந்துழவர்
மனைமுன்றி லீனு முத்தை
ஆற்றிற் சிறந்திடத் தண்டுலங் களையுநீர்
அள்ளிப் புறத்தின் மேவி
அருகுற்ற சோலையினு மிகுதுற்ற வாவியினு
மரவிந்த வோடைக ளினும்
காற்றிற் சிறந்துலவு கால்கொண் டுலாவக்
கயற்கண்ணி வந்து மோதக்
கமுகினிற் றெங்கினிற் கதலியில் வருக்கையிற்
கனியு மடலுஞ் சிதறியே
நாற்றிற்கு மேகமழு மதுமாரி சொரியுநயி
னாநகரி னண்ணு முமையே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ

நாக ஈஸ்வரி யம்மையே.

வன்கய மருப்பென நிமிர்ந்தடி பருத்திறுகி
மணிவா ரறுத்து விம்மி
வட்டமிட் டெழுகும்ப முலைமுகங் காட்டியிரு
மகரவிழி விலை வீசியே
மின்கய மதப்போரில் உள்ள முதுளைத்துள
வெறுக்கையைப் பற்றி யேற்கும்
வேசியர் தனக்கடிமை செய்விக்கும் மென்னைமுன்
வினைநூறி யருளு தவுவாய்
பொங்கிடு நெடுந்திரைப் புணரிநாற் றிசையும்
பொருந்தநடு மேவி யுலகிற்
புகழ்பெருகு நயினைமா நகரினி லிருந்துமிகு
புதுமைதரு புனித தாயே
நன்கிய விளம்பிறையொ டொன்றைவேண் டிச்சடில
நண்புகொண் டிடுநஞ் சுமார்
நாகமணி யும்பரமர் பாகுமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

சம்புசிவ சங்கர திகம்பர நடம்புரி
சமர்த்தாதி யாதி யாய
தற்பர மதிச்சடில முக்குண சதுர்ப்புய
சதாசிவ சிவா சிவாய
எம்பரம வென்றுபதி னெண்கணமு மிம்பரு
மிறைஞ்சிவரு கணவ ருடனே
இங்கித முடன்கயிலை தங்கியுறை யம்பிகையி
னின்புக ழியம்ப வெளிதோ
அம்புய மடந்தைய ரரம்பையர் வயந்தழுவு
மரியநவ சக்தி களெலா
மன்பினொடு தொண்டுசெயு முந்தனர விந்தபத
மந்தநிழல் தந்த ருளுவாய்
நம்பிவரு தொண்டர்பெற மங்கல மிகுந்தநயி
னாநகரி னண்ணு முமையே
நாகமணி யும்பரமர் பாகுமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

கந்தான சொசியச் சினக்கும் கடாதடக்
கைமலை முகத் தவுணனைக்
கால் கொண் டுதைத்துவன் றோலுரித் துப்போர்த்த
காதலனை மன் றாடியே
முந்தாத ரத்தினொடு மிருநாழி நெற்பெற்று
முடிவிலா துயிர்க் ளுய்ய
முப்பத் திரண்டறந் தன்னையுந் வியவன்னை
மூவுலகு நீயா கையால்
சிந்தா குலங்கொண்டு நாள் முறையோ

தினந்தினம் சொல் வேண்டுமோ
திருவுள மிரங்கியே சற்றுன் கடைக்கண்
திருப்பினால் வெகு பாரமோ
நந்தாத வரமுதவு நங்கையே நயினா
நகர்க்கண் மருவும் கௌரியே
நாகமணி யும்பரமர் பாகுமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

சீர்தங்கு தண்சுனை யெனச் சேர் மனத்திற்
றிளைத்துக் குழைத் தரும்பும்
செஞ்சரண கஞ்சமலர் தஞ்சமெனும் மென்புன்
சிரக்கஞ்ச மீதில் வைத்தே
ஏர்தங்கு நல்லருட் பேறுதவி நெஞ்சத்
திடுக்கண் தவிர்த்து அஞ்சேல்
என்றுமுன் நின்றெமக் கீடேற்ற முதவுவார்
யாருன்னை யின்றி யம்மா
பேர்தங்கு மகிலாண்ட டுக்குமதி லூறிபொருட்
பிரிவுஞ் சராசர மெனும்
பேருயிர்க ளுந்தந்து பாதுகாத் தருளுமுன்
பெருமையாம் பாட வெளிதோ
நார்தங்கு சற்குணத் தொண்டருள வென்றுநயி
னாநகரி னண்ணு முமையே
நாகமணி யும்பரமர் பாகுமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

கணபதி துணை

## நயினை ஊஞ்சல்

### காப்பு

சீர்பூத்த தென்னிலங்கை தன்னில் மேவும்
திரைபூத்த கடனயினை நகரில் வாழும்
ஏர்பூத்த நாகேசு வரியைப் போற்றி
இசைபூத்த செந்தமிழா லூஞ்சல் பாட
ஆர்பூத்த சடைமௌலி யரனா ரீன்ற
அருள்பூத்த வறிவிச்சை தொழிலென் றோதும்
கார்பூத்த மும்மைமத களிற்றின் பாதம்
கரம்பூத்த மலர்கொண்டே கருதி வாழ்வாம்.

பலனோங்கு செம்பவளங் கால்க ளாக
பகர்வைர ரத்தினமே விட்ட மாக
குலனோங்கு வெண்டரளங் கயிற தாக
கூறரிய மாணிக்கம் பலகை யாக
வலனோங்கு மூஞ்சன்மின் யினிது வைகி
மலர்மகளுங் கலைமகளும் வடந்தொட் டாட்ட
நானோங்கு திருநயினை நகரில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல்.

உவகையோடு மலரயன்மால் கரங்கள் கூப்ப
ஓசைமணி வாயிலட்ட பாலர் காப்ப
தவமறையோர் தூபமொடு தீபங் காட்ட
தாழ்ந்துகண நாதர்புகழ் மாலை சூட்ட
அவிரிடப துவசமகல் வாணந் தூர்ப்ப
அனந்தன்முத லுரகர்செய் செயவென் றார்ப்ப
நவையறுசீர் நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல்.

கொம்பினொடு துடிமுரசு முழவ மோங்க
குடைகளுட னாலவட்டம் குழுமி யோங்க
தும்புருநா ரதர்வேத கீதம் பாட
தொண்டரக மகிழ்ந்துசுக வாழ்வு கூட
வம்பவிழு மலர்மாரி யமரர் பெய்ய
வரமுனிவ ரடிபரவி யாசி செய்ய
நம்புமடி யவர்க்கருளி நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல்.

அன்னநடை யயிராணி கவிதை தாங்க
அயிலைநிகர் விழியரம்பை களாசி யேந்த
வன்னமுலை யுருவசிவெண் கவரி வீச
மணிகொள்கிரு தாசிகமண் டலங்கைக்கொள்ள
மின்னிடைமே னகைவெள்ளிலை பாகு நல்க
வியந்துதிலோத் தமைவிகித நடனஞ் செய்ய
நன்னயஞ்சேர் நயினைசேர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல்.

மதிமுகமா லினிபனிநீர் வாசந் தூவ
மயிலைநிகர் சுகேசைமல ரடிக ணீவ
விதிமுறைமங் கிலைமுதலோ ராலஞ் சுற்ற
வேதியர்தம் மகளிர்சுப வசனஞ் சாற்ற
அதிவிநய மொடுசுமனை யாடி காட்ட
அன்பினநிந் திதைசுகந்த வருக்க நீட்ட
நதியுலவு நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல்.

கோலமுறு வைரமணிச் சுட்டி யாட
குலவுமெழின் மாணிக்கத் தோடு மாட
வாலியமுத் தாரமொடு மதாணி யாட
வயங்குவளை தொடியுடனங் கதமு மாட
சாலவொளிர் பாடகமுஞ் சிலம்பு மாட
தண்டையொடு பாதசரந் தயங்கி யாட
ஞாலமுக மெனவிளங்கு நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல்.

முந்துதவ மாதர்துதி கூறி பாட
முகமனொடு புனன்மாதர் முன்னின் றாட
வந்தனையோ டுரகமட மாத ராட
வரையிலுறை மாதரடி வணங்கி யாட
கந்தருவ மாதரிசை பாடி யாட
கருதரிய புவிமாதர் களிகொண்டாட

நந்துதவழ் கழனிசெறி நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ருஞ்சல்.

ஆரணியே யம்பிகையே பாடீ ருஞ்சல்
அந்தரியே சௌந்தரியே யாடீ ருஞ்சல்
பூரணியே புங்கவியே யாடீ ருஞ்சல்
புராதனியே புராந்தகியே யாடீ ருஞ்சல்
காரணியே காருணியே யாடீ ருஞ்சல்
கன்னிகையே கண்மணியே யாடீ ருஞ்சல்
நாரணியே நாயகியே யாடீ ருஞ்சல்
நாகபர மேஸ்வரியே யாடீ ருஞ்சல்.

பனிவரையில் வருமுமையே பரையே போற்றி
பகருமற மெண்ணான்கும் வளர்த்தாய் போற்றி
தனிமுதலாம் பரமனிடத் தவளே போற்றி
தணப்பில் பல சக்திவடி வானாய் போற்றி
இனிமைமிகு மாரமுதே கனியே போற்றி
எவ்வுயிர்க்குத் தாயாகி இருந்தாய் போற்றி
நனிகுலவு நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ருஞ்சல்.

ஆவாழி ந்தணரோ டரசர் வாழி
அரியதவ மகநிகமா கமமும் வாழி
தாவில்குல மங்கையர்கள் கற்பும் வாழி
சைவமும் நல அறமும் தழைத்து வாழி
பரவுவார்வெண் ணீறுபஞ்சாட் சரமும் வாழி
பாடியவூஞ் சற்றமிழும் பாரில் வாழி
நாவலர்கள் புகழ்நயினை நகரும் வாழி
நாகபர மேஸ்வரியே யாடீ ருஞ்சல்.

சீர்வாழி சிவ சமயம் வாழி
தேவாதி தேவுமெல்லாத் தேவும் வாழி
பார்வாழி மதிதொறுமும் மாரி வாழி
பசுக்குலம்வே தியர்தருமம் பலவும் வாழி
நீர்வாழி நயினைநக ருறைவோர் வாழி
நீடாயு ளன்னசொர்ணம் நிறைந்து வாழி
ஏர்வாழ் இராமசந்திர மகிபன் வாழி
இனம்வாழி இவ்வூஞ்சல் வாழி மாதோ.

ஸ்ரீலஸ்ரீ-அராலியூர் ம.அமரசிங்கப்புலவர்



நயினாதீவு

# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நித்திய அன்னதானம் பற்றிய விசேட அறிவித்தல்

அம்பிகை அடியார்களே!

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைத் தரிசிப்பதற்கு வரும் அடியார்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. திருவருளைப் பருகிச் செல்லும் அடியார்களின் பசிப்பிணியைப் போக்கவென ஆலய வடக்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள யாத்திரீகர் தங்கும் விடுதியில் நித்திய அன்னதானம் அம்பிகையின் அருளாசியுடன் சிறப்புற நடைபெற்று வருகின்றது. 1998 இல் நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து நித்திய அன்னதானம் அடியார்களின் பேராதரவுடன் குறைவின்றி சுமார் 5 வருடங்களாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. மகோற்சவ காலம் (16 நாள்) தவிர ஏனைய நாட்களில் இத்திருப்பணி நித்திய அடியார்பணியாக நிறைவேற்றப்படுகின்றது. தினந்தோறும் ஆயிரக்கணக்கான அடியார் களுக்கு அமுது படைக்கும் அன்னையின் திருவருள்தான் என்னே!

நீங்களும் இத்திருப்பணியில் இணைந்து அடியார்களுக்கு அமுது படைக்கும் அருட்பணியில் பங்கு பற்றுங்கள். ஒரு முறை மட்டும் ஐயாயிரம் (5000/=) ரூபா செலுத்தினால் போதும் உங்களின் பெயரால் ஆண்டு தோறும் குறிப்பிட்ட திகதியில் நித்திய அன்னதானம் வழங்கப்படும். பணத்தை ஆலய மேற்கு வீதியில் அமைந்துள்ள அலுவலகத்திலோ அல்லது யாழ் வர்த்தக வங்கியின் 10600 12330 கணக்கு இலக்கத்திலோ அல்லது புறக்கோட்டை வர்த்தக வங்கியின் 01-2426285-01 கணக்கு இலக்கத்திலோ வைப்பிலிடலாம். பொருளாளர் அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு என்ற முகவரிக்கு காசு கட்டளையாகவோ அல்லது காசோலையாகவோ வரைய முடியும். இத்திட்டத்தின் கீழ் இணைந்து அன்னையின் அருளாசியினை பெற்றுக் கொள்ள வேண்டுகின்றோம். வேறுதனி நபர்களுக்கோ,நிறுவனங் களுக்கோ நித்திய அன்னதானம் தொடர்பாக நிதி வசூலிக்க அனுமதி அளிக்கப்படவில்லை என்பதை அறியத்தருகின்றோம்.

அடியார்கள் மேலும் விபரங்களை இல.72 பெரியகடை மேற்கு,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நயினாதீவு,ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் தொடர்பகத்தில் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி:-071-347587

குழந்தைகளுக்குப் பாலூட்டும் தாயின்
தசையை வெட்டித்தின்பீர்களா?
உங்களுக்குப் பால் தரும்
என் தசையை நீங்கள் தின்னலாமா?



எங்களை வெட்டித்தின்றால்
ஒருநாள் மட்டுமே ஒருசிலருக்கு உணவு கிடைக்கும்.
நாங்கள் உயிர் வாழ்வதால்
வாழ்நாள் முழுவதும் பால் உணவு தருவோம்.
எங்களைக் கொல்லாதீர்கள்

**எம் பசுப்பால் குடித்து வளராதவர்கள் யாரும் உண்டா மனிதர்களே
உங்களுக்காகவே எங்களையும் வாழவிடுங்கள்**

இவ் வெளியீட்டின் மூலம் கிடைக்கப் பெறும் வெளியீட்டு நிதியம் அம்பாளின்
பெயரால் இந்து சமய அறநிலையங்களுக்கும், ஆதரவற்ற சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கும்,
ஊனமுற்றோர் பராமரிப்பு நிலையங்களுக்கும் வழங்கப்படும்
என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

விவேகானந்தா அச்சகம்